

நான்கு பந்தில் 4 இலக்குகள்

பக்கம் 21

# உதயன்

சுடர்: 29 கதிர்: 198 வள்ளுவர் ஆண்டு: 2045 வைகாசி 29, வியாழன் 12.06.2014

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

24 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=


28°C

தெளிவான வானிலை

நாட்டின் பெரும்பான்மையான கடற்கரைப் பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிக்கக் கூடும்.

# இராணுவ பிரசன்னத்தால் வடக்குப் பெண்கள் அச்சம்

## சுட்டிக்காட்டுகின்றது ஐக்கிய நாடுகள் சபை

கொழும்பு, ஜுன் 12

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தின் பிரசன்னம் அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக அங்குள்ள பெண்கள் பாதுகாப்பற்ற தன்மையை உணருகின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த, இலங்கைக்கான ஐ.நாவின் சனத்தொகை நிதியப் பிரதிநிதி அலெய்னே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 40 சதவீதமான பெண்கள், போர் முடிந்து, தற்போதைய சூழலிலும் பாதுகாப்பின்மையை உணர்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார் அலெய்ன்.

20 ஆம் பக்கம் பார்க்க

## ஜெயலலிதாவுக்கு மாகாண சபையில் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 12

ஈழத் தமிழர் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காணுவதில் உறுதியான நிலைப்பாட்டைப் பேணும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு, வடக்கு மாகாண சபையில் நேற்று நன்றி தெரிவிக்கப்பட்டது. வடக்கு

20 ஆம் பக்கம் பார்க்க

## உண்மையை கண்டறிய ஒத்துழைக்க வேண்டும்

### இலங்கை அரசிடம் கோருகின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 12

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் மேற்கொள்ளப்படவிருக்கும் விசாரணைகள் மூலம், உண்மைகளைக் கண்டறிவதற்கு இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகவும், தமிழ் மக்களின் சார்பாகவும் இந்தக் கோரிக்கையை அரசிடம் முன்வைக்கின்றோம். - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் துறைசார் நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை,

20 ஆம் பக்கம் பார்க்க



இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இருநாடுகளுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் விதமாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்வின் பணிப்புக்கமைய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

விரிவான தகவல் 07 ஆம் பக்கத்தில்

## உரிய அனுமதி பெற்றே வேள்வி நடத்தலாம்



யாழ்ப்பாணம், ஜுன் 12

கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ள வேள்வி, தகுதி வாய்ந்த அதிகார சபையிடம் அனுமதி பெற்று நடத்த வேண்டும். சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்படின் பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும் - இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளது மல்லாகம் நீதிமன்றம்.

தெல்லிப்பழையிலுள்ள கவுணாவத்தை ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை வேள்வி இடம்பெறவுள்ள நிலையில்

20 ஆம் பக்கம் பார்க்க

## நியதிச் சட்டங்களை இன்னமும் ஆராயவில்லையாம் ஆளுநர்

### இருவார கால அவகாசம் கொடுத்தது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், ஜுன் 12

நியதிச் சட்டங்களை ஆராய்ந்து அனுமதி வழங்குவதற்குத் தமக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்படவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியதை அடுத்து, அவருக்கு மேலும் இருவார கால அவகாசம் வழங்கியது வடக்கு மாகாண சபை. அதனால் நிய

20 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு பொலிஸ் படைக்கான நியதிச்சட்டம் வெகு விரைவில்

### சிவாஜிலிங்கம் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜுன் 12

வடக்கு மாகாணத்துக்கான பொலிஸ் படையை நிறுவுவதற்குரிய நியதிச் சட்டத்தை நாம் விரைவில் உருவாக்குவோம் - என்று தெரிவித்துள்ளார் ஆளுங்கட்சிமாகாண சபை உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம்.



வடக்கு மாகாண நியதிச் சட்டங்கள் குறித்து ஆராய்ந்து அனுமதி வழங்குவதற்கு வடக்கு மாகாண ஆளுநருக்கு நேற்று இருவார கால அவகாசம் வழங்கியது வடக்கு மாகாண சபை. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறும்போது,

"வடக்கு மாகாண சபை நியதிச் சட்டங்கள் தொடர்பில் ஆளுநரின் அனுமதிக்காக இருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இத்தனை கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமா?

நாடாளுமன்றத்தில் இப்போது

20 ஆம் பக்கம் பார்க்க

## கத்திக் குத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜுன் 12

கிளிநொச்சி, பளைப் பகுதியில் இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான 27 வயதுடைய முத்தையா திலீபன் என்பவரே உயிரிழந்தவராவார். இவர் தம்பலகாமம், பளையைச் சேர்ந்தவராவார்.

நேற்றுக் காலை 7 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. குடும்பத் தகராறு காரணமாக இரு குழுக்கள் மோதிக் கொண்டபோதே கத்திக் குத்து நடந்துள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க

## படைகளுக்குக் காணி வழங்குவதற்கு தடை

யாழ்ப்பாணம், ஜுன் 12

முப்படையினரால் அடையாளப்படுத்தப்பட்டு, கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 25 காணிகளை, படையினருக்கு வழங்க வேண்டாம் என்று காணி ஆணையாளர் நாயகத்தினால் வடக்கு மாகாண காணி ஆணையாளருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால், வடக்கு மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் 27 ஆவது விதியின் கீழ் முப்படையினருக்கும் காணிகளை கையளிப்பது தொடர்பான, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக என்னால் பிரதேச செயலாளரிடமிருந்து பரிந்துரை அறிக்கைகள் பெறப்பட்டிருந்த கீழ் காணப்படும் காணி கையளிப்பு நடவடிக்கைகள் அவசியமற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.




புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 14 ஆவது பொறியியல் படைப்பிரிவு கோரிய காணி, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 511 ஆவது தலைமையகம் அமைக்கக் கோரிய காணி, வெள்ளாம் முள்ளி

20 ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாணத்தில் அனைவருக்கும் இவ்வருடத்துக்குள் மின்சார வசதி

## வடக்கின் வசந்தம் திட்டமிடல் முகாமையாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 12

இந்த வருடத்துக்குள் வட மாகாணம் முழுவதும் 100 வீதமாக மின்சாரம் விநியோகிக்கப்படும். அதற்கான இணைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறன என்று வடக்கின் வசந்தத்தின் திட்டமிடல் முகாமையாளர் ந.குணசீலன் தெரிவித்தார்.



இது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி விடுதியில் இடம் பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 95 வீதமான பகுதிகளுக்கு மின்சார இணைப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் ஏனைய தீவகப் பகுதிகளில் தற்போது இணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றில் தீவகத்துக்கு இன்னும் ஓரிரு மாதங்களில் மின்சாரம் வழங்கப்படும். ஏனைய பகுதிகளுக்கு இந்த வருடத்துக்குள் வழங்கப்படும். இதன்படி வடக்கு மாகாணம் முழுவதுமாக வருடத்துக்குள் 100 வீத மின்சாரத் தேவை பூர்த்தி செய்யப்பட்டுவிடும் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மின் இணைப்புப் பணிகளும் தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதி பொது முகாமையாளர் குணதிலக, மின்சார சபையின் வர்த்தகப் பிரிவு பொறியியலாளர் திருமதி கோபிகா, மின்சார சபையின் கிளிநொச்சி பிரதேச பொறியியலாளர் நிரோஜன், வடக்கின் வசந்தம் மின் பொறியியலாளர் அமில டயஸ், கிளிநொச்சி மின் அத்தியட்சகர் குகராஜா, மற்றும் மின்சார சபையின் பொறியியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-14)

# கண்டிய மரபை பிரதிபலிக்கும் கலை அரங்கம் பேராதனையில்

## விரைவில் அமையும் என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, ஜூன் 12

தாமரை தடாகத்தைப் போன்ற கலை அரங்கம் ஒன்றை கண்டி பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் நிர்மாணிப்பதற்கு தீர்மானித்துள்ளோம் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

எல்லா வசதிகளும் கொண்டதாக இந்த அரங்கம் அமையவுள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஒப்பந்த அடிப்படையில் காணியைப் பெற்று அதப் பின் பணிகள் தொடங்கும்.

கண்டிய யுகத்துக்கமைய கலை கலாசார அம்சங்களுடன் இந்தக் கட்டட நிர்மாணம் இடம் பெறும். சுமார் 1500 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தமண்டபம் சர்வதேசத் தரத்தில் சகல வசதிகளையும் கொண்டதாக அமையும் - என்றார். (ஐ-10)

# சி.ரி.ஸ்கான் இயந்திரம் திருத்துவதில் தாமதம்

## யாழ்.போதனாவைத்தியசாலையில் விபத்து நோயாளர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சி.ரி.ஸ்கான் இயந்திரம் திருத்தப்படாததனால் நாளாந்தம் ஐந்துக்கு மேற்பட்ட நோயாளர்கள் வவுனியா மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டுகின்றனர். இதனால் ஒரே நாளில் 5 அம்புலன்ஸ் வண்டிகளும் அந்த சேவையில் ஈடுபடுகின்றன என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

விபத்துக்களில் படுகாயமடைவோரை சி.ரி.ஸ்கான் மூலம் பரிசோதிக்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள இயந்திரம் சில வாரங்களுக்கு முன்னர் பழுதடைந்து விட்டது.

இதனால் நோயாளர்களை வவுனியா மற்றம் அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பியே சி.ரி.ஸ்கான் செய்ய வேண்டி உள்ளது. இரவு 10 மணிக்குப் பின்னர் வவுனியா வைத்தியசாலையில் ஸ்கான் எடுக்க முடியாது. அதனால் அதற்கு பின்னர் நோயாளர்கள் அனைவரும் அநுராதபுரம் வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர்.

இதனால் நோயாளர்கள் மாத்திரமன்றி அவர்களை அழைத்துச் செல்வோர் ,உறவினர் என பலரும் இடையூறுகளை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவிடம் கேட்டபோது:

இயந்திரத்தைத் திருத்துமாறு சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளோம். வெளிநாடு ஒன்றிலிருந்து அதற்கான உபகரணங்கள் எடுத்து வரப்பட வேண்டும் என்று எமக்குக் கூறப்பட்டுள்ளது. அதுவரை வெளிமாவட்டங்களுக்கே நோயாளர்களை அனுப்ப வேண்டியுள்ளது - என்றார். (ஐ-4)

# பதவி வெற்றிடத்தை நிரப்ப மாகாண சபை நடவடிக்கை

## அவைத்தலைவர் சிவஞானம் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சித் துறையிலுள்ள முக்கியமான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும், இயங்கு நிலையிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு வருடாந்த நிதிக் கொடுப்பனவு வழங்குவதற்கும் வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு அவைத் தலைவர் தலைமையில் முற்பகல் 9.35 மணிக்கு ஆரம்பமாகியது. நிகழ்சி நிரலின் ஆரம்பத்தில் அவைத் தலைவர் அறிவிப்பு இடம்பெற்றது. அதன்போதே அவைத்தலைவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

**வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் துறையில் முக்கியமான பதவிகளுக்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்கு மாகாண சபை, மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவைக் கோரியுள்ளது**

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் துறையில் முக்கியமான பதவிகளுக்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்கு மாகாண சபை, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவைக் கோரியுள்ளது. வருமான வரிப் பரிசோதகர்கள் 79 பேருக்கும், நூலகர்கள் 36 பேருக்கும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 43 பேருக்குமான வெற்றிடங்களை நிரப்புவதற்கே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வடக்கு மாகாணத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதி வழங்குவது தொடர்பில் நடப்பு வருடத்திற்கு பரிசீலிக்கப்பட்டாலும், மாகாணசபை அமைவதற்கு முன்னரே, நடப்பாண்டுக்குரிய வரவு–செலவுத் திட்டம் தயாரிக் கப்பட்டமையினால் அவை உள்ளடக்கப்படவில்லை.

அதனால் அடுத்த வருடத்திற்குரிய வரவு – செலவுத் திட்டத்தில், வடக்கு மாகாணத்தில் இயங்கு நிலையிலுள்ள ஆயிரத்து 200 சனசமூக நிலையங்களுக்கு வருடாந்தம் 5 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாணசபை கோருகின்றது என்றும் அவைத் தலைவர் தெரிவித்தார். (ற-5)

# பஸ் ஊழியர்களுக்கிடையில் வற்றாப்பளையில் கை கலப்பு

## இ.போ.ச. சாரதியும் நடத்துநரும் காயம்

முள்ளியவளை.ஜூன் 12

வற்றாப்பளை கண்ணகை அம்மனின் பொங்கல் உற்சவத்தின்போது விசேட பஸ் சேவையில் ஈடுபட்ட தனியார் மற்றும் இ.போ.ச. பஸ் சாரதி.நடத்துநர்களிடையே ஏற்பட்ட மோத லில் இ.போ.ச. சாரதியும் நடத்துநரும் படுகாயமடைந்து முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் முல்லைத் தீவு சாலையின் பஸ் சாரதியான திருகோணமலையைச் சேர்ந்த ஜி.அகமட்கான், பஸ் நடத்துநரான அக்கரைப்பற்றைச்சேர்ந்த டி.,எம்.அஸ்மீர் ஆகிய இருவருமாவர்.

உற்சவகால விசேட பஸ் நிலையத்தில் இரு தரப்பு பஸ்களும் நிறுத்தப்பட்டு சேவையில் ஈடுபட்ட வேளை முரண்பாடு தோன்றியுள்ளது. இதன்போது முல்லைத்தீவு இ.போ.ச.சாலை பஸ் சாரதியும் நடத்துநரும் தாக்கப்பட்டுள்ளனர். இருவரும் காயங்களுடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தினர் என்ற சந்தேகத்தில் தனியார் பஸ் சேவையில் ஈடுபட்ட இருவரை அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கைது செய்தனர். (ஐ-102)

# டிராக்டரை மோதியது ரயில்

கிளிநொச்சி.ஜூன் 12

கிளிநொச்சி விவேகானந்த நகர்ப்பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடக்க முற்பட்ட டிராக்டரை ரயில் மோதியதில் அது விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விவேகானந்த நகர் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையை டிராக்டர் கடந்து செல்ல முற்பட்டபோது அந்த தருணத்தில் கொழும்பிலிருந்து பளை நோக்கி ரயிலும் வந்துள்ளது. டிராக்டர் பாதையைக் கடந்த நிலையில் அதன் பெட்டியை ரயில் மோதி 500 மீற்றர் வரை இழுத்துச் சென்றது.

டிராக்டர் பாதையைக் கடந்ததால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

ரயில் நிறுத்தப்பட்டு டிராக்டர் பெட்டி அகற்றப்பட்ட பின்னர் தொடர்ந்து பயணித்தது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (ஐ-18-426)

# வடக்கு மாகாண சபையின் இணையத்தளம் முடக்கம்

## துனிசியா நாட்டைச் சேர்ந்தோர் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடக்கு மாகாணசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் www.np.gov.lk துனிசியா நாட்டைச் சேர்ந்த அரேபிய இணைய ஊடுருவிகளால்(ஹக்கர்கள்) முடக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளம் நேற்று முன்தினம் முதல் முடக்கி வைக்கப்படுள்ளது. ஆளுநரின் கட்டுப்பாட்டில் தொடர்ந்து இயங்கி வந்த நிலையில் இவ்வாறு முடக்கப்பட்டுள்ளது.

Prodigy TN – Fallaga Team என்று தம்மை அழைத்துக்கொள்ளும் மேற்படி ஊடுருவல்காரர்கள் பெரும்பாலும் அமெரிக்கப் படையினருக்கு எதிரான செய்திகளை, தாம் முடக்கும் தளங்களில் வெளியிடுவது வழமை. இருப்பினும் வடமாகாணசபை தளத்தில் அவ்வாறான எந்த செய்திகளையும் வெளியிட வில்லை. பதிலாக பல்வேறு மொழிகளில் நல்வரவு என்று பதிவு செய்துள்ளனர்.

www.np.gov.lk இணையத்தை தாக்கமுன் மாகாண சபையின் உப முகவரிகள் முடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த உப முகவரிகள் சில வாரங்களுக்கு முன்னரே செயலிழந்துள்ளன. அதன் தொடர்ச்சியாகவே இத்தாக்குதல் இடம் பெற்றிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கிய இணையத்தளங்கள் ஹக் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெயானியின் கருத்துக்கு இலங்கை கண்டனம்

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில்சாட்சியமளித்தவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. விசேடஅறிக்கையாளர்தெரிவித்த கருத்தை, மீளப்பெற வேண்டும் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்தோர் தொடர்பில் அறிக்கையிடுவதற்காகஇலங்கை கடந்த வருடம் வந்திருந்த ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பெயானி, நடப்பு ஐ.நா. கூட்டத்தொடரில் தெரிவித்த கருத்துக் குப்திலளிக்கையிலேயேஇலங்கை அரசு இவ்வாறு தெரிவித்துள்ளது.பெயானியைச் சந்தித்த எவரும் அச்சுறுத்தவோ - பயப்படுத்தப்படவோ இல்லை.

அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் எதுவித முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை.

எனவே இவ்வாறானதொரு நிலையில் பெயானி இவ்வாறு தெரிவித்திருப்பது தேவையற்றது என்று இலங்கை அரசு குறிப்பிட்டுள்ளது. (ற-5)

**Work on a Cruise Liner**
(சர்வதேச பயணிகள் கப்பலில்)
**or in Australia**

* Study in Malaysia, Job placement on International Cruise liner
* Paid Monthly allowances
* Free Food & Accommodation

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி,
யாழ்ப்பாணம் 021 4926222
107-B 1/1,Galle Road, Colombo - 6
4343322, 077 3013060

# தென்மராட்சி கடற்றொழில் அமைப்புகள் கடும் எதிர்ப்பு

## கூடுகட்டி இறால் பிடிக்கத் தடை விதித்தமைக்கு

தென்மராட்சி, ஜூன் 12
தென்மராட்சி பிரதேச கடலோரியில் கூடுகட்டி இறால் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டமைக்கு பிரதேச கடற்றொழிலாளர்கள், அமைப்புக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

குறித்த கடலோரியில் கூடு கட்டி இறால் பிடிக்கும் தொழிலை பல குடும்பங்கள் காலங்காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இறால் கூடுகளுக்குள் குஞ்சு மீன்கள் சென்று அழிக்கப்படுவதால் கூடு கட்டி இறால் பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல்களில் போடப்படும் களங்கண்டி வலைகளிலும் குஞ்சு மீன்கள் பிடிபட்டு அழிவது அனைவரும் அறிந்ததே.

> குறித்த கடலோரியில் கூடு கட்டி இறால் பிடிக்கும் தொழிலை பல குடும்பங்கள் காலங்காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இறால் கூடுகள் போட்டு இறால் பிடிப்பதை தடை செய்வதால் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான இறால் கூடு கட்டி தொழில் நடத்திய குடும்பங்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன.

தென்மராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ள இறால் கூடுகள் தடைசெய்யப்பட்டால் அந்தத் தொழிலாளர்கள் ஏனைய கடற்பகுதியில் தொழில் செய்ய வாய்ப்பு உள்ளது.

தென்மராட்சி பிரதேச கடற்றொழிலாளர்களுக்கு அவ்வாறான வசதிகள் இல்லாததால் தென்மராட்சி பிரதேச கடலோரியில் தொடர்ந்து இறால் கூடுகள் மூலம் இறால் பிடிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச கடலோரியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இறால் கூடுகள் அமைக்கப்பட்டு இறால் பிடிப்பது குறிப்பிடத்தக்கது. சாவகச்சேரி, கோயிற் குடியிருப்பு, அல்லாரை, கச்சாய், பாலாவி, கெற்பேலி, தனங் களப்பு, மறவன்புலோ, கோவி லாக்கண்டி நாவற்குழி போன்ற கடலோரியில் இறால் கூடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## கத்திக் குத்துக்கு இலக்காகி இளைஞன் சாவு

பளை, ஜூன் 12
பளை தம்பகாமம் பகுதியில் இளைஞர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 6.30 மணிக்கு இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த குகதாஸ் திலீபன் (வயது-26) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குப் பொலிஸாரால் கொண்டு செல்லப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொடுத்த பணத்தைக் கேட்கச் சென்ற நால்வருடன் வாக்குவாதம் ஏற்பட்டபோது கத்திக் குத்து இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## உதவிக்கல்வி பணிப்பாளர் நியமனம்

வலி. வடக்கு, ஜூன் 12
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் வலிகாமம் கல்வி வலயத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட 4 பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.


உடற்கல்விக்குத் திருமதி கோசலை குணபாலசிங்கமும் சமூக விஞ்ஞானத்துக்கு லதீஸ் கிறேஸ் விக்ரர் ஜெயக்குமாரும் வர்த்தகத்துக்கு தில்லையம்பலம் உதயகுமாரும் முறைசாரா கல்விக்கு கே.கனகேஸ்வரனும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்துள்ளார். (வ-86)

## ஆயிரம் கோடி அபிவிருத்தி திட்டம் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 12
வேலணை பிரதேச செயலகப் பிரிவில் அரசின் ஆயிரம் கோடி அபிவிருத்தித் திட்டத்துக்கான கலந்துரையாடல் வேலணை பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வேலணை பிரதேச செயலகப் பிரிவின் 30 கிராம அலுவலர் பகுதிக்குமான அபிவிருத்திகள் குறித்த இந்தக் கலந்துரையாடல் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச சபை தவிசாளர் எஸ்.சிவராசா மற்றும் கிராம அலுவலர்கள், சமுர்த்தி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)



யாழ்.பண்ணை வீதியின் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. பிரதான வீதியின் மண்டைதீவுச் சந்திக்கு அண்மையில் வீதியை ஊடறுத்து பிரதான பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (வ-17)

# சட்டவிரோத மதுபானமற்ற கிராம நிகழ்ச்சித் திட்டம்

## வடமராட்சியில் முன்னெடுப்பு

கரணவாய், ஜூன் 12
சட்ட விரோத மதுபானமற்ற கிராம நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை பருத்தித்துறை மதுவரித் திணைக்களம் வடமராட்சிப் பகுதியில் நடைமுறைப் படுத்தி வருகின்றது.

பருத்தித்துறை மதுவரி நிலையத்தின் எல்லைக்குட்பட்ட 3 பிரதேச செயலக பிரிவுகளான பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 22 கிராம சேவையாளர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சட்ட விரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை நுகர்வு என்பனவற்றை முற்றாகத் தடை செய்து அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கெருடாவில் வடக்கு, தொண்டமானாறு தெற்கு, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை வடமத்தி, வல்வெட்டித்துறை தென்மேற்கு, அவ்வாய் மேற்கு, வியாபாரிமூலை, புலோலி மத்தி, மந்திகை மற்றும் புலோலி வட மேற்கு ஆகிய 10 கிராம சேவையாளர் பிரிவுகளிலும்-

கரவெட்டியில் துன்னாலை மத்தி, துன்னாலை கரணவாய் கிழக்கு, நெல்லியடி வடக்கு, அவ்வாய் தெற்கு, கரவெட்டி மத்தி, கப்பூது ஆகிய 8 கிராம சேவகர் பிரிவுகளிலும் மருதங்கேணி மணற்காடு, அம்பன், குடத்தனை மற்றும் பொற்பதி ஆகிய பகுதிகளிலும் இது துரிதமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் சட்டவிரோத மதுபானம், கஞ்சா, சறஞ்சுகள், அபாய ஔடதங்கள் என்பவற்றின் பாவனை ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் அந்தப் பிரதேச கிராம சேவகர்களின் பங்களிப்புடன் பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தால் நேரடியாகக் கண்காணிக்கப்பட்டு அவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இது ஏனைய கிராம சேவகர் பிரிவுகளிலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ரி.அசோகரட்ணம் தெரிவித்தார். (வ-108)

## ரயிலில் பயணித்தவரின் சங்கிலி அபேஸ்

வலி. வடக்கு, ஜூன் 12
கொழும்பில் இருந்து பளை நோக்கி வந்த இரவு ரயிலில் பயணம் செய்த ஒருவரின் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து ரயிலில் பயணித்த குறித்த நபர் அடுத்த நாள் காலையில் ரயில் காவலாளர்களால் ரயில் பெட்டியில் மயக்கமுற்ற நிலையில் துப்புரவு செய்யும் வேளையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

பளை ரயில் நிலையத்தில் வைத்து குறித்த நபருக்கு அளிக்கப்பட்ட முதலுதவி சிகிச்சையைத் தொடர்ந்து மயக்கம் தெளிந்ததும் கொழும்பில் இருந்து புறப்பட்ட சில மணித்தியாலத்தின் பின்னர் தனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றார்.

ரயில் நிலையத்தில் மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்டவர் கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைச் சேர்ந்த வர்த்தகரான குருநாதபிள்ளை பகீரதன் (வயது -48) என்பவராவார். (வ-86)

## அனுமதியின்றி மணல் அகழ்வோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 12
அரியாலை கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமாக ஊரி, மணல் அள்ளுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

குறித்த கடற்கரைப்பகுதியில் அனுமதியின்றி ஊரிமணல் அள்ளப்படுவதாகதகவல் கிடைத்துள்ளதாகவும் கடற்கரைப் பகுதியில் மணல் அள்ளுவது தடைவிதிக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றிச் சட்டவிரோத மணல் அள்ளுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தவறின் ஊராட்சிமன்றச் சட்டங்களுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தவிசாளர் அறிவித்துள்ளார். (வ-7)

## நியமனக் கடிதம் வழங்கல்

சேவை மூப்பு மற்றும் திறமைப் போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றினடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III பதவிக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதம் கல்வி அமைச்சர் தலைமையில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் (4 ஆம் மாடி) இடம்பெறவுள்ளது. (க-35)

# மீற்றர் வட்டி, சீட்டுப் பிடிப்போர் சந்தைக்குள் நடமாடத் தடை

வலி. வடக்கு, ஜூன் 12
வலி. தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சந்தைகளில் மீற்றர் வட்டிக்குப் பணம் கொடுப்போர், சீட்டுப் பிடிப்பவர்கள் சந்தைக்குள் நடமாடக்கூடாதென பிரதேச சபையின் தவிசாளரால் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளதுடன் இத்தகையவர்களைக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா பிரகாஸுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

மீற்றர் வட்டிக்குப் பணம் கொடுப்போர் மற்றும் சீட்டுப் பிடிப்பவர்களின் நடவடிக்கைகள் காரணமாக சந்தை வியாபாரிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாகச் சந்தையில் அதிகமான பொது மக்கள் கூடியிருக்கும் வேளையில் மீற்றர் வட்டிக்காரர்களும், சீட்டுப் பிடிப்பவர்களும் வியாபாரிகளை மதிப்பில்லாமல் பேசுவதும் ,அதனால் அவர்கள் உயிரை மாய்த்தல் மற்றும் தொழிலில் இருந்து நீங்குதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அண்மையில் கூட இத்தகைய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளமையையும் கருத்தில் கொண்டு இந்தக் கட்டுப்பாட்டை மேற்கொண்டுள்ளதாகவும், இதனால் பொது மக்களும், வியாபாரிகளும் பாதிப்படையப் போவதில்லை என்றும் தெரிவித்தார். (வ-86)




இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் நிறுத்த வேண்டும். இந்தியச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் போன்ற 4 கோரிக்கைகளை வலியுறுத்தி இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் நேற்றுக் குடும்பத்துடன் வாயில் கறுப்புத்துணி கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விட்டால் அடுத்த கட்டமாக மாநிலம் தழுவிய போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-14)

## விசாரணைக் குழுவை அனுமதிக்கக் கூடாது

### சபாநாயகரிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது பிரேரணை

கொழும்பு, ஜூன் 12

ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் நேற்று சபாநாயகரிடம் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. ஆளும் கூட்டமைப்பின் 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு இந்தப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்தனர்.



இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு, ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையினால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு இலங்கையில் விசாரணை நடத்த அனுமதிக்கக் கூடாது என்று அந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது ஆளும் தரப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களின் பிரேரணை மீதான விவாதம் நடத்துவதற்கான தினம் குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ந)

## அத்துமீறும் தமிழக மீனவர் கைது செய்யப்படுவார்கள்

### இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 12

இலங்கை கடல் பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்கள் தேசிய பாதுகாப்பு கருதி தொடர்ந்தும் கைது செய்யப்படுவர் என்று தெரிவித்தார் இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடக மையத்தின் பணிப்பாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய.

கொள்ளுப்பிட்டியில் உள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி ஊடக மத்தியநிலையத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுகின்றனர் என்று தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இது உண்மைக்கு புறம்பானது. சர்வதேசக் கடல் எல்லையை மீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் மீனவர்கள் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்படுகின்றனர்.

இந்திய மீனவர்களின் கைது நடவடிக்கை தொடர்பில் இலங்கை கடற்படையினர் மனிதாபிமானமற்ற விதத்தில் நடந்து கொள்வதாக சில ஊடகங்கள் தவறான பிரச்சாரங்களை முன்னெடுத்துச் செல்கின்றன. அவற்றில் எந்தவித உண்மையும் கிடையாது. சர்வதேச சட்டத்தை மீறும் இந்திய மீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்படுவதை மனிதாபிமானமற்ற செயல் என்று எவரும் கூற முடியாது.

இதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு கருத்து வெளியிடும் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்த கருத்தை மறுத்த இராணுவப் பேச்சாளர், மாணவர்களுக்கு உதவி வழங்குவதைத் தவிர இராணுவம் எந்த செயற்பாடுகளையும் பல்கலைக்குள் முன்னெடுக்க வில்லை என்று குறிப்பிட்டார். (ற-5)

## நாடுகடத்தப்படுவோர் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்படும்

### பிரிட்டன் கூறுகின்றது



லண்டன், ஜூன் 12

இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களைத் திருப்பி அனுப்பும்போது அவர்கள் அங்கு பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கத்தக்கதாக, அவற்றைப் புறக்கணித்து தஞ்சக் கோரிக்கையாளர்களை பிரிட்டன் நாடு கடத்துகின்றது என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்.

மோதல்களின் போது இடம் பெறும் பாலியல் வன்முறைகளைத் தடுக்கும் நோக்கிலான சர்வதேசமாநாடு செவ்வாயன்று லண்டனில் ஆரம்பமானது. பிரிட்டனினால் நடத்தப்படும் இந்த சர்வதேச மாநாட்டை ஒட்டி பிரிட்டனுக்கு எதிராகவும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சித்திரவதைக் கொடுமைகளுக்கு அஞ்சி இலங்கையை விட்டுத் தப்பிச் செல்லும் அகதிகளை மீளத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை பிரிட்டன் துரிதப்படுத்தியிருக்கின்றது. இது மாநாட்டின் ஆரம்பத்திலேயே சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. மாநாட்டின் ஆரம்ப நிகழ்விலேயே இத்தகைய குற்றச்சாட்டு எழுந்திருப்பதை அடுத்து இவ்விடயங்கள் குறித்து பிரிட்டன் விசாரணை நடத்தும் என்று வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாடு தொடர்பிலும் அதன் மனித உரிமைகள் நிலவரம் பற்றிய மதிப்பீட்டை வழங்குவது மட்டுமே பிரிட்டன் வெளியுறவு அமைச்சகத்தின் பணி என்று குறிப்பிட்ட வில்லியம் ஹேக், அகதிகள் விடயத்தை நேரடியாகக் கையாள்பவர் உள்நாட்டு அமைச்சகத்தின் செயலாளரே என்றும் குறிப்பிட்டார்.

பாலியல் வன்முறைகளாலும் வன்புணர்வுகளினாலும் பாதிக்கப்பட்டோரின் பிரச்சினை உணர்வுபூர்வமானது. அதனைக் கையாளும் குடியகல்வு, குடிவரவு அதிகாரிகள் குறித்து உரிய விசாரணை நடத்தப்படும். அவர்களுக்கு உரிய பயிற்சியளிக்கப்படும்.

புகலிடக்கோரிக்கையாளர் விடயத்தில் எமது நாடு திறந்தே உள்ளது. இந்த விடயத்தில் உரிய தரத்தைப் பேணுவதில் நாம் மிகுந்த கரிசனையாக உள்ளோம். அத்தகைய தரத்தை நாம் பேணவில்லை என்று யாரும் கூறினால் அது குறித்து விசாரிக்க நாம் பின்நிற்கமாட்டோம் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இலங்கையில் பாதுகாப்பில்லை என்று குறிப்பிடும் பிரிட்டன், அவ்வாறானதொரு நிலையில் புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்வதானது, பிரிட்டன் இரட்டை வேடம்போடுகின்றதா என்ற கேள்வியைத் தோற்றுவிக்கின்றது என்று புகலிடக் கோரிக்கையாளர்களின் சட்டத்தரணிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ற-5)



ஊரெல்லாம் தேடித் தேடிப் பாதீனியம் அழித்து வருகின்றனர் வடக்கு மாகாண சபையினர். ஆனால் வடக்கு மாகாண சபை வளாகத்துக்குள் அதைக் கண்டுகொள்ளாது விட்டார்கள் போலும். அங்கு செழிப்பாக வளர்ந்து காணப்படுகின்றது பாதீனியம்.

## படகுகளில் ஆஸி. வருவோர் திருப்பி அனுப்பப்படுவார்கள்

### அந்நாட்டு தூதரக அதிகாரிகள் திட்டவட்டமாகக் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 12

படகு மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு வருகை தருவோர் அந்தந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுவர். எனவே ஆட்கடத்தல்காரர்களது போலியான வார்த்தைகளை நம்பி, உயிரை பணயம் வைத்து ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துள்ளனர் ஆஸ்திரேலிய தூதரகத்தின் பிரதிநிதிகள்.

சட்டவிரோதமாக படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வருகை தருவோரை தடுக்கும் ஆஸ்திரேலிய அரசின் புதிய நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு நேற்று யாழ்.பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றது. அதன்போதே மேற்கண்டவாறு அவர்கள் தெரிவித்தனர்.

அங்கு மேலும் கூறப்பட்டதாவது, "படகு மூலம் எந்த நாட்டில் இருந்து வருபவர்களாக இருந்தாலும் ஆஸ்திரேலியாவுக்குள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். இலங்கையைப் போன்று



இந்தோனேசியாவுக்கு அருகில் இருக்கும் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர். அங்கிருந்து அவர்கள் எந்த நாட்டில் இருந்து வந்தார்களோ அங்கு திருப்பி அனுப்பப்படுவர். கடந்த மே மாதம் 27 ஆம் திகதி வரை 172 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வர முயற்சிப்பவர்கள் தமது வாழ்க்கை மற்றும் குடும்பத்தவர்களின் வாழ்க்கை என்பவற்றை இழக்க நேரிடும். - என்று தெரிவிக்கப்பட்டது. (ப-14.18.86)

# சந்திரிகா தொடர்பில் அறிக்கை கையளிப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறித்த புலனாய்வு அறிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சந்திரிகாவுடன் தொடர்புகளைப் பேணி வரும் ஆளும் கட்சி அமைச்சர்கள் தொடர்பிலான விவரங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகாவைக் களமிறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆளும் கட்சியிடம் தெரிவிக்காது இரகசியமாக சந்திரிகாவைச் சந்தித்த அமைச்சர்கள் பற்றிய புலனாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு. ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா தேர்தலில் போட்டியிட்டால் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகச் சில அமைச்சர்கள் வாக்குறுதி அளித்துள்ளதாக புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ச)



சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்காக புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவி அனோமா திசாநாயக்க பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கினார். (ச)

# 2,000

## குருதிக் கொடையாளர் கலந்துகொள்ளும் இரத்ததான முகாம்

கொழும்பு,ஜூன் 12

2,000 குருதி கொடையாளர்கள் பங்குபற்றும் இரத்ததான முகாம் இன்று வியாழக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது அனுஷ்டிக்கப்பட்டு வரும் குருதி கொடையாளர் வாரத்தின் ஓர் அங்கமாக இந்த முகாம் ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் குருதிக் கொடை தொடர்பான மாநாடொன்று நாளை வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பல உள்நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# போகம்பரை சிறைச்சாலை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பு

கொழும்பு,ஜூன் 12

போகம்பரைச் சிறைச்சாலை வளாகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

இந்தச் சிறைச்சாலை வளாகம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட உள்ளது என்று சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.



போகம்பரை சிறைச்சாலை

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 2,000 கைதிகள் அண்மையில் தும்பரச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

சிறைச்சாலை அமைந்துள்ள காணியை அரச அபிவிருத்திப் பணிகளுக்காக பயன்படுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதியிடம், ஒப்படைக்கப்பட உள்ளது என்று அவர் கூறினார்.

போகம்பரை சிறைச்சாலையில் ஒரு சில இயந்திர சாதனங்களைத் தவிர ஏனையவை ஏற்கனவே, தும்பரை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)

# ஐ.நா. விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்

## ஜே.வி.பி. அரசிடம் வேண்டுகோள்

கொழும்பு,ஜூன் 12

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் போர்க் குற்ற விசாரணைகளுக்கு அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

> சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே ஜே.வி.பி. கட்சியின் நிலைப்பாடு.

போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தும் விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானிக்கும் என்று அரசு அறிவித்திருந்தது. இந்த தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என்று ஜே.வி.பி. கட்சியின் பரப்புரை செயலர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இவ்வாறான விசாரணைகளை எதிர்நோக்கியிருக்கவேண்டியிருந்திருக்காது.

அரசு உண்மையான ஓர் அணுகுமுறையைப் பின்பற்றியிருந்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகத் தண்டனை விதிக்கும் வகையிலான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்காது.

சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்பதே ஜே.வி.பி. கட்சியின் நிலைப்பாடு.

சர்வதேச ரீதியான விசாரணைகளை எதிர்நோக்கி குற்றச் சாட்டுக்களுக்கு உரிய பதிலளிக்க வேண்டியது அரசின் கடமையாகும்-என்றார். (ச)

# வரிகளை அதிகரித்தது அரசு

கொழும்பு,ஜூன் 12

உணவுப் பொருள்களுக்கான வரியை அரசு 39 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலை குறைக்கப்பட்ட போது, அதன் இலாபங்களை அரசே பெற்றுக் கொண்டது என்று அவர் தெரிவித்தார். விலைகள் குறைக்கப்படும்போது, வரி அறவீடுகளை அரசு அதிகரிக்கின்றது. இதன்மூலம் நுகர்வோருக்கு எந்தவித பயனும் கிடைக்கப் பெறுவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

SCHOLARSHIPS FOR STUDENTS!
மாணவர்களுக்கான புலமைப்பரிசில்!
China Australia UK NZ
CARRIER PATHWAY FOR STUDENTS OF CAMBRIDGE,EDEXAL & ADVANCE LEVEL
கேம்பிறிச் , எடக்சல் , உயர்தர மாணவர்களுக்கான வேலை வாய்ப்புக்கான இலகு வழி...
NANJING MEDICAL UNIVERSITY
(PENDING EDEXEL/CAMBRIDGE/Alevel CAN APPLY)
➤ W.H.O & Sri Lanka Medical Council Approved
➤ Low Tuition Fees
➤ After MBBS can study MD in Australia
Ten(10) Scholarships for each intake the whole study period
➡ Mechatronic Engineering
➡ Telecommunication Engineering & Commerce
➡ Civil Engineering(All These Courses are in English Medium)
➡ BA(Hons) Business Studies(2 years) ➡ MBA(1 Year)
Any of the below Qualification:
✡ GCE O/L Credits in Maths,Science and English
✡ GCE A/L (Good Results) ✡ Recognised Degree
கலந்துரையாடல் /Seminar
மேற்படி ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மானிப்பாயில் எதிர்வரும் 14.06.2014 சனிக்கிழமை காலை 09.00 மணியளவில் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால கல்வி முன்னேற்றங்கள் குறித்த விஷேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.
எனவே பெற்றோர்கள்,பிள்ளைகள்,நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.
நிர்வாகி
மேலதிக விபரங்களுக்கு
For Further Details:
Sherrine
Phone:0777-123915

# பல்கலைக்கழகக் கட்டமைப்பை சீர்குலைப்பதற்கு சிலர் முயற்சி

## மானிய ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

பல்கலைக்கழக கட்டமைப்பைச் சீரழிப்பதற்காக சிலர் பல்கலைக்கழக மாணவர்களைப் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள். எனினும் அனைத்து பல்கலைக்கழகங்களும் எந்தவிதப் பிரச்சினையும் இன்றிச் சுமுகமாக இயங்கி வருகின்றன என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் ஷானிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி, உட்கட்டமைப்பு மற்றும் விடுதிகள், கட்டட வசதிகள் என அனைத்துக்கும் தேவையான நிதி எம்மிடம் உள்ளது.

பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அவர்களை நீங்கள் கற்பதற்காக அனுப்பியுள்ளீர்கள். சமூகத்தில் கற்றவர்களாகவும் பல துறைகளில் நிபுணத்துவம் மிக்கவர்களாகவும் அவர்கள் உருவாகவேண்டும் என்ற எதிர் பார்ப்புடன் அனுப்பியுள்ளீர்கள்.

உங்கள் எதிர்பார்ப்பை அவர்கள் பூர்த்தி செய்வதற்காக நீங்கள் அவர்களுக்கு எந்த விதத்தில் உதவுகிறீர்கள் என்பது பற்றிப் பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டும் -என்றார். (ச)

யாழ்.நகரில் முதன் முறையாக......
புத்தகத் திருவிழா
மாபெரும் தமிழ்ப் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
வீரசிங்கம் மண்டபத்தில்
காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை
இன்று மட்டுமே
12.06.2014 வியாழக்கிழமை
பல்லாயிரக் கணக்கான தலைப்புக்களில் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் அதிரடி விலைக்கழிவுகளுடன்
இன்று மட்டுமே
குறிப்பிட்ட சில புத்தகங்களுக்கு எதிர்பாராத விசே விலைக்கழிவு. அரிய சந்தர்ப்பம்.
வாசிப்பை நேசிக்க வைப்போம்
அனைவரையும் அழைக்கின்றோம்.

# வடிகால்களை திருத்தாவிட்டால் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில்

மட்டக்களப்பு.ஜூன் 12

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவின் பிரதான வீதியில் காணப்படும் வடிகால்கள் திருத்தப்படாவிட்டால் மக்கள் எதிர்ப்புநடவடிக்கையில் இறங்க வேண்டி ஏற்படும் என்று ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.ஜுனைட் நழீமி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நுழைவாயிலாக அமைந்துள்ள ஓட்டமாவடி இந்த மாவட்டத்தின் முக்கிய பிரதேசமாக உள்ளது. இந்தப் பிரதேசத்தினூடாகப் போக்குவரத்துக்கள் அதிகம் இடம்பெறுவதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் பாசிக்குடா உள்ளிட்ட பிரதேசங்களுக்கு பயணிக்கின்றனர்.

> பிரதான வீதியின் இரு மருங்கிலுமுள்ள வடிகான்கள் சேதமடைந்து நீர் தேங்குவதால், டெங்கு உட்பட பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளன.

இந்தப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியின் இரு மருங்கிலுமுள்ள வடிகால்கள் சேதமடைந்து நீர் தேங்குவதால், டெங்கு உட்பட பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளன. அத்துடன் அது சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பாக உள்ளது.

வடிகால்களுக்கு மூடிகள் இடாமையால் விபத்துக்களும் இடம்பெறுகின்றன.



புனரமைப்பு இன்றிய வடிகால்

கடந்த காலத்தில் மாவட்ட அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய இந்த வடிகால்களின் புனரமைப்பு புறந்தள்ளப்பட்டமை கவலையளிக்கின்றது.

எனவே இந்தப் பிரதேசத்தின் சுற்றுச் சூழல் முக்கியத்துவம் கருதி உரிய அதிகாரிகளிடமிருந்து இரு வாரங்களுக்குள் இதற்கான தீர்வு வழங்கப்படாவிட்டால் பிரதேச மக்களுடன் ஒன்றிணைந்து சாலை மறியல் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட வேண்டி ஏற்படும்-என்றார். (ச)

## ஏறாவூரில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு.ஜூன் 12

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சித்தாண்டி முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த சாமித்தம்பி விநாயகம் (வயது -56) என்பவர் நேற்று புதன்கிழமை காலை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சித்தாண்டி முருகன் கோவில் சம்பந்தப்பட்ட வழக்கொன்று தொடர்பில் ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்துக்கு சாட்சியமளிக்க இவர் நேற்று சமுகமளிக்கவிருந்தாரென உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பஸ் உரிமையாளர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம்

### சாரதியைத் தாக்கிய சம்பவத்தையடுத்து

அம்பாறை.ஜூன் 12

பொத்துவில் தொடக்கம் கல்முனை வரையிலான தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்றுப் புதன்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்றிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் சாரதியை நிந்தவூரில் வழிமறித்து இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான கல்முனை சாலையைச் சேர்ந்த பஸ் சாரதியொருவர் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தே பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது என்று வரையறுக்கப்பட்ட தென்கிழக்கு தனியார் பஸ் அமைப்பின் செயலர் எம்.ஏ.அஸ்வர் தெரிவித்தார்.

ஏனைய வீதிப் போக்குவரத்தில் உள்ளவை போன்று கல்முனை - அக்கரைப்பற்றுக்கான ஒன்றிணைந்த நேர அட்டவணையின் கீழ் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான கல்முனை சாலை, அக்கரைப்பற்றுசாலை மற்றும் பொத்துவில் சாலைகளின் பஸ்கள் இயங்காமையினாலேயே இவ்வாறான பிரச்சினைகள் தோன்றக் காரணமாகின்றன என்று அவர் கூறினார். (ச)

# அதிக வயல் நிலங்கள் தரிசு நிலமாக மாற்றம்

### மாற்றுப்பயிர்ச் செய்கை அவசியம் என்கிறார் கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர்

மட்டக்களப்பு.ஜூன் 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அதிகமான வயல்கள் தரிசு நிலமாக விடப்பட்டுள்ளன. அதனால் விவசாயிகள் மத்தியில் மாற்றுப்பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்தி, நெல் வயலில் கிடைக்கும் வருமானத்தை விட மாற்றுப் பயிர்ச் செய்கையில் மும்மடங்கு வருமானம் பெறத்தக்க வாய்ப்பை விவசாயத் திணைக்களம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தத் தகவலை கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.எம்.குசைன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் மஹிந்த சிந்தனைத் திட்டத்தில் இந்த வருட இறுதிக்கு முன்னர் உப உணவுத் தானிய வகைகளை இறக்குமதி செய்வதைக் குறைத்து உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

> நெல் உற்பத்தியில் ஆர்வம் காட்டாமல் நிலக் கடலை, சோளன், பயறு போன்ற மாற்றுப்பயிர்ச் செய்கைகளில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் 30 சதவீதமான அளவு உற்பத்தி செய்யப்பட்டு நெல்லில் தன்னிறைவு அடைந்திருக்கின்றோம்.

எனவே, விவசாயிகள் தொடர்ந்து நெல் உற்பத்தியில் ஆர்வம் காட்டாமல் நிலக் கடலை, சோளன், பயறு போன்ற மாற்றுப்பயிர்ச் செய்கைகளில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். அது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க ஏதுவாக அமையும்.

தற்போது பிரதேச மட்டத்திலும் உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிழக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகள் தொடர்ந்து நெற்பயிர்களை மாத்திரம் பயிரிட்டு சோர்ந்து போயுள்ளனர்.

விவசாயத் திணைக்களம் சிறுதானிய வகைகளின் உள்ளீடுகளை வழங்குவது மட்டுமல்லாமல், விவசாயிகள் மத்தியில் புதிய புதிய நுட்பங்களை அறிமுகப் படுத்தி ஆலோசனைகள் மற்றும்பயிற்சிகளையும்வழங்கி வருகின்றது-என்றார். (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**இராமலிங்கம் கனகரத்தினம்**

(தொட்டிலடி சங்கானை)



தோற்றம் : 14.02.1923

மறைவு : 23.05.2013

(திதி : 12.06.2014)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தீர்கள்
கூரறிவு கொண்டவராய் எமையென்றும் வளர்த்தீர்கள்
அன்புப் பப்பாவே! நீங்கள் எமைப்பிரிந்து
ஆண்டு ஒன்றாகிவிட்டது
ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
பப்பா என்று அழைக்க
நீங்கள் இப்பூவுலகில் இல்லை
ஆலமரமாய் நின்று எம்மை அரவணைத்தீர்கள்
குடும்பத்தலைவராயும் கடமையில் ஆசானாகவும்
இவ்வுலகில் மிளிர்ந்தீர்கள் உங்கள் புன்சிரிப்பு
நிதம் எமை வாட்டுகின்றது பப்பா!
எமைப்பிரிந்து இப்போது
தெய்வமாகிவிட்டீர்கள் பப்பா!
நெஞ்சம் கனக்கிறது விழிநீர் சொரிகின்றது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் பிரிவால் வருந்தும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


தொட்டிலடி, சங்கானை.

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் சந்திரன் ராஜ்கரன்(கரன்)

(மாணவன், யா/யாழ்.மத்திய கல்லூரி)

தோற்றம் -30.12.1995 மறைவு - 04.05.2014



எங்கள் குலவிளக்காய் உதித்த நீ
எங்களைப் பாதியிலே விட்டுப் போவதற்கா?
என் கருவில் பத்துமாதம் இருந்தாய் நீ
எமைப் பிரிந்து நீ சென்று முப்பத்தொருநாள்கள் ஆனாலும்
என்றும் எங்கள் நெஞ்சில் வாழ்ந்திடுவாய்.

கடந்த 04.05.2014 சிவபதமடைந்த எமது செல்வன் ராஜ்கரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.06.2014)வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (13.06.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)


அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரடியாகவும், தொலைபேசியூடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**குடும்பத்தினர்.**

அப்பா - செல்லப்பா சந்திரன்
அம்மா - சந்திரன் கலாநிதி
தங்கைகள் - சந்திரன் கரணிகா
சந்திரன் மியூசிகா
அம்மம்மா - இராசு தவமணிதேவி (பேரன்)
மாமா - கணையாளன்

உரும்பிராய் தெற்கு, A.P.C அருகில், உரும்பிராய்.



திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது, சுவாமி தேரில் ஆரோகணித்து பக்தர்கள் புடை சூழ வீதி வலம் வருகின்றார். (ச)

# வாழைப்பழத்தின் விலை பெரு வீழ்ச்சி

## பயிர்ச் செய்கையாளர்கள் நட்டத்தில்

வவுனியா, ஜூன் 12

வவுனியா மாவட்டத்தில் வாழைப்பழப் பயிர்ச் செய்கை மேற்கொண்ட பயிர்ச் செய்கையாளர்கள் வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சி கண்டுள்ளமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக வவுனியா நகர, கிராமப் புறக் கடைகளில் வாழைபழங்கள் கிலோ ஒன்று 25 ரூபா முதல் 30 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆனால் வாழைப்பழத்தை விற்பனையாளர்கள் விவசாயிகளிடமிருந்து 20 ரூபா முதல் 23 ரூபா வரை கொள்வனவு செய்வதனால் பெரும் நட்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று விவசாயிகள் கூறினர்.

> வாழைப்பழத்துக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நடவடிக்கை வேண்டும்.

தற்போது வீசும் கடும் காற்றினால் வாழைமரங்கள் சரிந்து விழுவதுடன், குரங்குகள், யானைகளின் தொல்லைகளாலும் வாழை பயிர் செய்கை அழிவடைவதால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே வாழைப்பழத்துக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# மீனவருக்கு நிவாரணம்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

> பூநகரி, கரியாலை நாகபடுவான் குளம் முற்றாக வற்றியுள்ளது. அதனால் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரி, கரியாலை நாகபடுவான்குளம் முற்றாக வற்றியுள்ளது. அதனால் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட நன்னீர் மீன்பிடியாளர்கள் அரச அதிபரிடம் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரச அதிபர் கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் குளங்கள் வற்றி நன்னீர் மீன் பிடித் தொழிலில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச அதிபர் கூறினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரியாலை நாகபடுவான், பிரமந்தனாறு, வன்னேரிக்குளம் என்பன வறட்சியால் வற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

# பாடசாலைக்கு தாமதமாக வருகின்றனர் ஆசிரியர்கள்

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி, கோணாவில், யூனியன்குளம் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு வெளியிடங்களில் இருந்து வருகை தரும் ஆசிரியர்கள் உரிய நேரத்துக்கு பாடசாலைகளுக்கு வருகை தருவதில்லை.

அதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது என்று பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோணாவில் அ.த.க. பாடசாலை, யூனியன் குளம் அ.த.க. பாடசாலை போன்ற பாடசாலைகளுக்கு வெளியிடங்களில் இருந்து வருகை தரும் ஆசிரியர்கள் உரிய நேரத்துக்கு வருகை தருவதில்லை.

ஆசிரியர்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேரத்தின் பின்னரே வருகை தருகின் றனர் என்று பெற்றோர் சுட்டிக் காட்டினர்.

எனவே, இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# பெற்றோரை இழந்து சுமார் 48 சிறார்கள்

## துணுக்காய் பிரதேசத்தில்

*கிளிநொச்சி, ஜூன் 12*

*கடந்த காலப் போரால் முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்தில் சுமார் 48 சிறார்கள் தாய், தந்தையர்களை இழந்து வாழ்ந்து வருகின்றனர்.*

*முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தாய், தந்தையர்களை இழந்து சிறார்கள் வாழ்ந்து வருகின்றனர்.*

*துணுக்காய் பிரதேசத்தில் தாய் அல்லது தந்தையர்களை இழந்த நிலையில் 323 சிறார்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று துணுக்காய் பிரதேச செயலக புள்ளி விவர வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-55)*

# சட்டத்தரணிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு

## கிளிநொச்சி, முல்லை நீதிமன்றங்களில்

கிளிநொச்சி, ஜூன் 12

புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சமூகம் சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் சட்டத்தரணிகளுக்கான சமுதாய சீர்திருத்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி கிளிநொச்சி, முல்லைத்தீவு நீதிமன்றங்களில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணி வரை முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் சமூக சீர் திருத்தத் திணைக்களத்தின் ஆணையாளர் டி.எல்.சன்னசூரிய கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் நடைபெறும் குறிப்பிட்ட கருத்தரங்கிலும் டி.எல். சன்னசூரிய கலந்து கொள்ளவுள்ளார்.

இரு இடங்களிலும் நடைபெறும் கருத்தரங்குகளில் மாவட்ட மன்ற நீதிவான்களும், நீதிமன்ற நீதிவான்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-18)

# அக்கராயன் ஆற்றை புனரமைக்க வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி, அக்கராயன் ஆற்றைப் புனரமைத்துத் தர வேண்டும் என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அக்கராயன் குளத்திலிருந்து மழை காலத்தில் வான் பாய்ந்து வெளியேறும் வெள்ளம் சென்றடையும் அக்கராயன் ஆற்றுப் பகுதி 30 ஆண்டுகளுக்கு மேலாகத் துப்புரவு செய்யப்படாமல் இருந்து வருகின்றது.

ஆற்றுப் பகுதியில் காட்டு மரங்கள் முறிந்து வீழ்ந்து இருப்பதால் வெள்ளம் பாயும்போது வயல் நிலங் களுக்கும் பரவிப் பாய்வதாக என்று விவசாயிகள் கூறினர்.

இந்த நிலையில் அக்கராயன் ஆற்றை புனரமைத்துத் தர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)

# குறைந்த நிறையில் 'பாண்'

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில பாண் விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள் ஆகியவற்றில் விற்பனை செய்யப்படும் பாண் 450 கிராம் என்ற நிகர நிறைக்குக் குறைவாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

இனிவரும் காலங்களில் இவ்வாறு நிகர நிறைக்குக் குறைவாக பாண் விற்பனை செய்யப்படுமானால், குறிப்பிட்ட பாணைத் தயாரித்த வெதுப்பக உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச)

# இந்திய மீனவர்களை விடுதலை செய்தது நீதிமன்றம்

மன்னார், ஜூன் 12

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 46 பேரையும் நேற்று புதன்கிழமை மன்னார் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

தலைமன்னார் கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 46 இந்திய மீனவர்கள் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக கடந்த திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.




விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள்...

அதனையடுத்து மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் குறித்த 46 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை -இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைத்து இந்திய மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைவாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக மன்னார் நீதி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் பிரகாரம் 46 இந்திய மீனவர்களையும் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் விடுதலை செய்தார். (ச-56)



# இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம் நாளைய கனவுகள்

விமர்சனம்

நாளை தானொரு பெரிய வனாகி, நாட்டுக்கு முன் மாதிரியாக விளங்க வேண்டுமென்று கனவு காண்கின்றான்.

இளைஞர்கள் பொதுவாக நாளை நமதாக வேண்டுமென நம்பிக்கையோடு ஒவ்வொரு பொழுதையும் கழிக்கின்றார்கள். நாளை தானொரு பெரிய வனாகி, நாட்டுக்கு முன் மாதிரியாக விளங்க வேண்டுமென்று கனவு காண்கின்றான்.

டாக்டராக, பொறியியலாளராக, பேராசிரியராக, விஞ்ஞானியாக, விவசாயியர்க, தொழிலதிபராக, ஆன்மிகவாதியாக, அரசியல்வாதியாக, முதலமைச்சராக, ஆசிரியராக என்று தன்னைத் தானே முதன்மைப்படுத்தி துலங்கிய இலக்கை நோக்கி தன்னை தயார்ப்படுத்துவதும், வெற்றி காண்பதும் நாளைய கனவுகளின் வெளிப்பாடுகளேயாகும். நாளைய கனவுகளை மையப்படுத்தியே நடை, உடை, பாவனைகளை மட்டு மல்ல வதிவிடங்களையும், கலாசரத்தையும் மாற்றி, மும்மொழி கற்கையிலும், அதனது பயன்பாடுகளிலும் வெற்றி பெறுகிறார்கள்.

விஞ்ஞான, கணினி யுகத்தில் இளைஞர்கள் வாழ்வதனால் நாளைய கனவுகளின் அடிப்படையிலேதான் அவர்களால் வெற்றிபெற முடிகிறது. நேற்றைய நினைவுகளால் வெற்றி பெறாத நிலையில் நாளைய கனவுகளில் பயணித்து வெற்றி பெறுகின்றான்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................

முகவரி :-........................................

................ திகதி

................ கையொப்பம்

இளவல்கள் வட்டம் ,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நீங்களும் எழுதலாம்....

இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம்

நேற்றைய நினைவுகளா? நாளைய கனவுகளா?

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.


# அம்மா....

அன்பின் ஓவியமே
என் தாய்க் காவியமே
பத்து மாதம் சுமந்தாய்- அம்மா
தொப்பு ள் கொடி உறவில்
கருவறையிலேயே கண்டேன்
உன் அழகான திருவுருவை
அன்பிற்கு இலக்கணமே
அகிலத்தின் உயிர் மூச்சே
இரத்தத்தைப் பாலாக
ஊட்டினாய்- அம்மா
நெஞ்சோடு அரவணைத்துப்
பல கதைகள்.
சொன்னாய்- அம்மா
உன் மடியில் சேயாக தவழ்ந்த
நினைவுகள் என் இதயக்
கடலினுள் அலைகளாக
இன்றும் தாலாட்டுகின்றன-
இனி வரும் ஜென்மத்திலும்
உன் சேயாக பிறக்கும் வரம் வாங்கி
நிற்பேன் என் கரங்களில்
ஒளித் தீபம் ஏற்றி...

என். பிரின்ஷியா
சுதுமலை தெற்கு.
மானிப்பாய்



# அனுபவங்களே வெற்றிக்கு வழி



(கடந்த வாரத் தொடர்ச்சி...)

கவலைகளை ஜீரணிக்க முடியாமல் இருப்பதைத் தவிர்த்து நிகழ்கால வாழ்க்கையை மகிழ்ச்சியாக நடத்தக் கற்றுக்கொள்ளுங்கள்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரிடமும் சண்டை செய்யாதீர்கள். அந்தச் சண்டையில் நீங்கள் வெற்றி பெற வேண்டுமென நினைக்காதீர்கள். அந்த வெற்றி உங்களுக்கு எந்த விதத்திலும் பயன் தராது. மாறாக உங்கள் ஆணவத்தை மேம்படுத்தும். மற்றவர்களைப் புண்படுத்தி நண்பர்களிடையே பிரிவை உண்டாக்கும்.

ஓர் அப்பிள் பழத்துக்குள் எத்தனை விதைகள் இருக்கின்றன என்பதை நாம் சுலபமாய் சொல்லிவிட முடியும். ஆனால் ஒவ்வொரு விதைக்குள்ளும் எத்தனை அப்பிள் இருக்கின்றன என்பதை எவராலும் கூறமுடியாது. கண்ணுக்குத் தெரியாத எதிர்காலத்தை எண்ணி கலங்கிக் கொண்டிருக்காமல் நிகழ்காலத்தை மகிழ்ச்சியாக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

ஒருவர் நல்லவராக இருப்பதும் கெட்டவராக மாறுவதும் அவரவரது விருப்பத்தைச் சார்ந்தது மட்டுமல்ல அவரைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளைப் பொறுத்தும் இருக்கும்.

எனவே உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள். அது சில வேளைகளில் உங்களைத் தேடிவரும் பிரச்சினைகளுக்குத் தடுப்புச் சுவராகவும் இருக்கலாம்.

நான்
சதைப்பிண்டமாகத் தான்
போய் விட்டேன்- உன்
நினைவுகளை
இழந்ததால் அன்பே!
உனது வரவில்
அனுகூலங்களும்
அபத்தங்களும்
எதேட்சையானவை
உலகில் இழந்து போனால்
மீண்டும் கிடைக்காத பொருள்
நீ மட்டும் தான்.. !
உன்னோடு கடந்து போன
கணங்கள்
மீண்டும் வருவதேயில்லை...

எஸ்.தர்சி, சண்டிக்குளி







ஈபிள் கோபுரம் போன்று வடிவமைக்கப்பட்ட பிரமாண்டமான கேக்கின் தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள். நல்லூர் அம்மன் வீதியில் உள்ள யோகி அழகுக் கலை நிலையத்தில் நேற்று நடைபெற்ற கேக் கண்காட்சியின் போது வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (வ-21)

## 120 கோடி ரூபா செலவில் யாழில் கலாசார மண்டபம்

### கொழும்பில் உடன்படிக்கை கைச்சாத்து



யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு அருகில் உள்ள - முன்னர் திறந்தவெளி அரங்கு இருந்த பிரதேசத்தில் - இந்திய அரசு 120 கோடி ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்றை அமைக்கவிருக்கின்றது.

கொழும்பில் இதுதொடர்பான உடன்படிக்கை ஒன்றில் சில தினங்களுக்கு முன்னர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்னிலையில் அமைச்சின் செயலாளர் நிஹால் ஜெயதிலகவும், இந்தியத் தூதர் வை.கே.சின்ஹாவும் ஒப்பமிட்டனர்.

இந்திய கலாசார மண்டபம் அமைப்பதற்கான நிலத்தை யாழ். மாநகரசபை வழங்கி உதவுகின்றது. அடுத்த மூன்று வருட காலப்பகுதிக்குள் இந்தக் கட்டமைப்பு வேலைகள் பூர்த்தியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அருகில் உள்ள புல்லுக்குளமும் மிதக்கும் மேடை கொண்ட பண்பாட்டு இணைவு மையமாக அபிவிருத்தி செய்யப்படும் என்றும் கூறப் பட்டது.

புதிய கலாசார மண்டபம் உள்நாட்டு மற்றும் சர்வதேச கலாசார நிகழ்வுகளை நடத்தக் கூடிய மையமாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. திரையரங்கொன்றை ஒத்ததாக அமையும் இந்தக் கலாசார மண்டபம் 600 இருக்கைகளைக் கொண்டிருக்கும். அத்துடன் மண்டபத்தில் 'புரொஜெக்டர்' வசதியும் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# தனியார் காணிகளில் அகழப்படுகிறது மண்

## தடுத்து நிறுத்துமாறு வளலாய் மக்கள் பிரதேச செயலருக்கு மனு கையளிப்பு

அச்சுவேலி, ஜூன் 12

வளலாய் பகுதியில் தனியார் காணிகளில் இருந்து வளமான மண் சட்டவிரோதமான முறையில் அகழ்ந்தெடுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வளலாய் கிராம அபிவிருத்திச் சங்கம் வலி. கிழக்கு பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்து இவ்விதம் மண் அகழ்ந்து எடுத்துச் செல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

தனியார் காணிகளில் மண் கொள்ளை என்ற தலைப்பில் வளலாய் கிராம அபிவிருத்திச் சங்கம் பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வளலாய் வடக்கு, மேற்கு பகுதிகளில் இராணுவ வேலிக்கு அண்மையில் உள்ள தனியார் காணிகளில் இருந்து வளமான தோட்டமண் வெட்டி அள்ளப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இது சட்டவிரோத நடவடிக்கையாகும்.

எந்த மண்ணாக இருந்தாலும் உரிய அனுமதிப் பத்திரம் இன்றி எடுத்துச் செல்ல முடியாது. இதனை காணி உரிமையாளரும் கண்காணித்து தடுத்து நிறுத்த முடியாது. வளலாயில் உள்ள கத்துப்பிட்டியில் இருந்து பெருமளவு மண் அள்ளப்பட்டுள்ளது. இந்த மண் கொள்ளையால் வளமான தோட்ட நிலங்களை பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மண் சட்டவிரோதமாக அள்ளிச் செல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பதோடு மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

மேற்படி மண் கொள்ளை தொடர்பாக ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஆணையாளரும் வளலாய் கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவருமான வ.கந்தசாமி தகவல் தெரிவிக்கையில்;

"வளலாயில் பெருமளவு நிலம் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எஞ்சி இருக்கும் பகுதியில் இருந்து வளமான மண் திருட்டுத்தனமாக அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. இது பாதிக்கப்பட்ட வளலாய் மக்களை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது'' என்று தெரிவித்தார். (வ-11)

## தாக்குதல் சம்பவங்கள் மூவர் காயம்

தென்மராட்சி, ஜூன் 12

மந்துவில் மற்றும் மிருசுவில் பகுதிகளில் இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் மூவர் காயமடைந்தனர்.

மந்துவில் மேற்கில் இடம்பெற்ற தாக்குதலில் அதே இடத்தைச் சேர்ந்த தில்லைராசா சிவகரன் (வயது-32) என்பவரும்- மிருசுவில் வடக்கில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா சிவயோகராஜா (வயது -32) என்பவரும்- மந்துவில் வடக்கில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அன்ரனி ரஞ்சன் (வயது-17) என்பவரும் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவங்களில் காயமடைந்த மூவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

## வல்வெட்டித்துறை நகர சபையின் செயற்பாடுகள் தடைப்படும் நிலை

கரணவாய், ஜூன் 12

வல்வெட்டித்துறை நகர சபையின் கொடுப்பனவுகளுக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அங்கீகாரம் வழங்க மறுப்புத் தெரிவித்தமையால் சபை நடவடிக்கைகள் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வல்வெட்டித்துறை நகர சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் என்.அனந்தராசா தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் சபையின் நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கான பிரேரணை தலைவரால் முன்வைக்கப்பட்டது. அப்போது உப தலைவர் உட்பட மூவர் அந்தப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் அதற்கு எதிரான தீர்மானத்தையும் கொண்டு வந்தனர்.

இதன்போது சபையின் தலைவரான அனந்தராஜ், ம.மயூரன் ஆகியோர் ஆதரவாகவும், உப தலைவர் க.சதீஸ், உறுப்பினர்களான கோ.கருணானந்தராசா சூ.சே.குலநாயகம், சு.ஜெயராசா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி இந்திரன் - கைலாஜினி ஆகியோர் எதிராகவும் வாக்களித்ததுடன் இருவர் நடுநிலை வகித்தனர்.

இருந்த போதிலும் ஆளுங்கட்சி உறுப்பினர் சு.ஜெயராசா, எதிர்க்கட்சித் தலைவர் திருமதி இந்திரன் கைலாஜினி ஆகிய இருவரும், சபை ஊழியர்களுக்கான கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு ஆகியவற்றைத் தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இந்தக் கொடுப்பனவு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஏனைய மூவரும் ஏற்றுக் கொண்டனர்.

சபையின் ஏனைய கொடுப்பனவுகளுக்குச் சபை அங்கீகாரம் வழங்காததால் எதிர்காலத்தில் சபையின் செயற்பாடுகள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-108)

# வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவரை உடன் மாற்றவேண்டும்

## ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை

கரணவாய், ஜூன் 12

வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவரை உடனடியாக மாற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் சபைக்குரிய கொடுப்பனவுகள் எதனையும் வழங்க அனுமதியோம்.

இவ்வாறு வல்வெட்டித்துறை நகர சபையின் உபதலைவர் க.சதீஸ், உறுப்பினர்களான கோ.கருணானந்தராசா, சு.ஜெயராசா மற்றும் எதிரணித் தலைவர் திருமதி இந்திரன் கைலாஜினி ஆகியோர் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வல்வெட்டித்துறை நகர சபையின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நகர சபையின் உபதலைவர் க.சதீஸ் தலைமையில் உப தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவித்த உப தலைவர்;

**வல்வெட்டித்துறை நகர சபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்தே கட்சிக்குள் இழுபறி.**

வல்வெட்டித்துறை நகர சபையில் இடம்பெற்று வரும் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு இன்று (நேற்றுமுன்தினம்) கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதில்லை என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

தற்போது சபையை இயக்கும் தலைவர் சர்வாதிகாரப் போக்குடனும், எதேச்சதிகாரமாகவும் செயற்படுவதுடன், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக "தேசவிரோத சக்திகள்" என்னும் பட்டம் சூட்டி வருகின்றார்.

இது தொடர்பாக கட்சித் தலைமைக்கு பல தடவைகள் தெரியப்படுத்தி பல மாதங்கள் கடந்தும் இதுவரை நகர சபையின் தலைவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

நகர சபையின் தலைவர் தான் விரும்பிய இடங்களில் மட்டும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றார். ஆனால் உப தலைவராகிய என்னாலோ, அல்லது ஏனைய உறுப்பினர்களாலோ முன்வைக்கப்படும் முன்மொழிவுகளை நிறைவேற்ற அவர் அனுமதிப்பதில்லை. இதனால் எம்மை நம்பி வாக்களித்த மக்களுக்குசரியான சேவையை வழங்க முடியாதுள்ளது-என்றார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் கைலாஜினி கூறியதாவது:-

வல்வெட்டித்துறை நகர சபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்தே கட்சிக்குள் இழுபறி நிலை காணப்பட்டது. இரண்டு தடவைகள் வரவு-செலவுத் திட்டம் ஆளும் கட்சி உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்ட போதும், எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய நாம் தலைவருக்கு ஆதரவாக வாக்களித்தோம்.

ஆனால் தலைவரின் மோசடிகளையும் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளையும் இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அதனாலேயே தற்போது எதிர்த்து வாக்களித்துள்ளோம்.

நகர சபையின் இன்றைய நிலைக்குக் காரணம் முதுகெலும்பில்லாத கூட்டமைப்பின் தலைமையே ஆகும். மக்களுக்கு சேவை செய்யவே நாம் தெரிவு செய்யப்பட்டோம். தேர்தல் காலங்களில் மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கும் கூட்டமைப்பின் தலைமையும் அதன் உறுப்பினர்களும் இவ்வாறு பக்கச் சார்பாகச் செயற்படுகின்றமை அருவருக்கத்தக்கது-என்றார். (த-108)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா. குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பும் மறைந்துள்ள இராஜதந்திர வியூகங்களும்

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு தாம் தயாராகிவிட்டார் என்றும், இதற்கு இலங்கை அரசு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்துள்ள கோரிக்கையை ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரிய சிங்க நிரா கரித்துள்ளார். இந்நிலையில்.ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு அனுமதி வழங்குவது பற்றி தீர்மானம் எடுக்கும் பொறுப்பை தான் நாடாளுமன் றத்திடம் ஒப்படைக்கவுள்ளார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். எனவே, ஐ.நா. விசாரணைக் குழு தொடர்பில் இலங்கைப் பிரதிநிதி ஜெனிவாவில் வெளியிட்ட கருத்துக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளூரில் வெளியிட்ட கருத்துக்குமிடையில் முரண்பாடு காணப்படுகின்றது.

ஜெனிவாத் தீர்மானத்தை நிராகரிப்பதாகவும்.ஐ.நா. விசாரணைக்கு இட மளிக்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் அரசு உறுதியாக இருப்பதாகவும் இதுவரை காலமும் இடித்துரைத்துவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது விடயத்தில் தனது நிலைப்பாட்டை திடீரென மாற்றிக் கொண்டு, முடிவெடுக்கும் அதிகாரத்தை ஏன் நாடாளுமன்றத்திடம் ஒப்படைப்பதற்கு உத்தேசித்துள்ளார் என்று பலதரப்பினரும் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும் பான்மைப் பலத்தைக் கொண்டிருப்பதால், தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டுமானால்.அதை இலகுவாக செய்துமுடிக்க முடியும். அதில் எவ்வித சட்ட சிக்கலும் ஏற்படாது. அத்துடன், அரசுக்கு பாதகமான விடயங்களை தடுத்து நிறுத்துவதற்கான சக்தியும் கூட்டணி அரசிடம் இருக்கின்றது.

எனவே, ஜனாதிபதியின் மேற்படி முடிவில் பல இராஜதந்திர-அரசியல் வியூ கங்கள் இருக்கின்றன என்றே எண்ணத்தோன்றுகின்றது. அதாவது, ஐ.நா.சபையில் உறுப்புரிமை பெற்றுள்ளதால், ஐ.நாவின் கீழ் இயங்கும் சபைகளில் எடுக்கப்படும் முடிவுகளை இலங்கையால் இலகுவில் தட்டிக் கழித்துவிட முடியாது. அவ்வாறு செய்தால் அது அரசுக்கு பாதகமாகவே அமையும். அத்துடன், பொது நலவாய அமைப்புக்கான தலைமைப் பத வியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வகிக்கையில்.ஐநா.வின் முடிவுகளை இலங்கை அலட்சியப்படுத்தினால் அது பொதுநலவாய கோட்பாடுகளை மீறும் செயலாக அமைந்துவிடும். ஆகவே, ஐ.நா. விசாரணையை நிரா கரிக்கவும் வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் சர்வதேச ரீதியில் உருவாகும் அழுத்தங்களையும் சமாளிக்க வேண்டும் என்பதே ஜனா திபதியின் திட்டம்.

குறிப்பாக நாட்டில் அதியுயர் சபையான நாடாளுமன்றில் தான் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சர்வதேச கொள்கைகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமானாலும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் அவசியம். நாடாளுமன்றம் அங்கீகரிக்காத ஒன்றை அரசால் பலவந்தமாக செய்யமுடியாது. எனவே, ஜனாதிபதி தலைமையிலான கூட்டணி அரசிடம் மூன்றிலிரண்டு பெரும் பான்மை பலமிருப்பதால்.ஐ.நா.விசாரணைக்குழுவுக்கு இலங்கையில் அனுமதியில்லை என்று இலகுவில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிவிடலாம். இதற்கு எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கக்கூடும். ஐ.நா. குழுவுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றிய பின்னர், அழுத்தங்கள் எழும் பட்சத்தில், நாடாளுமன்றத்தின் ஒப்புதலை மீறி தன்னால் எதுவும் செய்யமுடியாது என்றும், ஐ.நா. பலவந்தமாக தலையிட்டால் அது நாட்டின் இறைமையை மீறும் செயலாகும் எனவும் கூறி அழுத்தங்களை சமாளித்து விடலாம் என்பதே ஜனாதிபதியின் அறி விப்பின் நோக்கமாகும் என்று புத்திஜீவிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதேவேளை, இவ்வாறான வியூகங்கள் மூலம் ஐ.நா.விசாரணைக் குழுவை நாட்டுக்குள் வரவிடாமல் அரசு தடுக்கும் பட்சத்தில், எதிர்காலத்தில் பெரும் நெருக்கடிகள் ஏற்படலாம் என்பதும் நிராகரிக்க முடிய்ாத உண்மை யாகும்.

ஐ.நா. விசாரணைக்கு அஞ்சவேண்டி தேவை இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்கு பொருளாதாரத் தடை விதிக்கும் அதிகாரம் இல்லை என்பதுடன், இலங்கைக்கு எதிராக காத்திரமான நடவடிக் கைகளையும் எடுக்கமுடியாது. எனினும், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கைமீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மேற்படி ஆணையகம் பாதுகாப்பு சபைக்கு அனுப் பினால்கூட , அங்கு இலங்கைக்கு சிக்கல்கள் ஏற்படா.

எனவே, எவ்வித குற்றமும் இழைக்கவில்லை எனக் கூறும் அரசு, அச் சமில்லாமல் ஐ.நா. விசாரணைக்குழுவை நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் சர்வதேச அழுத்தங்களிலிருந்து அரசு விடுபடலாம்.மாறாக, விசாரணைக்குழுவுக்கு கதவடைத்தால், எதிர் காலத்தில் அது மேலும் பல சர்வதேச அழுத்தங்களுக்கு வழிவகுக்கும் காரணியாக அமைந்துவிடும்.

அத்துடன், இலங்கை அரசு, ஐ.நா. கொள்கைகளை மீறுகின்றது என சுட்டிக்காட்டி சில நாடுகள் தனிப்பட்ட ரீதியில் இலங்கைக்கு எதிராக தடைகளை விதிக்கூடும். உலகை பகைத்துக்கொண்டு தனித்து எதையும் செய்யமுடியாது. எனவே,நாட்டின் எதிர்காலத்தையும், சர்வதேச உற வுகளையும் கருத்திற்கொண்டு இது விடயத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக, அரசியல் பேதங்களுக்கு அப்பால் அரசு சிறந்த முடிவை எடுக்க வேண்டும்.

# குழம்பிய நிலையில் தமிழக அரசியல் கட்சிகள்

## ஜெயாவின் அதிரடியால் கலக்கம்

சேரலாதன்



தமிழ் நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் விஸ்வரூபமெடுத்து பெருவெற்றியைப் பெற்றுக் கொண்டமை ஜெயலலிதாவுக்கு எதிரான சக்திகளுக்குப் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.கவே ஏனைய கட்சிகளை விட தேர்தல் முடிவுகளால் ஆடிப் போய் விட்டதைக் காண முடிகின்றது. ஆகக் குறைந்தது 10 ஆசனங்களாவது கிடைக்குமென எதிர்பார்த்த அந்தக் கட்சியினால் ஓர் ஆசனத்தைக் கூடப் பெற முடியவில்லை. இதற்கு கருணாநிதி குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளே காரணமெனக் கூறப்பட்டாலும் அதனை முழுதாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஜெயலலிதா வகுத்த வியூகங்கள், பணபலம், கட்டுக்கோப்புடன் செயற்பட்ட கட்சித் தொண்டர்களின் அர்ப்பணிப்பு மிகுந்த செயற்பாடுகள் என்பன அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்று ஜெயலலிதாவை அரசியலில் நன்கு மதிக்கத்தக்க ஒருவராக மாற்றியுள்ளன.



மத்தியில் அமோக வெற்றி பெற்று பிரதமர் பதவியில் அமர்ந்துள்ள நரேந்திர மோடி பெருவிருப்புடன் வரவேற்கும் ஓர் அரசியல் கட்சியொன்றின் தலைவராக ஜெயலலிதா உயர்ந்துள்ளார். இந்த மதிப்பும், மரியாதையும் அவரைத் தானாகவே தேடிவந்தவையல்ல. ஒரு முக்கியமான மாநிலத்தின் முதல்வர் என்பதற்கு அப்பால் நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள ஆசனங்களில் 95 வீதத்தை அதாவது 39 இற்கு 37 என்ற வகையில் வழித்து எடுத்துக் கொண்டவர் என்பது அவருக்குள்ள சார்பான அம்சமாகும். பழம் பெருமை வாய்ந்ததும் தேசிய அளவிலான கட்சியுமான காங்கிரஸ் 44 ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள ஜெயலலிதாவின் கட்சி 37 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஒரு மாநிலக் கட்சி இத்தகையதொரு சாதனை புரிந்தமை பாராட்டுதற்குரியது.

மத்திய அரசை அமைப்பதில் இழுபறி நிலை இருந்திருக்குமேயானால் ஜெயலலிதாவின் பிரதமராகும் கனவு நனவாக மாறியிருக்கும். தமிழர் ஒருவர் பிரதமர் பதவியில் அமரக் கூடாது என்பது இந்தியாவின் தலைவிதி போலும் ஜெயலலிதாவின் கனவு கனவாகவே போய்விட்டது. இதற்கு முன்னர் நரசிம்மராவ், தேவகௌடா, மன்மோகன் சிங் போன்ற சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் பிரதமர் பதவியில் அமர்ந்தமை குறிப்பிடத்தக்கது. முன்னர் இத்தகையதொரு சந்தர்ப்பம் காமராஜர், கருப்பையா மூப்பனார் ஆகியோருக்கு வாய்த்த போதிலும் அது நிறைவேறாமலேயே போய்விட்டது.

பிரதமர் பதவி கிடைக்காத போதிலும் இனிவரும் ஆண்டுகள் ஜெயலலிதாவுக்கு வாய்ப்பானவையாகவே அமையப் போகின்றன.

ஆனால் ஜெயலலிதாவின் பரம வைரியான கலைஞரின் நிலைதான் பரிதாபகரமான கட்டத்தை எட்டியுள்ளது. ஊழல் தொடர்பான வழக்குகள், குடும்பப் பிரச்சினை, நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்ததால் கட்சித் தொண்டர்களிடையே ஏற்பட்டுள்ள விரக்தி நிலை, அடுத்த முறையாவது தமிழ் நாட்டில் ஆட்சியை அமைத்துவிட முடியுமென்ற நம்பிக்கை மெல்ல மெல்ல நழுவிப் போகும் நிலை, வயது காரணமாக ஏற்பட்ட தள்ளாமை என்பன அவரது கட்சியைப் பொறுத்தவரை பாதகமான விடயங்களாகவே மாறியுள்ளன. அவருக்குப் பின் கட்சியை வழிநடத்திச் செல்லக் கூடிய தலைவர் ஒருவர் தி.மு.கவில் இல்லையென்பதை உறுதியாகக் கூற முடியும். கலைஞர் தமக்குப் பின்னர் ஸ்ராலினே எல்லாமென சூசகமாகத் தெரிவித்துள்ள போதிலும் ஸ்ராலினைத் தலைவராக ஏற்றுக் கொள்வதில் முழு ஒத்துழைப்புக் கிடைக்க மாட்டாது என்பதை கலைஞரின் இன்னொரு வாரிசான அழகிரியின் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆகவே இனிவரும் காலங்கள் கலைஞருக்கும் அவரது தலைமையிலான தி.மு.கவுக்கும் சோதனை மிகுந்ததாகவே அமையப் போகின்றது. இது ஜெயலலிதாவுக்கு பெரும் வாய்ப்பை ஏற்படுத்திவிடப் போகின்றது.

தமிழ்நாடுகாங்கிரஸ் கட்சியின் நிலை உலக்கை தேய்ந்து உளிப்பிடி யான கதையாகி விட்டது. பெருந் தலைவர் காமராஜர் போன்றவர்களின் தியாகத்தினாலும், தன்னலமற்ற உழைப்பினாலும் தமிழ் நாட்டில் அசைக்க முடியாததொரு சக்தியாக இருந்த அந்தக் கட்சி தற்போது அவமானத்தில் தலை கவிழ்ந்து நிற்கின்றது. வார்த்தைக்கு வார்த்தை அன்னை சோனியாவின் பெயரை உச்சரிப்பதிலேயே பொழுதைக் கழித்த காங்கிரஸார் தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதில் அக்கறை காட்ட வில்லை. தமக்கென தனியானதொரு கொள்கை யும் இவர்களிடம் இல்லை. வட நாட்டில் இருக்கும் தமது கட்சி எஜமானர்களின் பாதங்களைக் கழுவு வதிலேயே இவர்கள் இன்பம் கண்டனர். ஈழத் தமிழர்களின் அவலங்களை ஏறிட்டுக் கூடப் பார்க்க விரும்பாத இவர்கள் இறுதிப் போரில் இலங்கை அரசு பெற்ற வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந் தனர். ஓர் இன உணர்வுகூட இவர்களிடம் காணப்படவில்லை. ஞானதேசிகன் போன்ற கற்றுக்குட்டிகள் தமிழ்நாட்டில் அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் பரிதாப நிலை இன்று காணப்படுகின்றது. தமிழ் நாட்டின் ஆட்சியைப் பிடிப்போம் என்ற கோசத்தை மட்டுமே எழுப்பிக் கொள்ளும் இவர்கள் அடுத்த தமிழ் நாடு சட்டமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டால் ஓர் ஆசனம் கூடக் கிடைக்காது என்பதுதான் உண்மை நிலையாகும். ம.தி.மு.க. தலைவர் வைகோ, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆகியோர் ஈழத் தமிழர்களின் மீது எப்போதுமே மாறாத பரிவும், அனுதாபமும் கொண்டவர்கள். ஈழத் தமிழரின் துயர் கண்டு துடித்தவர்கள், பதைத்தவர்கள். உரக்கக் குரல் கொடுத்தவர்கள். உலக அளவில் ஈழத்தமிழரின் பிரச்சினைகளை எடுத்துச் செல்வதில் இவர்களின் பங்கு அளப்பரியது. ஆனால் அரசியல் ரீதியில் இவர்கள் பிரிந்து நிற்கின்றனர். தமக்கென தனியானதொரு கொள்கையை வகுத்துச் செயற்படுகின்றனர். ஆனால் தேர்தல்கள் வரும்போது கூட்டணி அமைப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மோடியின் தலைமையை ஏற்றுக்கொண்ட இவர்கள் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்துப் போட்டியிட்டனர். விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி. கவுக்கு பா.ஜ.கவை விட அதிக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் படுதோல்வியையே இவர்கள் சந்தித்தனர். ராமதாஸின் மகனான அன்புமணி ஒருவர் மட்டுமே தேர்தலில் வெற்றி பெற்றார். வைக்கோவும் அவரது கட்சியும் தோல்வியைத் த்விர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதும், விஜய காந்தின் கட்சி ஓர் ஆசனத்தைக் கூடப் பெறமுடியாது தோல்வியில் துவண்டதும் பழைய கதையாகிவிட்டது.

ஈழத் தமிழரின் துயர் கண்டு துடித்தவர்கள், பதைத்தவர்கள், உரக்க குரல் கொடுத்தவர்கள் உலக அளவில் ஈழத்தமிழரின் பிரச்சினைகளை எடுத்துச் செல்வதில் இவர்களின் பங்கு அளப்பரியது. ஆனால் அரசியல் ரீதியில் இவர்கள் பிரிந்து நிற்கின்றனர்.

ஆகவே இன்றைய தமிழ்நாட்டின் அரசியல் நிலைமை கணிக்க முடியாத தொரு நிலையை எட்டிவிட்டது என்றுதான் கூற முடியும். அடுத்து இடம்பெறப் போகும் சட்ட மன்றத் தேர்தலிலும் காட்சிகள் பல மாறலாம். புதிய புதிய கூட்டணிகள் உருவாகலாம். அரசியலில் நிரந்தரமான நண்பர்களும் இல்லை. எதிரிகளும் இல்லை என்ற வாதத்தின் அடிப்படையில் நாளைய நிலைமையை நாளையேதான் கூறமுடியும்.

▪ லக்ஸ்மன்

# அல்லைப்பிட்டியில் வளர்ந்து வரும் தொழிலாக மெழுகுவர்த்தி உற்பத்தி

தொழில் பயிற்சி என்று எதையும் விசேடமாகப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் மெழுகுவர்த்தியை உற்பத்தி செய்யும் போது நான் அதை அவதானித்திருக்கிறேன். இதில் நானும் ஈடுபட்டால் என்ன என்ற எண்ணம் எனது மனதில் தோன்றியதால் அதை பகுதி நேர சிறு தொழிலாக ஆரம்பித்தேன் என்று தனது தொழில் முயற்சி பற்றிக் கூறுகிறார். திருமதி அ.சி.இமாக்குவேற்கு (மல்லிகா).

அல்லைப்பிட்டியில் உள்ளூர் வளங்களைக் கொண்டு சில பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும் இதில் ஈடுபடுவதில் இங்குள்ளவர்கள் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. பன்ன வேலை, தையல் பயிற்சி ஆகியவற்றைப் பெற்றவர்கள் இவற்றில் ஈடுபடுவதில் ஆர் வம் காட்டுவதில்லை. அல்லைப்பிட்டியில் மட்டுமல்ல ஏனைய தீவுப் பகுதிகளிலும் இதே நிலையே காணப்படுகின்றது.

அல்லைப்பிட்டியில் இரண்டொருவர் மெழுகுவர்த்தி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைச் சந்தித்து மெழுகுவர்த்தி தயாரிப்பது தொடர்பாகக் கேட்டபோது, ஏதாவது ஒரு சிறு தொழில் முயற்சியாவது நம்மிடம் இருந்தால் தான் குடும்பச் சுமைகளைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும் எனக் கூறினார் திருமதி ர.கொன்சலேட். இவர் தமது கணவரிடமே மெழுகுவர்த்தி உற்பத்தி செய்வது தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுள்ளார்.

ஒரு கிலோ மெழுகை 40 ரூபா முதல் 50 ரூபா வரை கொடுத்து வாங்குகின்றோம். தேவாலயங்களிலும் அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

பிரபலமான கோயில்களில் மெழுகை அதிகளவில் பெற்றுக் கொள்ள முடியும். மெழுகுகளுடன் தேவையான பொருள்களையும் கலந்து மெழுகுவர்த்தியை உற்பத்தி செய்கின்றோம். ஒரு கிலோ மெழுகில் இரண்டு



தினமும் 25 கட்டு மெழுகுவர்த்தி உற்பத்தி செய்யக் கூடியதாக உள்ளதாகவும் தடையின்றி மெழுகு கிடைத்தால் இந்தத் தொழிலை விஸ்தரிக்க முடியுமெனவும் கொன்சலேட் கூறுகிறார். மெழுகுவர்த்தி உற்பத்தியில் செலவுகள் போக மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா வரை இலாபம் கிடைப்பதாகவும் அவர் கூறுகிறார்.





பெட்டிகள் கொள்ளளவு கொண்ட மெழுகுவர்த்திகளை உற்பத்தி செய்யலாம். புதிய மெழுகை வாங்குவதை விட பழைய மெழுகில் உற்பத்தியை மேற்கொள்வதால் கணிசமான இலாபத்தைப் பெறமுடியும் என்றும் இவர்கள் தெரிவித்தனர். மானிப்பாய் அந்தோனியார் தேவாலயத்தில் மெழுகைக் கொள்வனவு செய்வதுடன் தனது உற்பத்தியில் பெரும் பகுதியையும் அங்கேயே விற்பனை செய்வதாகவும் தனக்கு மெழுகுவர்த்திக்கான ஓடர்கள் கிடைப்பதால் மூன்று யுவதிகளை உதவிக்கு வைத்திருப்பதாகவும் கூறும் கொன்சலேட் கச்சதீவு, பாலைதீவு அந்தோனியார் கோயில்களில் இருந்தும் தமக்கு மெழுகு கிடைப்பதாகத் கூறுகிறார்.

தினமும் 25 கட்டு மெழுகுவர்த்தி உற்பத்தி செய்யக் கூடியதாக உள்ளதாகவும் தடையின்றி மெழுகு கிடைத்தால் இந்தத் தொழிலை விஸ்தரிக்க முடியுமெனவும் கொன்சலேட் கூறுகிறார். மெழுகுவர்த்தி உற்பத்தியில் செலவுகள் போக மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா வரை இலாபம் கிடைப்பதாகவும் அவர் கூறுகிறார்.

இமாக்குவேற் தனது வீட்டு வேலைகளுடன் மேலதிக வேலையாகவே இதனை மேற்கொண்டு வருகின்றார். இதனால் செலவுகள் போக மாதாந்தம் 7 ஆயிரம் ரூபா முதல் 8 ஆயிரம் ரூபா வரையே இலாபம் கிடைப்பதாக அவர் கூறுகிறார்.

போட்டி பொறாமைகளின்றி அல்லைப்பிட்டியில் ஓரளவு வளர்ச்சி கண்டு வரும் கைத்தொழிலாக மெழுகுவர்த்தி உற்பத்தி இடம்பெறுகின்றது. தற்சமயம் அல்லைப்பிட்டியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு கைத்தொழில் முயற்சி இது என்பதால் உள்ளூர் கடைகளிலும் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். வெளியிடங்களிலும் விற்பனைக்காக வழங்கப்படுகின்றது.

பனைவளம் பயன்படுத்தப்படாத நிலையில் கடற்றொழிலும் பெரிய அளவில் கைகொடுக்கவில்லை எனக் கவலைப்படும் நிலையில் வளர்ந்து வரும் மெழுகுவர்த்தி உற்பத்திக்கு ஊக்குவிப்பு வழங்கும் பட்சத்தில் இந்தக் கைத்தொழில் கணிசமான பயனை அந்தப் பகுதிக்கு வழங்க முடியும் என்பது ஏற்கக் கூடியதே.

## வாசகர் திருமுகம்

### பிரதேச செயலரின் பெரும் பண்பாடு

பொது மக்களின் நிதி உதவியுடன் நடைபெறும் பண்பாட்டு விழாவில் பிரதேச செயலர் தலையிட்டு மத்திய மாகாண என்ற வேறுபாட்டைக் கையாண்டு தனது சுயரூபத்தை வெளிப்படுத்தியுள்ளார். இதற்கான அதிகாரம் இவருக்கு யாரால் வழங்கப்பட்டது?

அச்சுவேலியில் உள்ள ஏழு கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய "அச்சுவேலி பிரதேச பண்பாட்டு மன்றத்தால்" ஏற்பாடு செய்யப்பட்ட பண்பாட்டு விழாவை கடந்த வருடம் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பண்பாட்டு விழாவுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

முதலமைச்சர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டதை அறிந்த பிரதேச செயலர் "முதலமைச்சரை அழைப்பதால் எனக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் வந்தால் நானும் வரமாட்டேன். கிராம அலுவலர்களோ சமுர்த்தி உத்தியோகத்தர்களோ கலந்து கொள்ளமாட்டார்கள்" எனக் கூறியதை அடுத்து விழா திட்டமிட்டபடி உரிய தினத்தில் நடைபெறாது ஒத்திவைக்கப்பட்டது.

பிரதேச செயலரின் கண்டிப்பான மிரட்டலால் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை பிரதம விருந்தினராக அழைக்காமல் இந்த மாதம் பண்பாட்டு விழாவை நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

பிரதேச செயலருக்கு இந்த அதிகாரம் யாரால் வழங்கப்பட்டது? முதலமைச்சருக்கு எதிராக செயற்படுவதால் உள்ள சுயலாபம் என்ன? இது தான் பண்பாடா?

கே.சுப்பிரமணியம்,
அச்சுவேலியூரான்.



### பறிபோனது பிஞ்சுகளின் மகிழ்ச்சி

தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பிரபல கல்லூரியொன்றில் ஒரு வகுப்பறையில் நான்கு மாணவர்கள் மட்டும் இருந்தமை ஆச்சரியமளித்தது.

விசாரித்தபொழுது தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சிக்கு மாணவர்களை அழைத்துச் செல்ல தலா 200 ரூபா அறவிட்டதாகவும் மேற்படி நான்கு மாணவர்களும் பணத்தைச் செலுத்த வசதியில்லாததால் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகளில் மாணவர்கள் அனைவரும் ஒரேமாதிரியான ஆடை அணிய வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளமை தூய்மையோடு சமத்துவத்தை மாணவரிடையே ஏற்படுத்தி மனவுறுதியை நிலைப்படுத்துவதற்காகவே. ஆனால் மேற்கூறிய செயற்பாடு மாணவ சமத்துவத்தை மீறுகின்றது. மாணவ மனவெழுச்சியை மழுங்கடிக்கின்றது. ஆசிரியர்கள் மாணவர்கள் மீது முழுமையான அன்போடு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். 800 ரூபாவை (4X200) ஒரு நபரால் உழைக்கலாம். ஆனால் உடைந்த பிஞ்சுகளின் மனதை 800 மில்லியன் ரூபா செலவழித்தாலும் சீர்செய்ய முடியாது. உணர்க ஆசிரியர்கள்- இவ்வுலகில் வளர்க ஆசிரியத் தொழில்.

இப்படிக்கு
"ஞானோதயன்"

# சுழிபுரம் - பறாளாய் அருள்மிகு ஸ்ரீ சி

# தேர்த்திருவிழா சிறப்பு



### எழில் ம

அருள் மழை பொழியும் ஆறு திருமுகங்களு
தாமரைகளும், மணமுடைய குவளை மலர்மாலை
திருத்தோள்களும், பெரும் வரங்களை அடியார்க்கு
அழகிய பன்னிரு திருக்கரங்களும் மயக்கத்தால் வ
தலால் சிவந்தமலர் போன்ற திருவடிகளும் உடை
மகனே! குகனே! கனியே! கண்ணின் மணியே! கரு
ஜோதியாய் சுடர் விடும் ஒளியே! மயில் வாகனே
வனே! துதிச் சொற்களுக்கு இனிமை பயப்பவனே
பதியின் தலைவனே! பக்தியினால் கண்களிலிருந்து
கின்ற அடியார்களுக்கு அமுதே! முன்னைத் தீவினை
பொடிபடும்படியாக நடம் பயில்கின்ற மயிலை வா
வாசனை வீசுகின்ற தாமரையுள்ள சரவணப் பொ
வெற்பும், செங்கழுநீர் உதிக்கின்ற திருத்தணியும்,
மும், திருவேரகமும், சோலைமலையும், திருபரங்கு
திருவேங்கடமலையும் குற்றால மலையும், இலஞ்
குன்றுகள்தோறும் விளையாடி திருச்செந்தில் நகரி
முருகா! கருணைக்கடலே! அந்தமில் அரசே! அன்ப
அன்பின் வடிவே! அருட்பெருஞ் சோதி! ஆருயி
பேரானந்தப் பெருங்கடலே! பிறப்பறுக்கும் பெரு
வள்ளலே! தேனமுதாகிய தித்திக்குந் தீந்தமிழ்! தே
கோபுரத்தினின்றும் வீழ்ந்த அருணகிரியாரை ஆட்
திலகமே! சிவனார் தம்திருவே வேதம் நான்கினும்
தீர்க்கும் வேலவா குன்று தோறாடும் குமரா! கந்த
கருணாகரா! கார்த்திகேயா! கண்ணின் மணியே!
சிறை மீட்ட அண்ணலே! எண்ணுதற்கரிய வண்ணக்
இன்பத்தின் எல்லையே! ஏழிசைப் பயனே அ
மலையே! சிவகுருபரா, சிலம்பா! தேசிகா! பாலசுப்

## ஆனந்தம் தந்திட தேர் ஏறிவருகின்றான்

சகல செல்வங்களும் நிறைந்த சுழிபுரப் பதியில் வந்த வினையும் வருகின்ற வல்வினையும் போக்கவல்ல பறாளாயம்பதி முருகன் இன்று தேர் ஏறி வருகின்ற கண்கொள்ளாக் காட்சி ஆனந்தத்தைத் தருகின்றது.

இந்த ஆலயத்தில் எமது தொண்டர் சபையினர் சகல தொண்டுகளையும் செய்து வருகின்றனர். குறிப்பாக மஹோற்சவ காலங்களில் அன்னதானம் சகல அடியார்களுக்கும் சிறப்பாக வழங்கப்படுகின்றது. தாக சாந்தியும் சிறப்பாக நடைபெறுகின்றது.

எமது தொண்டுக்கு சகல வழிகளாலும் அடியார்கள் உதவி செய்து வருகின்றார்கள். சகல அடியார்களும் பறாளாய் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வேண்டுகின்றோம்.

தொண்டர் சபையினர்,
தலைவர் க.கமலநாதன்
பறாளாய், சுழிபுரம்.

## மஹோற்சவ குருவின் ஆசியுரை

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய வற்றால் சிறப்புற்றுத் திகழும் முருக தலம் பறாளாயம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம் ஆகும். ஆறுபடை வீடுகளைத் தரிசிக்கும் வகையில் ஆலய முகவாயில் எழில் கொஞ்சும் விதமாக அழகாக காட்சியளிக்கின்ற இத்திருக் கோயிலில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணியரின் தேர் மஹோற்சவம் இன்றாகும். அலைகடலென திரளும் பக்தர் கூட்டமும் எண்ணிலடங்காத பிரதட்டை, அங்கப்பிரதட்டை அடியார்கள் வானத்து தேவர்களையே மிரள வைக்கும் அளவுக்கு அரோஹரா கோசத்தின் மத்தியில் முருகப் பெருமான் இன்று இரதமேறப் போகின்றார்.

அத்துடன், திருவடிநிலை புனித சமுத்திரத்தில் நிகழ இருக்கின்ற தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும். எமது முருகப் பெருமானது திவ்ய மஹோற்சவப் பேரருள் அனைவருக்கும் சித்திக்க முருகப்பெருமான்து பாதக் கமலங்களை வணங்கி ஆசீர்வதிக்கின்றேன்.

ஸ்ரீவத்ஸ
வ.இராஜேஸ்வர குருக்கள்.
குடியிருப்பு சுழிபுரம்.

## ஷண்முகனைக்காண இருகண்கள்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சி புக்களையு
ளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் வருடா
பத்துத் தினங்களாக நடைபெற்று இன்று இரதோ
கின்றது. அந் தணர்கள் வேதம் ஓத, நாதஸ்வரத் தவில்
திருவாசக கோஷங்களோடு அடியார்கள் புடைசூழ
தேரில் வரும் காட்சியைக்காண இரு கண்கள் போதா
வேண்டுவதை எல்லாம் தந்து அடியார்கள் துயர்போக்
முருகன். அவனது அருளை வேண்டி ஆயிரக்கணக்கா
வந்து முருகனது திருக்கோலத்தைக் கண்டுகளிப்
பெருமான் தன்னைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு அ
அவர்களது துயர்களைப் போக்கி நல்வாழ்வு தருவான்
இரதோற்சவம் காணவரும் அடியார்களுக்கு ஷண்முக
வருள் கிடைக்க முருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஸர்வே ஜனா சுகினோபவந்து
கந்தன் கருணை மகத்தானது.

மு.பாலகுருசாமி சர்மா, ஆலய

சேவற்கொடியோனே முருகா சரணம்!
சேவடி காப்பவனே முருகா சரணம்!!

தேர்த் திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போரும் அனுசரணையாளர்களும்

- நாளை (13.06.2014) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருவடிநிலையில் தீர்த்
- 20.06.2014 வெள்ளிக்கிழமை காலை 9.00 சங்காபிஷேகம், நவோத்ர சகஷ்ட சங்காபிஷே (1008) மூலஸ்தானம்.
- அஸ்தோத்திர சத சங்காபிஷேகம் (108) சன்

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!
வெற்றி வேல் முருகா அரோஹரா
ஸ்ரீ அம்பாள் குறோசறிஸ்
எங்களிடம் சகல பொருள்களும்
தரமாகவும் மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
பண்டத்தரிப்பு

உங்களை அழகுபடுத்தும்
நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
S.K.T
மகாலட்சுமி ஜூவலர்ஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பாக்கியரத்தினம்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
163, 165 பிரதான வீதி,
சங்கானை.
கிளை :
தரன் றேடர்ஸ்
130, 132 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2664

நகுலேஸ்
ஹாட்வெயர் ஸ்ரோ
சித்தன்கேணி வீதி, பண்டத்த

புத்தம் புதிய புடைவை வகைகளுக்கும்
அழகு சாதனப் பொருள்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்
முத்துமாரி
புடைவை பான்சி பலஸ்
பண்டத்தரிப்பு.

சகல வகையான புடைவை
வகைகளையும் பெற்றுக்கொள்ள
விநாயகர்
பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.

பலசரக்குப்பொருள்களை
நியாய விலையில் பெற்றிட...
கந்தசாமி அன்சன்ஸ்
பல்பொருள் வணிக நிலையம்
பிரதான வீதி, சங்கானை.

நவநாகரிக பட்டுப்புடைவைகளை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
புதிய அபிராமி
புடைவை மாளிகை
பிரதான வீதி. சங்கானை.

குமார்
ஸ்ரோர்ஸ்
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

ஈஸ்வரா
நெற் கபே
ஈஸ்வரா பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, சுழிபுரம்.

கலைமகள் விலாஸ்
சைவ உணவகம்,
பிரதான வீதி, சங்கானை.

பாபு
களஞ்சியம்
சுழிபுரம் மேற்கு, பெரியதம்பிரான்
கோயில் வீதி, சுழிபுரம்.


கலைவா
111 - B, கஸ்தூரி
யாழ்ப்பாண

(39630)(10.6.3)

# நீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்

# ப்பு மலர் 12.06.2014

## வியாழன்



### எழில் மிகு பறாளாய் முருகனை காண வாரீர்

திருமுகங்களும், மலர்ந்த பன்னிரு விழித்
ன மலர்மாலை பொலிவுற்ற மலை யொத்த
னை அடியார்க்கு அருளவேண்டி நீண்டுள்ள
மயக்கத்தால் வரும் இரு வினையையும் மிதித்
டிகளும் உடைய கங்கையின் ஒப்பற்ற திரு
மணியே!கருணையே குடி கொண்டவனே!
மயில் வாகனனே! கடப்ப மாலை அணிந்த
ம பயப்பவனே! தமிழின் அழகே! பழனிப்
கண்களிலிருந்து நீர்பெருக உன்னைத் தொழு
னைத் தீவினைகளும் ஏனைய தீவினைகளும்
மயிலை வாகனமாகக் கொண்ட கடவுளே!
சரவணப் பொய்கையும்! கந்தபுரியும் கந்த
திருத்தணியும், காஞ்சி புரத்துக் குமரகோட்ட
ம், திருப்பரங்குன்றும், திரு ஆவினன்குடியும்,
லையும், இலஞ்சியும், கதிர்காமமும் ஏனைய
செந்தில் நகரில் அரசு புரியும் பெருமானே!
அரசே! அன்பர் மனத்துறையும் ஆண்டவா!
சோதி! ஆருயிர்த் துணையே! ஆராவமுதே
பறுக்கும் பெருமானே! வானவர் போற்றும்
தீந்தமிழ்! தேவாதி தேவா! திருவருணைக்
ரியாரை ஆட்கொண்ட ஐயனே! செந்தமிழ்த்
ம் நான்கினும் மெய்பொருளானவா! வினை
குமரா! கந்தா! கடம்பா! கதிர்வடிவேலா!
மணியே! கலியுகவரதா! விண்ணவரைச்
கரிய வண்ணக் கொழுந்தே!
ப் பயனே அன்பெனும் பிடியுள் அகப்படும்
கா! பாலசுப்பிரமணியா! கோல மயில் வீரா!

சூர்பகைவா! சரவணபவா! குன்றெறிந்தோனே. குகா! சண்முகா! முன்னான்கு தோளா! முக்கண்ணிமைந்தா!

அரிமருகா! திருமுகா! வேல்முருகா வள்ளி மணவாளா! பாபசங்காரா! மன்னுயிர் அனைத்தும் போற்றும் மாதவா! காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பவா! மும்மல மறுக்கும் மூர்த்தியே!

எண்ணரிய பிறவிகளில் அரிதாகிய மானிடப் பிறவியை எனக்களித்தாய்! அதிலும் கூன்குருடு செவிடு நீங்கிப் பாங்குறப் பிறக்க அருள் செய்தாய் பிறந்தேன். வளர்ந்தேன் கல்வி பயின்றேன் கற்றதனால் ஆய பயன் நின்திரு வடிகளைப் பற்றுவதன்றி வேறென்றுளதோ? வீணே உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் எதையாவது உளறித் திரிவதற்குமா இப் பிறவியை எனக் களித்தாய்.

ஈசா! நின் பொன்னார் திருமேனியைக் கண்ணாரக்கண்டு களிக்கவும், என் கரங்களால் நாளும் நன் மலரெடுத்து நின்மின்னார் பொன்மேனியில் சாத்தி வணங்கவும் அல்லும் பகலும் அகமுருகி நின் பெருமை மிகு திருநாமங்களை என் வாயால் இசைக்கவும் நின்கோயில் வலம் வந்து ''முருகா முருகா''
என்று உருகா நற் சிந்தையுடன் ஆனந்தக் கூத்தாடி வணங்கி நற்கதி பெற்று உய்ய பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும் அச்சம் அகற்றும் அயில் வேலும் - கச்சைத் திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் விரிகாணம் சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும் எந்தத்திசையும் எதிர்தோன்ற எழுந் தருளி நேரும் இடர்களை யெல்லாம் தூளாக்கி எவ்வரம்கேட்பினும் அவ்வரத்தை தந்து மகிழ்ச்சியோடு என் உள்ளத்தில் புகுந்திருந்து எனது பற்றுக்களை நீக்கி மும்மலத் தொடர்புகளையும் அகற்றி, அடியேனை நின் திருவடித் தொண்டனாக ஆட்கொண்டு அடியேனுக்கு முன்னின்று திரு அருள் புரிவாயாக!

உன் ஆனந்த நடனத்தை காண பறாளையம்பதி வாருங்கள் அவன் திருத்தேர் வடம் பிடித்து வினைதீர்க்கவாரீர்.

முருகன் அடியான் Dr. க. சிவராஜா (வாகை)

### நகங்கள் போதாது

புக்களையு ய சுழிபுரம் பறா
லில் வருடாந்த உற்சவம் சென்ற
ன்று இரதோற்சவம் நடைபெறு
வரத் தவில் இசையுடன் தேவார
புடைசூழ முருகப் பெருமான்
ங்கள் போதாது. வேண்டுவார்க்கு
ள் துயர்போக்கி ஆட்கொள்பவன்
ரக்கணக்கான பக்தர்கள் திரண்டு
கண்டுகளிப்பார்கள். ஷண்முகப்
பார்களுக்கு அருளைவாரி வழங்கி
ழ்வு தருவான். இன்று முருகனது
கு ஷண்முகப் பெருமானின் திரு
ன்றேன்.

மா. ஆலய பரம்பரை பூசகர்.

### சிவபரம்பொருளின் அருளுருவாம் முருகனின் அருட்தலமே பறாளாயம்பதி

பரம்பொருளின் கருணையைப் பெறும் பெருநெறியே சைவம். சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது என்பது சைவத்தின் மேன்மையைப் பறைசாற்றுவது. அன்பின் முழுமைதான் முழுமுதற்பொருளான சிவம். சிவத்தின் கருணை வடிவில் ஒன்றே ஆறுமுகன். ஆறுமுகன் விருப்புடன் அமர்ந்து அருள் பொழியும் இடங்களில் சுழிபுரம் பறாளாயம்பதியும் ஒன்று. ஆறுபடை வீடுடைய முருக பிரான் விரும்பி உறையும் பதியாக பறாளாய் திருத்தலம் உள்ளது. முருகன் அடியார்கள் நிறைந்த தலம் பறாளாய்த் தலம். முருகன் அடியார்கள் நேர்த்திக் கடனாகக் காவடி எடுத்தும், கற்பூரச் சட்டி எடுத்தும். ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தும் வழிபாடாற்றி முருகனுடைய அருளுக்குப் பாத்திரமாகிச் சிறப்புடன் வாழுகின்றனர். மூர்த்தி, தல சிறப்புடைய பறாளாயானுக்கு ரதோற்சவம் கண்கொள்ளாக் காட்சி. ஊர்மக்கள் மாத்திரமல்லாமல் அயலூரவரும், முருகபக்தர்களும் ரதோற்சவத்தில் பங்குகொண்டு முருகனருளில் திளைத்து இன்பம் பெறுகின்றனர்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது மூதாட்டி ஔவையாரின் முதுமொழி. ஆலய வழிபாடு சிவபுண்ணியச் செயல். இறையருள் இல்லையேல் வாழ்க்கை சூனியமாகிவிடும். இறையருளைப் பெறும் அருள் நிதியங்கள் ஆலயங்கள். ஆலயத்தில் இடம்பெறும் நித்திய நைமித்திய வழிபாடுகள் அருளைப் பெறும் சாதனங்கள். அதிலும் ரதோற்சவம் மிகவும் உயர்ந்தது. அனைத்துயிர்களும் அருள்பெறும் சாம்பவி தீட்சையாகும். எங்கள் முன்னோர்கள் வழிபட்டு அருட்செல்வம் பெற்ற பறாளாய் சிவசுப்பிரமணியர் ஆலயப் பெருவிழாவாம் ரதோற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியவர்கள் அனைவரும் மேன்மை பெறுவர்.

நாச்சியார் செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ள்ளிக்கிழமை
லையில் தீர்த்தம்,
காலை 9.00 மணிக்கு
ட சங்காபிஷேகம்
கம் (108) சண்முகர்

### இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த்தோற்சவம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களுடைய நாற்புறமும் வயல்களினால் சூழப்பட்ட சுழிபுரம் பறாளாய் எனும் பதியில் வள்ளி தேவ சேனாபதியாக விளங்குகின்ற முருகப் பெருமானுக்கு வைகாசி மாதத்தில் மஹோற்சவம் நடைபெறுகின்ற இந்நாளில் அவனுடைய பெருமையை நினைப்பதில் அகம் மகிழ்கின்றேன். இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த் தோற்சவம் நடைபெறுகின்ற இவ் வாலயத்தில் 11 ஆம் நாள் தேர்த் திருவிழாவும் நாளை திருவடி நிலையில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்

இத்தினத்தில் அவனுடைய அடியார் களுக்கு எம்பெருமானுடைய திருவருள் கிடைக்க வேண்டும் என்று அவனை வேண்டி நிற்கின்றோம்.

அப்புத்துரை மனுநீதி.
நிர்வாக உறுப்பினர், தர்மகர்த்தா சபை.
'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது மூதாட்டி

### துன்பங்கள் போக்கிட காத்தருள் முருகா

பறாளாயம்பதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கந்தவேற் பெருமான் இன்று அழகிய சித்திரத் தேரில் வீதியுலா வருகின்றார். இந்த அருமையான நன்நாளில் அடியார்கள் அனைவரும் சகல செல்வங்களைப் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல் லாம்வல்ல எம்பெருமான் சண் முகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

வேலாயுத இரத்தினசபாபதி
தலைவர், தர்மகர்த்தா
சபை,

### குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராவோம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைத் தன்னகத்தே பெற்றுக் கொண்டது சுழிபுரம் என்னும் தொல்பதியாகும். இஃது யாழ்ப்பாணத்தில் வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ளது. இப்பதியின் கண்ணேயுள்ள பறாளாய் ஈசுவர விநாயகர் ஆலயமும் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயமும் மிகப் பிரசித்தி பெற்றவை. நாற்பாலும் மருதநிலம் சூழ வீற்றிருக்கும் இத்திருத்தலத்திலுள்ள ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

வேண்டுவார் வேண்டும் வரம் யாவும் இத்திருத்தலத்துக்குச் சென்றால் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் பக்தர்கள் அரோகரா ஒலியெழுப்பி மெய்மறந்து வழிபடுகின்றனர். எங்கள் இருகண்களாகவும், கருமணிகளாகவும், மணியொலியாகவும் விளங்குகின்ற ஆறுமுகப் பெருமான் தமது ஆறு முகங்களாலும், பன்னிரண்டு கண்களாலும், பன்னிரு திருக்கரங்களாலும் மெய்யடியார்களுக்கு அருளமுதத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றார். வடந்தொட்டுத் தேர் இழுக்கும் அடியார் பெருமக்கள் அருணகிரிநாதருடன் சேர்ந்து பறாளாய் முருகனைக் கண்டு தொழ அந்த நான்முகன் நாலாயிரங்கண் படைத்திலனே என இறும்பூதெய்தி ஏக்கமுறுகின்றனர். குமரவேள் திரு முன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதியடைவோம் என்ற நம்பிக்கை யுடன் அவனருளாலே அவன் தாள் அடைவோம்.

பண்டிதை திருமதி பொன்.பாக்கியம், சுழிபுரம்.


லஸ்
ஸ்ரோர்ஸ்
பண்டத்தரிப்பு.

**VRV**
**ரேட் சென்ரர்**
பிரதான வீதி, சுழிபுரம்.

**இ.ராசநாயகம்**
பறாளாய் வீதி,
சுழிபுரம்.

சகல வணிகப் பொருள்களையும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
**கணேஸ்**
**ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**ஆசைப்பிள்ளை**
**அன் சன்ஸ் நகைமாடம்**
கே.ரி பிளாசா,
பிரதான வீதி சங்கானை.

**லவாணி**
**நகைமாளிகை**
கஸ்தூரியார் வீதி,
ழ்ப்பாணம்.

**குமரன்**
**பட்டுச் சேலை**
பிரதான வீதி, சங்கானை.

பட்டுப் புடைவைகளை மலிவாகவும்
தரமாகவும் பெற்றுக்கொள்ள
**வளர்பிறை**
பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.

**க.தம்பு**
**அன் சன்ஸ்**
பிரதான வீதி, சுழிபுரம்.

**சிவா ஸ்ரோர்ஸ்**
(கேதீஸ் களஞ்சியம்)
பிரதான வீதி,
வழக்கம்பரை, சுழிபுரம்.

# சென்னை விமான நிலையத்தில் 4 மர்மப் பைகளால் குண்டுப் பீதி

## பயணிகள் தலைதெறிக்க ஓட்டம்

சென்னை, ஜூன் 12

சென்னை விமான நிலையத்தில் கேட்பாரற்று கிடந்த 4 மர்மப் பைகளால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வெடிகுண்டுப் பீதியால் பயணிகள் அங்குமிங்குமாக ஓடினர்.

சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் முதல் நுழைவாயில் வழியாக டில்லி, மும்பை செல்லும் பயணிகள் உள்ளே சென்று கொண்டிருந்தனர். அப்போது நுழைவாயிலின் உள்ளே 4 மர்மப் பைகள் கேட்பாரற்று கிடந்தன. விமான நிலைய மேலாளருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டன. ஒலிபெருக்கியிலும் அந்தப் பைகள் தொடர்பாக அறிவிப்பு செய்தனர். இதன் பிறகும் பைகளுக்கு சொந்தம் கொண்டாடியாரும் வராததால், அதில் வெடிகுண்டு இருக்குமோ என்ற பீதி ஏற்பட்டது.



சென்னை விமான நிலையம்

இதனால் விமான நிலையம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது. வெடிகுண்டுப் பயத்தில் பயணிகள் அங்குமிங்குமாக ஓடினர். இதையடுத்து முதலாம் நுழைவாயில் மூடப்பட்டு, இரண்டாவது நுழைவாயில் வழியாகப் பயணிகள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

மர்மப் பைகள் இருந்த இடத்தைச் சுற்றிலும் இரும்புத் தடுப்புகள், மணல் மூட்டைகள் அமைக்கப்பட்டன. வெடிகுண்டுநிபுணர்களும், பொலிஸ் மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டு மர்மப் பைகள் சோதனை செய்யப்பட்டன.

ஆனால் சோதனையில் அந்தப் பையில் வெடிகுண்டு எதுவும் இல்லை என்பது தெரிய வந்தது. ஒரு பையைப் பிரித்து பார்த்தபோது அதில் புதிய சட்டைகள் இருந்தன. அப் போது 40 வயது மதிக்கத்தக்க ஒரு வட இந்தியப் பெண், அந்தப் பைகள் தன்னுடையது என்று கூறினார். அவசரமாகக் கழிவறைக்குச் செல்ல வேண்டியிருந்ததால் பைகளை வைத்துவிட்டு சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

பையைக் கொடுக்க மறுத்த பாதுகாப்பு அதிகாரிகள், சோதனை முடிந்த பிறகு அதை விமான நிலைய மேலாளரிடம் ஒப்படைத்தனர். அந்தப் பெண்ணைக் கடுமையாக எச்சரித்த பிறகு அவரிடம் பைகள் ஒப்படைக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தால் காலை 7 முதல் 8.15 மணி வரை விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (கு)

# கங்கை நதியில் துப்பினால் சிறை

புதுடில்லி, ஜூன் 12

கங்கை நதியில் எச்சில் துப்புவது, குப்பையைக் கொட்டி மாசுபடுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுவோருக்கு 3 நாள் சிறைத் தண்டனை, ரூபா 10 ஆயிரம் அபராதம் விதிக்க மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கங்கையைச் சுத்தப்படுத்தும் மோடி அரசின் திட்டங்களில் இந்த நடவடிக்கையும் ஒன்றாக கருதப்படுகிறது. கங்கை நதியைத் தூய்மையாக பாதுகாப்பது மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும் விடயங்களில் ஒன்று. இதனால் மற்ற நதிகளை நாங்கள் கண்டு கொள்ளவில்லை என்பது அர்த்தமல்ல.

நதியைத் தூய்மைப்படுத்துதலில் முன்மாதிரியை உருவாக்குவோம். பின்னர் அதனை அனைத்து நதிகளிலும் செயற்படுத்துவோம் என்று மத்திய நீர் வளத்துறை அமைச்சர் உமா பாரதி தெரிவித்திருந்தார். (கு)

# அமைச்சரவை குழுக்களை கலைத்தார் மோடி

புதுடில்லி, ஜூன் 12

பிரதமர் நரேந்திர மோடி 4 அமைச்சரவைக் குழுக்களை கலைக்கவேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.

நரேந்திர மோடி பிரதமரானதும் அரசு நிர்வாகத்தில் தேவையற்ற தாமதத்தை தவிர்க்கவும் முடிவுகளை விரைவாக எடுக்கவும், ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அரசு காலத்தில் அமைக்கப்பட்ட பல்வேறு மத்திய அமைச்சர் குழுக்களைக் கலைத்து வருகிறார்.

இதன் முதல் கட்டமாக ம[illegible] மோகன்சிங் அரசு அமைத்திருந்த அதிகாரம் அளிக்கப்பட்ட 9 அமைச்சர் குழுக்கள், 21 அமைச்சர்கள் குழுக்கள் ஆகியவற்றை கடந்த மாதம் 31ஆம் திகதி கலைத்துள்ளார்.

இந்நிலையில் நேற்று மேலும் நான்கு அமைச்சுக் குழுக்களைக் கலைத்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. (கு)

# மோடியை சந்திக்க கெஜ்ரிவால் திட்டம்

## மின் பற்றாக்குறைக்கு தீர்வு காண

புதுடில்லி, ஜூன் 12

ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால், டில்லியில் நிலவும் மின் பற்றாக்குறை குறித்து பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச திட்டமிட்டுள்ளார்.

டில்லியில் மின் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. இந்தப் பிரச்சினை தற்போது அரசியல் கட்சிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. டில்லியில் ஆளுநர் ஆட்சி நடைபெற்று வருவதால், மின் நெருக்கடியைக் குறைக்க அந்தத் துறை அதிகாரிகளுடன் ஆளுநர் நஜீப் ஜங் அவசர ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில் டில்லியில், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து மின் பற்றாக்குறை குறித்து ஆலோசிக்க, ஆம் ஆத்மி மூத்த தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகத்துக்கு, ஆம் ஆத்மி கட்சி சார்பில் அனுமதி கேட்டு கடிதம் அனுப்பபட்டுள்ளது.

முன்னதாக, டில்லியின் மின் பற்றாக்குறை 10 நாள்களில் தீர்க்கப்படும் என்று பா.ஜ.க. தெரிவித்திருந்தது. ஆனால் 10 நாள்கள் தாண்டியும் இந்தப் பிரச்சினை தீரவில்லை. எனவே நாங்கள் பிரதமரைச் சந்திக்க போகிறோம் என்று ஆம் ஆத்மி செய்தி தொடர்பாளர் திலீப் பாண்டே தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருந்தார். (கு)

# பலாத்காரங்களில் ஈடுபடுபவர்களை பாரபட்சமின்றித் தண்டிக்கவேண்டும்

## யுனிசெப் அமைப்பு வலியுறுத்தல்

புதுடில்லி, ஜூன் 12

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக நடக்கும் மிருகத்தனமான பலாத்கார கொடுரங்களில், குற்றவாளிகளுக்கு எந்த பாரபட்சமும் இன்றி தண்டனை அளிக்க வேண்டுமென உத்தர பிரதேச சிறுமிகள் பலாத்காரச் சம்பவத்தை குறிப்பிட்டு யுனிசெப் கருத்து தெரிவித்துள்ளது.

உத்தரபிரதேசத்தில் தலித் சிறுமிகள் 2 பேர் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்த வழக்கு தொடர்பான நீதிமன்ற விசாரணை தாமதப்படுத்தப்பட்டு வருவதாக எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இந்த நிலையில் இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் (யுனிசெப்), பெண்கள் மற்றும் சிறுமிகளை பாலாத்காரம் செய்யும் கொடூர சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இவை வார்த்தையால் வர்ணிக்க முடியாத குற்றங்களாக இருக்கின்றன. பல இடங்களில் இது போன்ற குற்றங்கள் வெளி வருவதே இல்லை.

உத்தரப் பிரதேசத்தில் சிறுமிகள் இருவர் கொடூரமாகப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் அவர்களை உயிருடன் மரத்தில் தொங்க விட்டு கொலை செய்த சம்பவம், மிகவும் மோசமான போக்கை காண்பிக்கின்றது.

இது போன்ற மிருகத்தனமான பாலியல் வன்முறைகள் கண்டிக்கத்தக்கது.

இந்த வேலைகளில் ஈடுபடும் குற்றவாளிகளை எந்தவிதமான பாரபட்சமும் இன்றி தண்டிக்க வேண்டும்-என யுனிசெப் தெரிவித்துள்ளது. (கு)

# அவைக்கு நான் புதியவன்; குற்றங்களை மன்னியுங்கள்

## மோடி நேற்றுக் கன்னி உரை

புதுடில்லி, ஜூன் 12

நான் இந்த அவைக்கு மிகவும் புதியவன். எனவே, எனது பேச்சில் இருக்கும் குறைகளை மன்னியுங்கள் என்ற உரையுடன், மக்களவையில் நேற்று பிரதமர் நரேந்திர மோடி தனது பேச்சை ஆரம்பித்தார்.


நாடாளுமன்றத்துக்கு வருகை தரும் பிரதமர் மோடி

பிரதமராக பதவியேற்ற பிறகு நரேந்திர மோடி நேற்று மக்களவைக் கூட்டத்தில் முதல் முறையாக உரையாற்றினார்.

நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் பேசிய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்குப் பதில் அளித்து பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில்; நான் இந்த அவைக்கு மிகவும் புதியவன். எனவே, எனது பேச்சில் இருக்கும் குற்றங்களை மன்னியுங்கள் என்றார்.

குடியரசுத் தலைவர் உரையின் மீது பேசிய அனைவரது பேச்சுகளையும்கவனமாகக்கேட்டேன். குடியரசுத் தலைவர் உரையில் கூறப்பட்ட வாக்குறுதிகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நீண்ட இடைவெளிக்குப்பிறகு இந்தியாவில் நிலையான ஆட்சி அமைந்துள்ளது. நிலையான ஆட்சியைதேர்ந்தெடுத்ததற்காக, நாட்டு மக்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் ஏழைகளுக்காகவே இந்த அரசு இருக்கிறது. கல்வியே, ஏழ்மையை மாற்றுவதற்கான மருந்து. எனவே, அவர்கள் ஏழ்மையை எதிர்த்து போராட நாம் அவர்களுக்கு உதவ வேண்டும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அளித்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றுவோம் என்று பல தரப்பில் இருந்து கேள்விகள் எழுகின்றன. ஆனால், நம்பிக்கையின் பாதுகாவலராக நாங்கள் இருப்போம்.

எந்த அரசையும் விமர்சிப்பதற்காக நான் இங்கு இல்லை. வலிமையான இந்தியாவை உருவாக்குவதற்கான நேரம் இது-என்றார் மோடி. (கு)

# இராணுவ நியமனங்களில் அரசியல் ஆதாயம் தேடாதீர்

## பாதுகாப்பு அமைச்சர் ஜேட்லி

புதுடில்லி, ஜூன் 12

புதிய இராணுவ தளபதியாக தல்பீர் சிங் சுஹாக் நியமனம் என்பது இறுதி செய்யப்பட்ட ஒன்றுதான் என்றும், இராணுவ நியமனங்களில் அரசியல் ஆதாயம் தேட வேண்டாம் என்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் வி.கே.சிங்குக்கு எதிராக அரசு தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரம் தொடர்பாக மாநிலங்களவையில் காங்கிரஸ் கட்சி சர்ச்சை எழுப்பியது.

இதனைத் தொடர்ந்து அவையில் விளக்கமளித்த பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜேட்லி, இராணுவ நியமனங்களில் அரசியல் ஆதாயம் தேட வேண்டாம். இராணுவ தளபதியாக சுஹாக் நியமிக்கப்படும் முடிவு இறுதியானது என்றார்.

வெளியுறவுத்துறை இணை அமைச்சராகவும், வட கிழக்கு மாநிலங்கள் விவகாரங்களுக்கான இணை அமைச்சராகவும் இருக்கும் வி.கே.சிங், இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த போது, தல்பிர் சிங் சுஹாகிற்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை ஒன்றை எடுத்திருந்தார்.

சுஹாக், இராணுவப் படைகளுடன் ஒரு கிராமத்தை சூறையாடியதாகப் தல்பீர் சிங் மீது குற்றச்சாட்டையும் முன்வைத்திருந்தார். (கு)

## நேட்டோவுக்கு எதிராக ரஷ்யா படைக் குவிப்பு

மொஸ்கோ, ஜூன் 12

உக்ரைனுக்குச் சொந்தமான கிரைமியா தீபகற்பத்தை ரஷ்யா இணைத்துக் கொண்டதை தொடர்ந்து, உக்ரைனுக்கு ஆதரவான மேற்கத்திய (நேட்டோ) நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவுகிறது.

இந்நிலையில் ரஷ்யா தனது மேற்கு எல்லையை நோக்கிக் கடந்த செவ்வாய்க்கிழமை படைகளை அனுப்பத் தொடங்கியது.

இது குறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறுகையில்; போல்டிக் கடற்படை, விமானப் படை மற்றும் தரைப்படை வீரர்கள், கலினிங்ராட் பகுதியை நோக்கி விரைந்து வருகின்றனர். லத்வியாவில் உள்ள நேட்டோ படைகளுக்கு இணையான வலிமை கொண்டதாக இந்தப்படை இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. (த)

# மொசூல் நகர் தீவிரவாதிகள் வசம் 5 லட்சம் ஈராக்கியர் வெளியேற்றம்

## தமது நிலைகளைக் கைவிட்டு இராணுவம் ஓட்டம்

பக்தாத், ஜூன் 12

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மொசூலிலுள்ள முக்கியமான அரச கட்டடங்களை இஸ்லாமியத் தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதன்மூலம் மொசூல் நகரின் முழுக் கட்டுப்பாடு அவர்கள் வசம் வந்துள்ளது.

இதனையடுத்து அங்கிருந்து ஐந்து லட்சம் மக்கள் வெளியேறியுள்ளனர்

லெவண்ட் மற்றும் இஸ்லாமிய ஈராக் தேசம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த ஆயுததாரிகள் உள்ளூர் விமான நிலையத்தைக் கைப்பற்றியுள்ளனர் என்றும், ஆயிரக்கணக்கான கைதிகளை விடுவித்துள்ளனர் என்றும் அதிகாரிகள் கூறுகிறார்கள்.



வெளியேறும் மக்கள்

இராணுவம் மற்றும் பொலிஸார் தமது நிலைகளைக் கைவிட்டு ஓடிவிட்டனர் என்றும், நகரிலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் வெளியேறியுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மொசூல் நகரின் ஆளுநரும் வெளியேறிவிட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

தீவிரவாதிகள் மொசூல் நகரை மட்டுமல்ல, நினேவே மாகாணம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர் என்று ஈராக்கிய நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதிகளுக்கு உடனடியாக அரச துருப்புக்கள் அனுப்பப்படவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அல் கெய்தாவின் ஒரு கிளை அமைப்பான இசிஸ், இப்போது கிழக்கு சிரியா, மேற்கு மற்றும் மத்திய ஈராக் ஆகிய பகுதிகளில் கணிசமான அளவுக்கு நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

இது தவிர ஈராக்கின் கிர்குக் மற்றும் சலாஹுதீன் மாகாணங்களிலும் அந்த அமைப்பினர் முன்னேறி வருகின்றனர்.

இதனிடையே நாட்டில் பெரும்பான்மையாக இருக்கும் சுன்னி முஸ்லிம்களுடன் இணைந்து செயற்பட்டுச் சட்டம் ஒழுங்கைச் சீர் செய்யுமாறு, ஷியா முஸ்லிமான பிரதமர் நூரி அல் மலிக்கியிடம் அமெரிக்கா கோரியுள்ளது.


ஈராக்கின் பாரபட்சமான கொள்கைகளை முன்னெடுக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு நூரி அல் மலிக்கி ஆளாகியுள்ளார். இதன் காரணமாக அங்கு இன வன்முறைகள் ஏற்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது. (த)



பாகிஸ்தானின் கரைச்சி விமான நிலையம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. விமான நிலையத்தைச் சுற்றி பாகிஸ்தான் இராணுவத்தினர் இடைவிடாத ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (த)

## மோடியுடன் இணைந்து செயலாற்ற விருப்பம்

### நவாஸ் ஷெரீப் கடிதம்



நவாஸ் ஷெரீப்

இஸ்லாமாபாத், ஜூன் 12

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து செயற்பட விரும்புவதாகவும், இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளுக்குச் சுமுக தீர்வு காண விரும்புவதாகவும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் நவாஸ் ஷெரீப் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி மோடி பதவியேற்பு விழாவில் கலந்து கொண்ட நவாஸ் ஷெரீப், தாயகம் திரும்பியவுடன் மோடிக்கு எழுதிய கடிதத்தில் மோடியுடனான சந்திப்பு திருப்திகரமாக அமைந்ததாக தெரிவித்தார்.

கடித விவரம் வருமாறு:-

மிகுந்த திருப்தியுடன் நான் பாகிஸ்தான் திரும்பியுள்ளேன். நமது சந்திப்பின்போது பிராந்திய நலன் தொடர்பான பேச்சு ஆக்கப்பூர்வமாக இருந்தது. எதிர்காலத்திலும், உங்களுடன் இணைந்து செயற்பட விரும்புகிறேன்.

இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளுக்கு சுமுக தீர்வு காணப்படவேண்டும். நமது முயற்சிகள் எதிர்கால நலனுக்கு மிகப் பெரிய அடித்தளமாக அமையும். இந்தியா, பாகிஸ்தானில் உள்ள லட்சக்கணக்கான ஏழை மக்களின் நலனே பிரதானமானது.

நமது கூட்டு முயற்சியில் தான் இரு நாடுகளின் நலனும் அடங்கியிருக்கிறது என நம்புகிறேன். இவ்வாறு நவாஸ் ஷெரீப் குறிப்பிட்டுள்ளார். (த)

## 4 ஐரோப்பிய தலைவர்கள் ஒன்றாகப் படகுச் சவாரி



படகில் பயணம் செய்யும் ஐரோப்பியத் தலைவர்கள்

ஸ்டொக்ஹோம், ஜூன் 12

சுவீடன், ஜேர்மனி, பிரிட்டன் மற்றும் நெதர்லாந்தின் தலைவர்கள் சுவீடனில் ஏரிக் கரையோரம் இடம்பெற்ற குறுகிய ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடொன்றில் பங்கேற்றனர். இந்த உச்சி மாநாட்டையடுத்து ஸ்டொக்ஹோம் நகரின் மேற்கே 120 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சுவீடன் பிரதமர் பிரட்றிக் ரெயின் பீல்டின் கோடை வாசஸ்தலத்துக்கு அண்மையிலுள்ள ஏரியில் சுவீடன் பிரதமரும், ஜேர்மனிய அதிபர் அஞ்ஜலா மேர்கலும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் நெதர்லாந்து பிரதமர் மார்க் ருத்தும் படகுச் சவாரியில் ஈடுபட்டனர். (த)

## ஒசாமா பின்லேடன் வேட்டையை பாகிஸ்தானுக்குக் கூறாதமை ஏன் ?

வாஷிங்ரன், ஜூன் 12

ஒசாமா பின்லேடன் வேட்டையைப் பாகிஸ்தானுக்கு முன்கூட்டியே தெரிவிக்காததற்கு ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு தான் காரணம் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை முன்னாள் அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதியுள்ள ஹார்ட் சொய்சஸ் என்ற புத்தகத்தில் அல்-கெய்தா தலைவர் பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விவரித்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது;

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் பாகிஸ்தானும் இணைந்து செயற்பட்டது. எனினும் இந்த உறவில் பல்வேறு சிக்கல்கள் எழுந்தன.

பாகிஸ்தானில் பதுங்கியிருந்த பின்லேடனை சுற்றி வளைக்க அமெரிக்க இராணுவத்தை அனுப்புவது குறித்து அதிபர் ஒபாமா, பாதுகாப்புச் செயலர் றொபேர்ட் கேட்ஸ், நான் உட்பட உயரதிகாரிகள் சிறப்பு ஆலோசனை நடத்தினோம். பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்க ஹெலி பறந்து சம்பவ இடத்தில் தாக்குதல் நடத்தினால் இந்திய இராணுவம் தான் தாக்குதல் நடத்துகிறது என்று அந்த நாடு தவறாகக் கருதக்கூடும்.

இதனால் இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்நடத்தும்அபாயம்உள்ளது. எனவே முன்கூட்டியே பாகிஸ்தானுக்குத் தகவல் தெரிவிப்பது நல்லது என்று ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அதேநேரம் அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு இடையேயான உறவிலும் விரிசல் ஏற்படும் என்றும் கூட்டத்தில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. ஆனால் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐக்கு அல்-கெய்தா, தலிபான் உள்ளிட்ட தீவிரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. பாகிஸ்தானுக்குத் தகவல் கொடுத்தால் பின்லேடன் வேட்டை திட்டம் பாழாகிவிடும் என்பதால் அந்த நாட்டுக்குத் தகவல் தெரிவிக்கவில்லை-இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடனை அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த சீல்ஸ் படைப் பிரிவினர் 2011 மே 2ஆம் திகதி சுட்டுக் கொன்றனர். (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**:உங்கள் வாக்கு வன்மை கூடும். உங்கள் பேச்சுக்கு மதிப்புக் கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பர். எந்தக் காரியத்தையும் செய்யும் முன் ஒரு முறைக்கு இரு முறை யோசித்து செயற்படவும். தைரியத்தை இழக்காதீர்கள்.

**இடபம்**: எல்லாம் நல்லபடியாக நடக்கும். தாயார், தாய் வழி உறவினர்களுடன் தேவைப்படும்போது மட்டும் பேசுங்கள். நிகழ்காலத்தில் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். மாணவமணிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் படிக்க வேண்டும்.

**மிதுனம்**: உத்தியோகத்தில் மந்த நிலை ஏற்படலாம். தங்களது முழுத் திறனையும் பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம். குழந்தைகள் நலன் சிறக்கும். கணவன் - மனைவியிடையே கருத்து மோதல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கடகம்**: புதிய விதமான உறவுகள் நீடிக்கும். வேலைவாய்ப்பில் இருந்த தாமதம் மாறும். உங்களது வாக்கு வன்மைகூடும். தைரியம் கூடும். படிப்பில் கவனம் தேவை. மிகவும் எச்சரிக்கையுடன் படித்தால் சாதனைகள் புரிய வாய்ப்புண்டு.

**சிங்கம்**: உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாத்திரை செலவினங்கள், குறையும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும். கவனம் தேவை. வீண் வாக்குவாதம் வேண்டாம். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும்.

**கன்னி**: தேவையற்ற வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். யாரைப் பற்றியும் விமர்சனம் செய்ய வேண்டாம். தந்தையுடன் கருத்து பரிமாற்றம் செய்யும்போது கவனம் தேவை. வேலை செய்யும் இடங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

**துலாம்**: படுக்கைக்குச் செல்லும் முன்னர் குலதெய்வத்தை வணங்கி விட்டு படுக்கச் செல்லவும். தேவையற்ற வீண் குழப்பங்கள், கற்பனைகள் வேண்டாம். எதைப் பேசினாலும் அவமானம் என்று இருந்த நிலை மாறும்.

**விருச்சிகம்**: உங்களது மேலான யோசனைகளைச் சொல்லத் தயாராகுங்கள். சொன்ன வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவித்த நிலையும் மாறப்போகிறது. இனியாவது வாக்குக் கொடுப்பதற்கு முன் யோசித்துக் கொடுக்கவும். தைரியம் பிரகாசிக்கும் நேரமிது.

**தனுசு**: எந்த முடிவையும் சட்டென்று முடிவெடுங்கள். நல்ல விடயங்களைப் பிற்போட வேண்டாம். வீடு, மனை, ஆடை, ஆபரணங்கள் போன்ற விடயங்களில் அவசரம் வேண்டாம். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுக்கவும்.

**மகரம்**: தாயார் மற்றும் தாய்வழி உறவினர்களுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புண்டு. கவனம் தேவை. பிள்ளைகள் படிப்பில் மிகுந்த கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் பொறுமையுடன் பணிகளைச் செய்யவும்.

**கும்பம்**: சிறிய நோய் என்றாலும் உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. மருத்துவம் சார்ந்த செலவுகள் காத்திருக்கின்றன, கவனம் தேவை. இருந்தாலும் விட்டுக்கொடுத்துப்போவது நல்லது.

**மீனம்**: நண்பர்கள் உதவிகள் செய்வர். வேலைசார்ந்த விடயங்களில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணங்கள் கிடைக்கக் கூடும். எந்தக் காரியத்தையும் செய்யும் முன்னர் ஒரு முறைக்கு இரு முறை யோசித்துச் செயற்படவும்.

## நாளை

**வைகாசி-30 வெள்ளிக்கிழமை | 13.06.2014**

திதி: பூரணை மு.ப.10.06 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப.01.41 வரை

சுபநேரம்: 05.52-07.22 வரை
இராகுகாலம்: 10.22-11.52 வரை
திருஞானசம்பந்தர் குருபூஜை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சுதந்திரமான ஆன்மா

இயற்கை, ஆன்மாக்கள் என இருப்பவை இரண்டே என்பதுடன் சாங்கியர்களின் ஆராய்ச்சி முடிந்து விடுகிறது. கணக்கில் அடங்காத ஆன்மாக்கள் இருக்கின்றன. இவை மிகவும் நுட்பமானை. இனிச் சுருங்க இயலாத(Simple)நிலையில் இருப்பதால், இவற்றுக்கு அழிவு இல்லை. எனவே, இவை இயற்கையிலிருந்து வேறுபட்டவையாகவே இருக்க வேண்டும். இயற்கை தான் பல விதமாக மாறுதல்கள் அடைந்து இந்தப் பிரபஞ்சத்தையே தோற்றுவிக்கிறது. ஆனால் சாங்கியர்களின் கொள்கைப்படி ஆன்மா இயங்கா நிலையில் உள்ள ஒன்று. அது இனிச் சுருங்க இயலாத நுட்ப நிலையில் உள்ள ஒன்று. ஆன்மா விடுதலை பெறுவதற்காகவே இயற்கை இந்த மாறுதல்களை எல்லாம் நிகழ்த்துகிறது. நான் இயற்கை அல்ல, என்ற அறிவை ஆன்மா பெறுவதே அதன் விடுதலை.

'ஆன்மா ஒவ்வொன்றும் எங்கும் நிறைந்தது, என்பதைச் சாங்கியர்கள் ஒப்புக் கொண்டே தீர வேண்டும் என்பதை நாம் முன்பு கண்டோம். இனி மாற இயலாத நுட்பப் பொருளாக இருப்பதால், ஆன்மாவை எல்லைக்கு உட்படுத்தவே முடியாது. ஏனெனில் காலம், இடம், காரணம் என்பவையே எல்லைக்குக் காரணமானவை. ஆன்மா இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது. எல்லைக்கு உட்பட வேண்டிய பொருள் இடம் என்பதில், அதாவது உடலில் இருக்க வேண்டும், உடல் இயற்கையிலேயே இருந்தாக வேண்டும். ஆன்மாவுக்கு உருவம் உண்டு என்றால்; அது இயற்கையாகவேதான் இருக்க வேண்டும்; இயற்கைக்கு மாறுபட்ட ஒன்றாக இருக்க முடியாது. எனவே, ஆன்மா உருவம் இல்லாதது; உருவம் இல்லாத ஒன்றை இங்கோ, அங்கோ, எங்கோ ஓர் இடத்தில் இருப்பதாகச் சொல்ல முடியாது. அது எங்கும் நிறைந்ததாகவே இருக்க வேண்டும். இதற்கு அப்பால்சாங்கிய ஆராய்ச்சி செல்லவில்லை.

## ஒட்சிசன் இல்லாமல் விண்ணில் பறந்த நபர்

சுவிஸைச் சேர்ந்த நபர் ஒருவர் ஒட்சிசன் சிலிண்டரின் உதவியின்றி உயரத்தில் இருந்து குதித்துச் சாதனை படைத்துள்ளார்.

வெப்பக் காற்று பலூனில் பயணித்த ரெமோ லாங் என்ற அந்த நபர், ஒட்சிசன் சிலிண்டரின் உதவி இல்லாமல் சுமார் 8,000 மீற்றர் உயரத்திலிருந்து குதித்து 10 நிமிடங்களில் தரையிறங்கியுள்ளார்.

இதுகுறித்து ரெமோ லாங்கின் குழுவினர் கூறுகையில், ரெமோ லாங் வானில் இருந்து குதிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் தனக்குத் தேவையான ஒட்சிசனை சுவாசித்துக் கொண்டார் என்று கூறியுள்ளனர்.

மேலும் ஒட்சிசன் சிலிண்டரின் உதவி இல்லாமல்





உலகிலேயே அதிக உயரத்தில் இருந்து குதித்தவர் என்ற புதிய உலக சாதனையை ரெமோ லாங் படைத்துள்ளார்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | | 2 | 9 | |
| | 6 | 2 | | | | 4 | 5 | 3 |
| 3 | | | | | 9 | 7 | 1 | |
| 8 | | | | 4 | | | 7 | 9 |
| | | | 3 | | 7 | | | |
| 7 | 3 | | | 1 | | | | |
| | 9 | 6 | 7 | | | | | 4 |
| 2 | 5 | 8 | | | | 9 | 6 | |
| | 7 | 3 | | | 6 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 2 | 7 | 4 | 9 | 8 | 1 | 6 |
| 7 | 4 | 8 | 1 | 3 | 6 | 2 | 5 | 9 |
| 1 | 6 | 9 | 5 | 8 | 2 | 7 | 4 | 3 |
| 6 | 9 | 3 | 2 | 1 | 7 | 4 | 8 | 5 |
| 2 | 8 | 5 | 4 | 6 | 3 | 1 | 9 | 7 |
| 4 | 7 | 1 | 9 | 5 | 8 | 6 | 3 | 2 |
| 3 | 1 | 7 | 8 | 2 | 5 | 9 | 6 | 4 |
| 8 | 2 | 6 | 3 | 9 | 4 | 5 | 7 | 1 |
| 9 | 5 | 4 | 6 | 7 | 1 | 3 | 2 | 8 |

## பௌர்ணமி அரங்கம்

தென்மராட்சி, ஜூன் 12
சாவகச்சேரி பிரதேசசபை நாவற்குழி உப பணிமனையுடன் இணைந்து நடத்தும் பௌர்ணமி அரங்கம் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இடம்பெறும்.
சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் சி.துரைராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார். (க)



நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தில் இருந்து அமுதசுரபி அன்னதான மண்டபம் வரைக்குமான வீதிக்கு அலங்காரப் பந்தல் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (வ-17)

## சமய சந்நிதிகளில்...

வலி.வடக்கு, ஜூன் 12
ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 13 ஆம் திகதி பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாள்களுக்கு உற்சவம் நடைபெறவுள்ளது. 26 ஆம் திகதி பகல் தேர்த் திருவிழாவும், 27 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (க-86)

* * *

வலி.வடக்கு, ஜூன் 12
ஏழாலை இலந்தைக்கலட்டி பாதாள வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி பகல் விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.
தினமும் மாலையில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு சுவாமி வெளிவீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (க-86)

* * *

கிளிநொச்சி, ஜூன் 12
கண்டாவளை பன்றிசுட்டான் பள்ளக்காடு பாலவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தின் இறுதித் தினமான சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும். மகாகும்பாபிஷேகம் கடந்த இரண்டாம் திகதி இடம்பெற்றது. சிவஸ்ரீ சுவாமி ஞானேஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் இடம்பெற்றன. (க-9)

* * *

வரணி வடக்கு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-122)


### வாடகைக்கு

ஊரெழு, பலாலி வீதியில் 4 அறைகள், 2 வரவேற்பறை மற்றும் நவீன வசதிகளுடனான குளியலறை, சமையலறை உள்ளிட்ட வீடும், காணியும் வாடகைக்கு உண்டு. (சி/14477)(7.6.3) தொ.பே: 077 993 7402

### வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 226-xxxx இலக்கம் கொண்ட ISUZU வகை 01 கியூப் ரிப்பர் விற்பனைக்கு உண்டு. (சி/14742) (7.6.3)
தொ.பே: 077 361 2427
021 205 6637


## புனித அந்தோனியார் தேர்ப்பவனி

கொழும்புத்துறை, ஜூன் 12
யாழ்.குடாநாட்டின் பிரசித்தி பெற்ற தேவாலயங்களில் ஒன்றான பாஷையூர் புனித அந்தோனியார் வருடாந்தப் பெருவிழா நடைபெற்று வருகிறது.
இன்று வியாழக்கிழமை மாலை 4.45 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை திருவிழாத் திருப்பலிகளும் இடம்பெறும். முதல் திருப்பலி காலை 5.15 மணிக்கும் திருவிழாத் திருப்பலி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் காலை 6.30 மணிக்கு நடைபெறும்.
அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு புனித அன்தோனியாரின் திருச்சொரூபத் தேர்ப்பவனி ஆரம்பமாகும். ஆலயத்திலிருந்து புறப்படும் தேர்ப்பவனி சென்.அன்ரனிஸ் வீதி, கடற்கரைவீதி, கடற்கரை குறுக்கு வீதி, கொய்யாத்தோட்டப் புதுவீதி, பழைய பூங்காவீதி, ஈச்சமோட்டை வீதி, சென். அன்ரனிஸ் வீதி வழியாக ஆலயத்தை வந்தடைந்து திருச்சொரூப ஆசீர் இடம்பெறும். (க-135)

## பரிசளிப்பு விழா இன்று

கரணவாய், ஜூன் 12
வல்வை சிவகுரு வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் தையல் பாகர் அரங்கில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் சு.ஜெயானந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (க-108)


### வீடு வாடகைக்குண்டு

பருத்தித்துறை, யாழ்ப்பாண பிரதான வீதியில் நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கும், கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும் இடையில் 7 விசாலமான அறைகளும், வாகன தரிப்பிடத்துடனும் 5 பரப்புக் காணியுடனும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்களுக்கும் உகந்தது)
தொடர்பு : 077 803 9851
சிவம் (மயூரன்) (43863) (7.6.3)


## கும்பாபிஷேகம்

கைதடி, ஜூன் 12
கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை வளாக முன்றிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் பெருமான் திருக்கோயிலில் விநாயகர் திருவுருவம் ஸ்தாபித்தலும், கும்பாபிஷேக விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 7.15 மணி முதல் காலை 9.00 மணி வரை நடைபெற இருப்பதாக கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் பணியாளர் நலன் புரிசங்கம் அறிவித்துள்ளது. (க-288)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 12
உரும்பிராய் காமாட்சி அம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.05 மணி தொடக்கம் 11.53 மணி வரை இடம்பெறவுள்ளது. பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ தியாக கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் கிரியைகளை நடத்துவார். (க)

### பொது அறிவித்தல்

இரணை இலுப்பைக்குளம் பகுதியில் 1985 ஆம் ஆண்டிற்கு முன்னர் எமது மாந்தை மேற்கு பிரதேச சபையினால் சந்தைக் கட்டட கடைத் தொகுதி கேள்வி கோரலின் போது அக்கடைகளைப் பெற்றவர்கள் இருப்பின் எதிர்வரும் 25.06.2014ஆம் திகதிக்கு முன்னர் எமது பிரதான அலுவலகத்திற்கு வந்து தங்களது ஆவணங்களை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். குறித்த திகதிக்கு பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன்.
தவிசாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன். (சி/14743) (7.6.3)


## முத்தையா நினைவு விழா

க.பே.முத்தையா நூறாவது அகவை நினைவு விழா இன்று முற்பகல் 10 மணியளவில் உடுத்துறை மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. வண.ரி.எஸ் .யோசுவா அடிகளார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் நிகழ்த்துவார்.
பிற்பகல் 3 மணியளவில் வண.ஐ.இராஜ்குமார் எழுதிய விடிவெள்ளி க.பே.முத்தையா பதிவுகள் என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.
வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அதி.வண. கலாநிதி டி.எஸ்.தியாகராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலர் ந.திருலிங்கநாதனும் கலந்து கொள்வார்கள். (க)

### மரண அறிவித்தல்

#### சபாநாயகம் சிதம்பரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற உதவி உணவுக்கட்டுப்பாட்டாளர் - வவுனியா செயலகம்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாநாயகம் சிதம்பரப்பிள்ளை நேற்று (11.06.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சபாநாயகத்தின் மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகரத்தினத்தின் மருமகனும், ஞானேஸ்வரியின் கணவரும் உமையாள் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாண கல்வித்திணைக்களம்), ஆனந்தி ஆகியோரின் தந்தையும், ஜெகதீஸ்வரனின் மாமனாரும், காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் கனகலட்சுமி, சுகிர்தலட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற குமாரவேல் மற்றும் திலகவதி, காலஞ்சென்ற இராமேஸ்வரன் மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், பராசக்தி - ஈஸ்வரகுமார், சிறீகாந்தா - பிறேமதா ஆகியோரின் மாமனாரும், நகுலேஸ்வரன், செந்தூரன் - பவானி, பிரசாந்தன் - சுமதிலா ஆகியோரின் பெரிய தந்தையும், ஜெயக்காந்தன், ஜெயப்பிரியா, ஜெயதீபா, ஜெயப்பிரகாஷ், ஹரிசியாம், விசாகன், நதீசன், ஜனகஜன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2014) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்துத்துறை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை. (48913) (12.3.6)
தகவல்: குடும்பத்தினர்.
021 225 0426, 021 225 0561

### முதலாம் ஆண்டு நினைவலைகள்......

#### அமரர் வள்ளிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை



தோற்றம் 11.03.1912
மறைவு 24.05.2013

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து வாழ
வழிகாட்டிய அன்பு அம்மாவே!
பாசத்துடனும் பண்புடனும் எமை வழி நடத்திய
அன்பான மாமியே !
பாசத்தையும் பண்பையும் எமக்களித்த
அம்மம்மாவே! அப்பம்மாவே!
பாலூட்டித் தாலாட்டி, கதைபல சொல்லி
எமை வளர்த்த பூட்டம்மாவே !.
கொப்பாட்டம்மாவே!.
எமை நீங்கள் விட்டுப் பிரிந்து
இறையடி சேர்ந்து ஆண்டு ஒன்றானதுவே.
ஓம் சாந்தி!

கல்வயல்
சாவகச்சேரி. குடும்பத்தினர்.

### ஆறாத் துயரில் ஆண்டுகள் ஐந்து

#### திருமதி பராசக்தி திருநாவுக்கரசு



தோற்றம் 23.01.1935
மறைவு 05.06.2009
திதி : 12.06.2014

அம்மா ஆண்டுகள் ஐந்து ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மகனே என்றழைத்த உங்கள்குரல் இன்று வரை ஓயவில்லை
காலம் எம்மை தூரவிலத்தி துயரம் தூக்க வைத்துவிட்டது
அதன் தாக்கம் எனக்கு மட்டுமே புரியும் பரிதாபத்துக்குரிய பாவிமகன்
நான் ஏன் என்றால் இறுதிவரை உங்கள் முகம் பார்க்கவில்லை
சொல்லி அழுதால் சோகம் உங்களை நினைத்தால் வருகிறது தாகம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

70/6. ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஆனந்த சாரங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

சாரங்கம் இசைமன்றம் நடத்தும் இசை விழாவான "ஆனந்த சாரங்கம்" நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க)

Organ, Guitar,
புல்லாங்குழல் வகுப்புகள்
சினிமாப் பாடல்களுக்கான
Notes விற்பனைக்குண்டு. (48892) (12.6)
கரவீணா இசை மன்றம்,
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
TP: 077 703 1293

**கறவைப் பசு விற்பனை**
பிறிசியன் இன வெள்ளை நிற கறவைப் பசு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: (48904)(5.6.3)
077 984 7813

**வேலையாள் தேவை**
யாழ்.நகரில் இயங்கும் போன் சொப் ஒன்றுக்கு அனுபவம் உடைய, பொறுப்பு வாய்ந்த விற்பனையாளர் உடன் தேவை. (யாழ். நகர் எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது) (48908)(5.6.3)
தொடர்பு: 077 9955 588


**ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா**
13.06.2014 திருநாள்
திருப்பலி காலை 7.00 மணி
திருச்சுரூப பவனி இவ் வருடம் காலை நடைபெற மாட்டாது. மாறாக மாலை 5.30 இற்கு செபமாலை, தொடர்ந்து திருச்சுரூப பவனி - திருச்சுரூப ஆசீர்வாதம் நடைபெறும்.
பங்குத் தந்தையும் பங்கு மக்களும்
(48911) (7.6.3)

## முழு நிலாக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் நடைபெறும் முழு நாள் நிலாக் கருத்தரங்கில் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் சபையின் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் ஜீவகாருண்யமும் அருட் பிரகாசவள்ளலாரும் என்ற தொனிப் பொருளில் கருத்துப் பகிர்வை வழங்கவுள்ளார். (க)

♦♦♦

மீசாலை உயர் கலைக் கல்லூரியின் மாதாந்த முழு நிலாக் கருத்தரங்கில் ஜூன் மாதத்துக்கான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலக்கணம் தொடர்பாக கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் மாணவர்கள் இலவசமாக பங்குபற்றலாமென கல்லூரி நிர்வாகி அறிவித்துள்ளார். (க-9)

## அறிவுப் போட்டி

வடமராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்படும் வலய மட்ட விவசாய விஞ்ஞான அறிவுப் போட்டி நாளை மறுதினம் 14 ஆம்திகதி சனிக்கிழமை அல்வாய் சின்னத் தம்பி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டிக்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் விவசாய பாடத்தைக் கற்கும் தரம் 11 ஐச் சேர்ந்த தலா 5 மாணவர்களைஅனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார். (க-108)

## கதவை மூடிய முதலமைச்சர்

...... தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சரான சி.வி. விக்னேஸ்வரன் வடக்கு மக்களுக்கு ஒரு முகமறியா நபர். கொழும்பின் நிரந்தர வாசி. அவரை வடக்கு மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது ஊடகங்கள்தான். "பிரபாகரன் ஒரு மாவீரன்" என்று அவர் பேசியதை கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்து அவர் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டியது இதே ஊடகங்கள்தான். உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் தன் சட்ட ஆற்றல் மூலம் எமது உரிமைப் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பார் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் பரப்பியதும் ஊடகங்கள் தான். இன்று முதலமைச்சர் பதவிக் கதிரையில் ..........

விற்பனையில்...
சுடர்ஒளி

## இந்தப் படம் எத்தனை நாளைக்கு?

......வடமாகாண சபைக்கு காணி , பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என அரசு அடித்துக் கூறி விட்டது. மத்திய அரசின் வசமுள்ள அதிகாரத்தை எவர் கேட்டாலும் கொடுக்க மாட்டோம் என்று அடித்துக் கூறிவிட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால் திடீரென தற்போது இதில் இருந்து பல்டி அடித்து "பொலிஸ் அதிகாரத்தை தவிர வேறு எந்த அதிகாரத்தையும் வழங்க அரசு தயாராக இருக்கின்றது. அதிலும் போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரத்தைக் கூட மாகாணங்களுக்கு வழங்க முடியும்" என்று கூறியிருக்கிறார் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல. அரசின் இந்த திடீர் மாற்றத்துக்குக் காரணம் ..........



# அளவெட்டி - கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
# தேர்த் திருவிழா சிறப்புமலர் - 12.06.2014



### அவனருளாலே அவன் தாள் வணங்கிடுவோம்



எல்லாம்வல்ல எம்பெருமான் கும்பளாவளைப் பிள்ளையாருடைய தனிப்பெரும் கருணையினாலே எம்மையெல்லாம் கருவி யாக்கி தனது மஹா மஹோற்சவப் பெருவிழாவை இந்த மங்கலகரமான ஜய வருட வைகாசி மாதத் திருவிழாவையும் பெரு விழாவாக நடத்திக் கொண்டு எம்மை யெல்லாம் தன் வசப்படுத்தி, எமது ஆன்மா ஈடேற வழி வகை செய்துள்ளார், எம்பெருமானுடைய வைகாசிவிஷாக இரதோற்சவ பெருவிழா இனிதே நடைபெறவும், எமது ஆணவமலத்தையும், சத்ருக்கள்ளையும், சங்ஹாரம் செய்யவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் எம் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

கும்பழாவளைப் பிள்ளையார்
பாரம்பரிய ஆதிகர்த்தா சிவாச்சாரியார்கள்.

### ஆலயத் தல மகிமையும், வரலாறும்

''வாழ்வதுஞ் சிறபகலாய்வதுஞ் சிற்சில வாட்டும்பிணி.
ஆழ்வதுன் துன்பக்கடல் என்று நைந்தனனாகி நின்னைத்
தாழ்வது வேண்டிற் நடுத்தருள் வாயெனத்தாவி வந்தேன்
ஆழ்வது வேண்டு மருட் கும்பழாவளை யங்குசனே''

ஈழமண்டலத்தின் வடபாகமாய் உள்ள யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த அளவை மா மத்தியஸ் தலமாயுள்ள கும்பழாவளைப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் விக்னேஸ்வர ஆலய வரலாற்றை மெய்யடியார்களின் பக்தி வளர்ச்சியின் பொருட்டு காலங்கண்ட முதியோர்கள் வாய்கேட்டறிந்தபடி வரலாற்றினை எழுதுவதில் பெருமையடைகிறேன்.

பூர்வீகத்திலே மாருதப்புரவீக வல்லி என்னும் பெயருடைய சோழ வரசியிளங்கன்னிகை குதிரை முகம் உடையவளாய் குஷ்டரோக நோய் வாய்ப்பட்டமையால் அக்குதிரை முகமும் குஷ்டரோகமும் நீங்குவதற்கு பற்பல சிகிச்சைகளும் தெய்வ வழிபாடும் செய்தும் தீராமை கண்டு மனம் நொந்து தவசிரேஷ்டர் ஒருவரின் வாக்குப்படி யாழ்ப்பாணத்தின் வடகரையில் உள்ள கீரிமலை என்னும் புண்ணிய தீர்த்தத்தில் கந்தசுவாமியாரை நினைத்து ஸ்நானம் செய்து ஒரே திசையில் மாவிட்டபுரம் முதலாக தென்திசை நோக்கி ஐந்து கோயிலிலே கந்த சுவாமி விக்கிரக ஸ்தாபனாராதனை செய்யும்படி கூறினார். அதற்கிணங்க ஐந்து கோயில்களை அமைத்தும் தனது நோயும் குதிரை முகமும் பிறர் பார்வைக்கு நீங்கப் பெற்றும் தனது சொந்த நினைவுக்கும் பார்வைக்கும் நீங்கப் பெறாததாக இருந்தது. இதன் காரணத்தை ஆராய்ந்தறிந்த இடத்து கந்தசுவாமி வழிபாட்டுக்கு முன் விக்னேஸ்வர ஆராதனை எனத் தவப்பெரியோர் கூறக் கேட்ட ''குமாரத்தி தன் பிழைக்கும் மனம் நொந்து விக்னேஸ்வரரைத் தியானித்து மெய்யருள் பாலிக்கும் பெருமானே அறியாமையால் செய்த பிழையை மன்னித்து என்மேல் இரக்கம் அருளுக! யான் செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக உமது பிரதிருபத்தை ஏழு ஸ்தலங்களில் பிரதிட்டை செய்து வழிபடுவேன்'' என்று வாக்குறுதி பண்ணிக் கொல்லங்கலட்டி முதலாக தென் திசை நோக்கி ஒரே நிரையில் ஏழு ஸ்தலங்களில் விக்னேஸ்வரப் பிரதிஷ்டை செய்வித்தாள். அத்தலங்களாவன கொல்லங்கலட்டி, வரத்தலை, அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக்கடவை ஆலங்குழாய், கல்வளை என்பனவாகும்.

இவைகளுள் மத்திய ஸ்தலமாயுள்ள கும்பழாவளையில் விக்னேஸ்வர அர்ச்சனை முடியவே இராஜகுமாரத்தியின் குதிரைமுகச் சாயை அவளது சொந்தப் பார்வைக்கும் முற்றாய் நீங்கியதா யிற்று. இத்திவ்விய சரித்திர உண்மை. இக்கும்பழாவளையின் முன்னுள்ள சோலைக்கு மாவிழி திட்டி (மா+இழி+திட்டி) எனவும், இத்தலத்தின் தென்கிழக்கு மூலையிலிருக்கின்ற வயல் (இது முன்பு குளமாயிருந்தது) ''குமாரத்தி குளம்'' எனவும் அழைக்கப்பட்டது. குதிரைமுகம் நீங்கிய பின் கும்பழாவளைக்கு அடுத்ததாக ஸ்தாபித்த தென்தலத்துக்குப் ''பெருமாக்கடவை'' எனவும் அழைக்கப்பட்டது.

இந்த அரசிளங்கன்னிகைக்கு அனுக்கிரகித்தது மாத்திரமன்றி கும்பழாவளை விக்னேஸ்வரப் பெருமான் மெய்யடியார்களுக்கு அருள் பொழிந்து வினைகள் தீர்த்து செய்த அற்புதங்கள் எத்தனையோ உள. அவைகள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கூறுவோமாயின் எண்ணிலடங்கா. இந்த அற்புதங்கள் யாவற்றையும் பல புலவர்கள் கும்பழாவளை விநாயகர் தோத்திரத்திரட்டு என்னும் நூலில் அச்சேற்றுவித்து பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.

தர்மகர்த்தா சபையினர்.

### வினைதீர்க்கும் விநாயகப்பெருமான்



இசைவளமும் கலைவளமும் ஒருங்கே அமையப்பெற்று சிறந்து விளங்கும் அளவையம்பதியிலே சரித்திரப்புகழ் பெற்று அற்புதங்கள் நிறைந்து விளங்கும் வினைகளை அறுக்கும் சித்தி விநாயகப்பெருமான் இன்று கோலாகலமாகத் தேரேறி வருகின்றார் அழுதுதொழுது வடம்பிடிக்கும் அடியார்களின் அல்லல் களைந்து இன்னல் போக்கி துன்பம் துடைக்கும் கும்பழாவளை சித்தி விநாயகப் பெருமான் சித்திரத்தேரேறி பக்தர்களுக்கு அருட்காட்சி அளிக்கின்றார்.

இன்றைய தேர்த்திருவிழா அடியார்களுக்கு ஒரு பொன்னான நன்நாள் எம் பெருமான் அகந்தை அழித்து அசுரத்தனத்தை ஒடுக்கி, ஆணவத்தை அடக்கி வினைகள் தீர்ப்பவனாக தேரேறி சிங்காரப்பவனிவரும் காட்சி அடியார்களின் சிந்தையைக் குளிர வைக்கும் ஒரு பெரும்காட்சி ஆகும்.

நம்பிவரும் அடியார்களுக்கு அருள் கடாட்சத்தை அள்ளிச்சொரியும் அற்புத ஆலயம் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் ஆகும். தீயவை அழிந்து நல்லவை நிகழ இறை அருள் கூடியுள்ளது. இவ்வாலயத்தில் இவ்வருடம் மகோற்சவத்தின் பின் ஆலயம் புனரமைக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு தை மாதம் மகாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

எம்பெருமானின் பேரருள் கருணை பக்தர்களுக்குக் கிடைக்க வேண்டு மென விநாயகப்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்திப் போற்றி துதித்து எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

ம.பத்மநாதன்,
தலைவர், தர்மகர்த்தா சபை,
கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்.



(C/13830/37)(10.6.3)

**கஜமுகன்**
பல்பொருள் விற்பனை நிலையம்
பிரதான வீதி,
அளவெட்டி தெற்கு.
தொ.பே:021 2240155
Fax : 021 224 0260
E-mail:kajamukan98@yahoo. Com

**ரமணன் டிஜிற்றல்**
0777910805
VIDEO சென்ரர்
VIDEO எடிற்றிங்,
வெளிப்புற படப்பிடிப்புக்கள்.
பிரதான வீதி, அளவெட்டி.




**அம்பாள்** (உரிமையாளர்: நந்தன் ஐயா)
மனப்பந்தல் சேவை
T.P: 077 493 6278, 0777 588 9214

**ருபன்** பல்பொருள் வாணிபம்
K.R திரு மெடிக்கல் கிளினிக்
அளவெட்டி.

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கோப்பாயில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் அவற்றில் பயணித்த 3 பேர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த நவரட்ணம் றதீபன் (வயது - 23) மற்றும் சின்னராசா பகீரதன் (வயது - 30) ஆகியோர் மோட்டார் சைக்கிளில் தமது பணியிடமான கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றது.

மற்றையவர் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த வல்லிபுரம் லிங்கேஸ்வரன் (வயது - 52) ஆகியோரே காயமடைந்தனர். கோப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (வ-4)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் எரிபொருள் நிலையத்துக்கு சமிக்ஞை இன்றி திரும்பிய ஓட்டோவுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் தூக்கி வீசப்பட்டதில் கைமுறிந்தது.

இந்தச்சம்பவம் நேற்றுக்காலை திருநெல்வேலியில் இடம்பெற்றது. கோண்டாவிலைச் சேர்ந்த வை.பிரேமகுமார் (வயது-44) என்னும் பொது சுகாதார பரிசோதகரே காயமடைந்தவராவார். அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9-86)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தெய்வீக கான இசை மணிமாலை என்னும் பெயரிலான இறுவட்டு வெளியீட்டு விழாவை நடத்தவுள்ளது.

இந்த விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இந்து சமயப் பேரவை மகா மண்டபத்தில் சி.சக்திகிரீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினர்களாக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தம்பதியினர் கலந்து கொள்வார்கள்.

இறுவட்டின் முதன்மைப் பிரதிகளை தொழிலதிபர்களான ஈ.எஸ்.பி.நாகரத்தினம், கங்கை வேணியன், தி.துவாரகேஸ்வரன், த.குழந்தைவேலு, சி.முருகானந்தவேல், த.சற்குணராஜா, க.சோமசேகரம், சி.ராஜ்குமார் ஆகியோர் பெற்றுக் கொள்வார்கள். (க)

# எம்மையும் எமது நிலத்தையும் பாதுகாக்க தமிழையும் கலாசாரத்தையும் வளர்ப்போம்

## உதய வாழ்வு உதவி வழங்கும் நிகழ்வில் மாவை எம்.பி. கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 12

எமது நிலத்தை தினமும் அரசு ஆக்கிரமித்து வருகிறது. இதைத் தடுக்க நாம் தமிழை வளர்க்க வேண்டும். தமிழர் பண்பாட்டு, கலாசாரங்களை வளர்க்க வேண்டும். ஒரே நாடு, ஒரே மக்கள் என்று கூறிக்கொண்டு சிங்கள அரசு புத்த விகாரைகளை எமது பகுதிக்குள் திணித்து வருகிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். இழந்தவற்றை எண்ணிக் கொண்டிருப்பதை விடுத்து, எதிர்காலத்தில் எமது இருப்புப் பற்றி நாம் சிந்திப்போம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.



உதய வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பெண் ஒருவருக்கு வாழ்வாதார உதவி வழங்குகிறார்.

உதயன் பத்திரிகையின் உதய வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில் கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 32 குடும்பங்களுக்காக வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் வன்னேரிக்குளம் ஐயனார் ஆலயத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இந்த கிராமம் அடிப்படை வசதிகளற்று பின்தங்கியிருக்கிறது. இதுபோன்று எத்தனையோ கிராமங்கள் உள்ளன. அரசு அபிவிருத்தி என்ற போர்வையில் வெளியுலகை ஏமாற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதை எடுத்துக்காட்டுவதாக இந்த கிராமங்கள் உள்ளன.

தொண்டு நிறுவனங்களும், வெளிநாட்டவர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவத் தயாராக இருந்தும் அரசு அதைத் தடுத்து நிறுத்தி மக்களை வறுமையின் பிடிக்குள்ளேயே வைத்துக்கொள்ள முயற்சிக்கிறது.

நீங்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள். நீங்கள் அனுபவித்த துன்பங்களை வார்த்தைகளால் சொல்ல முடியாது. ஆனால் இவ்வளவு துன்பங்களையும் தாண்டி நீங்கள் தலைநிமிர்ந்து நிற்கிறீர்கள்.

நடைபெற்று முடிந்த தேர்தல்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் வழங்கிய தீர்ப்பு இதற்கு உண்மையானஎடுத்துக்காட்டு. இலங்கை அரசுக்கு அறம் கூற்றாகியுள்ளது. எமக்கு எத்தனையோ இடர்களைத் தந்து எமது வாழ்வியலைச் சிதைத்து அற நியாயத்துக்கு அப்பால் நடந்து கொண்ட இலங்கை அரசு மீது இன்று சர்வதேச மட்டத்தில் அழுத்தம் ஏற்றபட்மைக்கு நீங்கள் வழங்கிய தீர்ப்புக்களே காரணம்.


உங்கள் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வீண்போகிவிடாது. அதுமட்டுமன்றி கொடுமை செய்த அரசுக்கும் என்றோ ஒருநாள்தண்டனை கிடைத்தே தீரும்.

உங்கள் மன உறுதியை உங்கள் குழந்தைகளுக்கும் ஏற்படுத்துங்கள். இப்போது நாம் போர்முடிந்த சூழலில் வாழ்ந்தாலும் எம்மீதான அடக்குமுறைகள் அகலவில்லை.

நில ஆக்கிரமிப்பு,தமிழர் வாழ்விடங்களில் பௌத்த மத அடையாளங்களை நிறுவுதல் உள்ளிட்ட திட்டமிட்ட ஒடுக்குமுறைகள் திணிக்கப்பட்டுள்ளன. இதற்கு பதிலீடாக நாம் மாறவேண்டும். எமது மத அடையாளங்களை பாதுகாக்க வேண்டும். கலாசார விழுமியங்களைப் பேண வேண்டும். பிள்ளைகளை பெறுப்பு வாய்ந்தவர்களாக வளர்க்க வேண்டும். இவையே இன்று எமது கட்டாய கடமைகளாகியுள்ளன.

அதை விட முக்கியமானது, நீங்கள் அனைவருமே வாக்காளர்களாகவேண்டியது. உங்கள் ஜனநாயக உரிமையைப் பேண அதை உறுதி செய்து கொள்ளுங் கள்"-என்றார்.

இந்த நிகழ்வில் உதயன் குழுமத்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், மற்றும் தமிழ்தேசியக் கூட்டமைப் பின் பிரதிநிதிகள், ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர், பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)



2012 ஆம் ஆண்டுக்கான புதிய கிராம உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட மூன்று மாதப் பயிற்சி நெறிக்காக 15 பிரதேச செயலகங்களில் இருந்தும் இணைக்கப்பட்டவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் மூன்று ப்தவிக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நியமன கடிதங்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் மற்றும் பிரதேச செயலர்கள் கலந்துகொண்டனர். (வ-10)

## மாணவர்கள் எதனை விருத்தி செய்ய வேண்டும்?

மாணவர்கள் இறைவன்பால் அன்பை விருத்தி செய்ய வேண்டும். அவர்கள் இறைவன்பால் பக்தி செலுத்துவதை தவிர்த்து விடக் கூடாது. அவர்கள் கஷ்டப்படுகின்ற போதிலும் கூட இறை நம்பிக்கையை இழக்கக் கூடாது.

வேதனையும், மகிழ்ச்சியும், நயமும் நட்டமும், இன்பமும் துன்பமும் எல்லாம் கடவுளின் பிரசாதம் என்று மாணவர் நினைக்க வேண்டும்.




## திக்கம் வடிசாலையை மீள இயக்க காலம் தேவை

யாழ்ப்பாணம், ஜீன் 12

திக்கம் வடிசாலையை மீள இயக்குவதற்கு இன்னும் 3 மாத காலம் தேவைப்படும். வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்கு ஏற்ப தொழில்நுட்ப வளங்களும் பெற்றுக் கொடுக்கப்படும் என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

திக்கம் வடிசாலையின் அபிவிருத்திப்பணிகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் பனை அபிவிருத்தி சபை மற்றும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தமது கருத்தை முன்வைத்தனர்.

திக்கம் வடிசாலையின் அபிவிருத்திப்பணிகளுக்கென 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் நவீன உபகரணங்களின் பயன்பாட்டை கொண்டு வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்கு ஏற்ப உற்பத்திகளைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

இதற்கான பணிகள் செப்ரெம்பர் மாதம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. என்றும் தெரிவித்தார். (வ-14)

## மின் தடை அறிவித்தல்

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை பாற்பண்ணை, முடமாவடி, திருநெல்வேலி, மருத்துவபீடப் பிரதேசம், கொக்குவில், பொற்பதி வீதி, ஆடியபாதம் வீதி, ஜிபிஎஸ் ஆகிய இடங்களிலும்-

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு சந்தை வரை, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார்கட்டு, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மாம்பழம் சந்தி,புங்கங்குளம் வீதி, இலந்தைக்குளம் வீதி, ஆனந்தன் வடலி வீதியின் ஒரு பகுதி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, தோப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி ஆகிய இடங்களிலும்- மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## குடும்ப மட்ட விநாடி வினா இறுதிப் போட்டி

தென்மராட்சி, ஜூன் 12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 வகுப்பு மாணவர்களிடையே நடத்தப்பட்ட குடும்ப மட்ட விநாடி வினாப் போட்டிகளில் முதல் நிலை பெற்ற மாணவர்களின் வலய மட்ட போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

குடும்ப நிலைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பின்வரும் 7 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களை உரிய நேரத்துக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, கைதடி குருசாமி வித்தியால யம், வரணி வடக்கு அ.த.க. பாடசாலை, போக்கட்டி றோ.க. த.க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை, கச்சாய் அ.த.க. பாடசாலை. (வ-9)

## வடமராட்சியிலிருந்து ஒருவரே தெரிவு

வடமராட்சி கல்வி வலயத்திலிருந்து சேவை மூப்பு மற்றும் திறமைப் போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றினடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III பதவிக்கு முன்னாள் கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி,நற்குணலிங்கம் மட்டுமே தெரிவாகியுள்ளார். (க-35)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இராணுவ

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அதிகரித்துக் காணப்படும் இராணுவப் பிரசன்னமே பெண்கள் அவ்வாறு, பாதுகாப்பற்ற சூழலாக உணர்வதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)

### ஜெயலலிதாவுக்கு

மாகாணசபையின் ஆளுங் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினரான து.ரவிகரனே இவ்வாறு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

"இலங்கையில் பல்லாயிரக் கணக்கான வருடங்களாக அரசியல் மற்றும் கலாசார இருப்பை தமிழர்கள் கொண்டிருக்கின்றனர். ஆயிரத்து 500 ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட அந்நிய ஆக்கிரமிப்புகளின் முன்னர் தமிழர் கொண்டிருந்த இறையாண்மை, சுதந்திரத்தின் போது மீள வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக தமிழர் உரிமைகளை பறிப்பதும் தமிழர் தேசங்களில் இனவிகிதாசார அமைப்பை மாற்றும் சிங்கள குடியேற்றங்களை நிறுவும் நடவடிக்கைகளுமே இலங்கை ஆட்சியாளர்களால் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஈழத்தமிழரின் நிரந்தரத் தீர்வு தொடர்பில் தொடர்ந்தும் உறுதியான நிலைப்பாட்டை பேணும் தமிழக முதல்வருக்கு ஈழத்தமிழ் மக்கள் சார்பில் நன்றிகளைக் தெரிவித்துக்கொள்கின்றேன்"- என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இலங்கை விடயத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எடுத்துள்ள நிலைப்பாட்டை எதிர்த்து, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முன்பாக அவரது கொடும்பாவி, அரச சார்புக் கட்சியினரால் நேற்றுமுன்தினம் எரிக்கப்பட்டிருந்தது. (ற)

### உண்மையை

"உண்மையைக் கண்டறியும் செயன்முறையுடன் ஒத்துழைக்க வழங்கப்பட்டுள்ள வாய்ப்பை இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்"- என்று கேட்டுக் கொண்டார். பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் இவ்வாறே கோரிக்கை விடுத்துள்ளன.

ஆயினும் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, "ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு இலங்கை ஒரு போதும் ஒத்துழைப்பு வழங்காது"- என்று தெரிவித்திருந்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் இரா.சம்பந்தனிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிடும்போது,

"கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. விசாரணையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ஆரம்பம் முதலே இந்த விசாரணைக்கு ஒத்துழைக்கமாட்டோம் என்று இலங்கை அரசு பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றது

போர் நிறைவுக்கு வந்து ஐந்து வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், உள்நாட்டில் நம்பகரமான - சுதந்திரமான விசாரணையை இலங்கை அரசு நடத்தியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. ஐ.நா. குழுவின் விசாரணைக்கு ஒத்துழைக்க மாட்டோம் என்று இலங்கை அரசு தற்போது சவால் விட முடியாது.அதிலிருந்து தப்பவும் முடியாது. ஐ.நா. கூட்டத் தொடரில் நிறைவேற் றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்தியே ஆக வேண்டும்.

வன்னியில் இறுதிப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், மனிதாபிமான நடவடிக் கைகளிலேயே ஈடுபடுகின்றோம் என்று சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு கூறிவந்தது. தற்போதும் அந்த வார்த்தையையே இலங்கை அரசு தொடர்ந்து உச்சரித்து வருகின்றது.

உண்மையில் இலங்கை அரசு மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் ஐ.நா. குழுவின் விசாரணைக்கு முகம்கொடுக்கப் பின்னடிப்பது ஏன்?. இந்த விசாரணை குறித்து கவலை கொள்வதற்கு அவசியமே இல்லை. ஐ.நா. விசாரணை மூலம் உண்மையைக் கண்டறிவதற்கு இலங்கை அரசு ஒத்துழைக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் தமிழ் மக்கள் சார்பிலும் வேண்டிக்கொள்கின்றேன்"- என்று தெரிவித்தார். (ற-சி)

### நியதிச்

திச் சட்டங்கள் நிறைவேற்றப் படுவது மேலும் தாமதமாகியுள்ளது.

நியதிச் சட்டம், முத்திரை கைமாற்றல் நியதிச் சட்டம் மற்றும் முதலமைச்சர் நிதியச் சட்டம் ஆகிய மூன்று நியதிச் சட்டங்கள் மீதான இரண்டாம் வாசிப்பு மற்றும் சபையின் அங்கீகாரம் பெறுவதற்கான வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு நேற்றுக் கூட்டப்பட்டது.

வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட குறித்த மூன்று நியதிச் சட்டங்களும், வடக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஆளுநரின் அனுமதிக்காக கடந்த 9 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இது தொடர்பில் ஆளுநரால், பேரவைச் செயலாளர் மற்... பிரதம செயலாள... நேற்றுப் பதில் க... அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அதில், "அரசமைப்புக்கு உட்பட்டு நியதிச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய வேண்டியுள்ளது. அதற்கமைய கிடைக்கப் பெற்ற மூன்று நியதிச் சட்டங்களுக்குமுரிய பரிந்துரைகள் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும்"- என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கடிதம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், "நியதிச் சட்டத்தை அங்கீகரிப்பதற்கு ஆளுநருக்கு இரு வார கால அவகாசம் வழங்கப்படும். அதன்பின்னர் விசேட அமர்வு நடத்தப்பட்டு சட்டம் அங்கீகரிக்கப்படும். வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டம் கிழக்கு மாகாணத்தில் நடைமுறையில் உள்ள நிதி நியதிச் சட்டத்தைத் தழுவி உருவாக்கப்பட்டது. அதில் உள்ளவற்றை விடவும் மேலதிகமாகச் சில சரத்துக்களுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட சரத்துக்களை, தனியாக ஆளுநருக்கு அனுப்பி வைப்பதன் மூலம் விரைவாக நியதிச் சட்டத்துக்கு அவரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்"- என்று தெரிவித்தார்.

ஆளுநருக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டதையடுத்து அமர்வு அரைமணி நேரத்திலேயே முடிவுற்றது. வடக்கு மாகாண சபையின் வழமையான அமர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் என்றும் அவைத்தலைவர் அறிவித்தார்.

மாகாணசபை கட்டளைச் சட்டத்தின் 24 (1) பிரிவின் கீழ், நியதிச் சட்டங்களை மாகாண சபை உருவாக்க முடியும். குறித்த சட்டங்களில் வரி விதிப்பு, குறைப்பு, அதிகரிப்புத் தொடர்பில் ஏதாவது விடயங்கள் உள்ளடக்கப்படுமாயின் அது தொடர்பில் மாகாண ஆளுநரின் பரிந்துரையுடனேயே நியதிச் சட்டம் வாசிப்... எடுத்து கொள்ள முடி... (ற-5)

... அதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரி சட்டத்தரணி ஜே.ஜெயரூபன் மற்றும் கே.ரி.ராஜசிங்கம் ஆகியோர் இணைந்து வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் திருமதி ஜோய்மகிழ் மகாதேவா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

"இறைச்சி விற்பனைக் கட்டளைச் சட்டம், விலங்குகள் சித்திரவதைத் தடைச்சட்டம், அது தொடர்பான ஒழுங்கு விதிமுறைகளை மீறாது வேள்வியை நடத்த முடியும். அதனை மீறிச் செயற்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு மன்று உத்தரவிடுகிறது.

சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அவற்றை மீறாமல் நடக்கும் நிகழ்வுகளைத் தடுக்க பொலிஸாருக்கு அதிகாரமில்லை. அவற்றை மீறும் பட்சத்தில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும். வேள்விக்கு உரிய அனுமதி பெற்று தகுதி வாய்ந்த அதிகார சபையிடம் அனுமதிப் பத்திரம் பெறுதல் வேண்டும். அவற்றின் நியதிச் சட்டங்களுக்கு ஏற்ப வேள்வியை நடத்தலாம். அதனை மீறினால் பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும்."- என்று தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம், இந்த வழக்கைத் தாக்கல் செய்தவர்களை வெகுவாகப் பாராட்டியது.

வழக்குத் தொடுநர் சார்பில் நேற்றையதினம் சட்டத் தரணிகளான வி.திருக்குமரன், மே.சுகாஷ், திருமதி சிவபாதம் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். ஆலய நிர்வாகம் சார்பில் சட்டத்தரணி பொ. சுந்தரலிங்கம் முன்னிலையாகியிருந்தார்.

முன்னேஸ்வரம் காளி கோயிலில் கடந்த வருடம் வேள்வி இடம்பெறவிருந்த நிலையில் அதனை மேன்முறையீட்டு நீதிமன்றம் தடுத்து நிறுத்தியிருந்தது. அது தொடர்பான தீர்ப்பில் வேள்வியின் பின்னர் இறைச்சி விற்பனை சட்டத்துக்கு முரணான செயல். அது குற்றவியல் குற்றம். மிருகவதைச் சட்டத்துக்கு எதிரானது. இந்து சமயக் கோட்பாடுகளுக்கு முரணானது. இந்து மதத்தைப் புண்படுத்தும் செயல் என்று மனுதாரர் சார்பில் கருத்து முன்வைக்கப் பட்டிருந்தது.

ஆனால், இது சமய நம்பிக்கை. வேள்வியைத் தடை செய்வது சமய நம்பிக்கைக்கு எதிரானது. இந்த விடயத்தில் தடை செய்யக்கூடாது. தடை செய்யும் பட்சத்தில் ஆபத்து ஏற்படலாம் என்பது உட்பட பல வாதங்கள் எதிர்மனுதாரர் சார்பில் கடந்த திங்கட்கிழமை முன்வைக்கப்பட்டிருந்தது.

பல காலமாக நடைமுறையில் இருந்து வரும் இந்த வேள்வியைத் தடுத்து நிறுத்துமாறு பலராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த உயிர்ப்பலியைத் தடுத்து நிறுத்துமாறு இந்து சமய கலாசாரத் திணைக்களமும் நேற்று முன்தினம் அறிக்கை மூலமாகக் கோரியுள்ளது.

ஆலயங்களில் உயிர்ப்பலியிடல் முழுமையாகத் தவிர்க்கப்படவேண்டும் என்று பல வருடங்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்றபோதும் சில ஆலயங்கள் வேள்வியைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்து இந்த வேள்வியைத் தடுத்து நிறுத்துமாறு திணைக்களம் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் அனுப்பியிருந்தது. இந்தநிலையிலேயே அனுமதி பெற்று வேள்வியை நடத்தமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ற-4)

### கத்திக்

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர் என்றும். அத்துடன் கொலையுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவரை பொலிஸார் தேடி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. உயிரிழந்தவரின் சடலம் மரண விசாரணைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது. (ற-55)

### வடக்கு

அவசர அவசரமாகச் சட்டங்களை உருவாக்குகின்றனர். உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி உடனேயே அதனை நாடாளுமன்றில் சட்டமாக நிறைவேற்றுகின்றனர். நாம் தற்போது ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளவற்றையும் அவசர நியதிச் சட்டமாகக் கருதி, அதற்கு மூன்று நாள்களுக்குள் பதிலளிக்குமாறு கோரலாம். நாம் சர்ச்சைக்குரிய நியதிச் சட்டம் ஒன்றையும் கோரவில்லையே. நாம் விரைவில் வடக்கு மாகாணத்துக்குரிய பொலிஸ் படையை நிறுவுவதற்குரிய நியதிச் சட்டத்தையும் சமர்ப்பிப்போம்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### படைகளுக்கு

வாய்க்காலில் 19 ஆவது சிங்க தொண்டர் படை கோரிய காணி, கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 27 ஆவது படையணியின் காலாட்படை 'ஏ' குரூப் கோரிய காணி மற்றும் இராணுவத்தின் 5 ஆவது தொண்டர் படையணி கோரிய காணி, கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 20 ஆவது தொண்டர் படையின் விஜயபாகு காலாட்படை கோரிய காணி மற்றும் பாதுகாப்புப் படையணியின் தலைமையகத்தில் விடுமுறை விடுதி அமைப்பதற்கு கோரிய காணி, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 671 ஆவது படைத் தலைமையகம் கோரிய காணி மற்றும் இராணுவத்தின் 12 ஆவது தொண்டர் படையணியின் விஜயபாகு காலாட்படை கோரிய காணி, நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 27 ஆவ்து கெமுனு படையணி கோரிய காணி, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 7 ஆவது விஜயபாகு காலாட் படையணி கோரிய காணி, நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 9 ஆவது தேசிய பாதுகாப்பு படையணி கோரிய காணி, கிளிநொச்சியில் இராணுவத்தின் 25 ஆவது தொண்டர் படையணியின் கஜபாகு படைப் பிரிவு கோரிய காணி, கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 11 ஆவது படையணி கோரிய காணி, இராணுவத்தின் 6 ஆவது தேசிய பாதுகாப்புச் செயலணி கோரிய காணி மற்றும் இராணுவத்தின் 6 ஆவது தேசிய பாதுகாப்புச் செயலணியின் நிலைப்படுத்தப்பட்ட காணி, யாழ்ப்பாணத்தில், இராணுவத்தின் 14 ஆவது கெமுனு தொண்டர் படையணி கோரிய காணி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 4 ஆவது தேசிய பாதுகாப்பு செயலணி கோரிய காணி, முசலி பிரதேச செயலர் பிரிவில் இராணுவத்தின் 25 ஆவது சிங்கப் படைப் பிரிவு கோரிய காணி, நல்லூரில் இராணுவத்தின் 23 ஆவது கஜபாகுப் படைப் பிரிவினர் கோரிய காணி, பச்சிலைப்பள்ளியில் இராணுவத்தின் 4 ஆவது இயந்திர சாதனக் காலாட் படையணி கோரிய காணி, கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 20 ஆவது விஜயபாகு தொண்டர் படையணி கோரிய காணி மற்றும் இராணுவத்தின் 20 ஆவது தொண்டர் படை விஜயபாகு காலாட் படை கோரிய காணி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் இராணுவத்தின் 1 ஆவது சிங்கப் படைப் பிரிவு கோரிய காணி ஆகியவற்றை வழங்க வேண்டாம்"- என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-5)





# அடம்பிடித்த வீரர்கள் கிடைத்தது போனஸ்

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமானால் கூடுதலாக போனஸ் தரவேண்டும் என கமரூன் வீரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். உலகக்கிண்ணப் போட்டிகள் பிரேஸிலில் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன. இதற்காக அனைத்து அணிகளும் சிறப்பான ஆட்டத்தைக் காட்டப் பயிற்சி பெற்று வருகின்றன.

இந்நிலையில் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் கமரூன் உதைபந்தாட்ட அணியின் வீரர்கள் தங்களுக்கு கூடுதலாக போனஸ் தொகை வழங்க வேண்டும் என்று திடீரெனப் போராட்டத்தில் இறங்கினர்.

போனஸ் பற்றி அறிவித்தால்தான் பிரேஸில் செல்வோம் என்று பயிற்சி ஆட்டத்தில் கூட பங்கேற்காமல் அடம்பிடித்தனர்.

இதைத் தொடர்ந்து உதைபந்தாட்டச் சங்கம், வீரர்களுடன் பேச்சு நடத்தி கூடு தலாக போனஸ் கொடுத்ததைத் தொடர்ந்து பிரச்சினை முடிவுக்கு வந்தது. அதன் பின்னரே கமரூன் அணி வீரர்கள் தனி விமானம் மூலம் பிரேஸிலுக்குப் பயணமானார்கள். (த)

# நான்கு பந்துகளில் நான்கு இலக்குகள்




இங்கிலாந்தில் இடம்பெறும் பிராந்திய அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகளில், நேற்று முன்தினம் சாதனை ஒன்று நிகழ்த்தப்பட்டது.

சோமர்செட் பிராந்திய அணியின் வீரர் அல்போன்ஸோ தோமஸ் நான்கு பந்துகளில் நான்கு இலக்குகளை வீழ்த்தியமையே அந்தச் சாதனை.

இந்நிலையில், தோமஸ் பத்து பந்துவீச்சுக்களில் எவ்வித ஓட்டங்களும் இன்றி 5 இலக்குகளை வீழ்த்தியமை விசேட அம்சமாகும். இவ்வாறானதொரு சாதனை, 14 வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்தில் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அல்போன்ஸோ தோமஸ், அடுத்தடுத்து ஜேம்ஸ் என்யன், ரொரி ஹமில்டன், எட் ஜொய்சி மற்றும் மெட் மச்சான் ஆகியோரது இலக்குகளை வீழ்த்தினார்.

37 வயது அல்போன்ஸோ தோமஸ், கடந்த 2007ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அணி சார்பாக தனது முதலாவது சர்வதேசப் போட்டியில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# மிரட்டலுக்கு அடிபணிந்த ஐ.சி.சி.

International Cricket Council

தங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமெனச் சர்வதேச கிரிக்கெட் சபையை இந்திய கிரிக்கெட் சபை மிரட்டியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் சபையில் முடிவு எடுப்பதில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைகளுக்கு அதிக அதிகாரம் மற்றும் கூடுதல் வருமானப் பகிர்வு ஆகியவற்றுக்கு வழி வகை செய்யும் திருத்தப்பட்ட புதிய சட்ட வரைவு சில மாதங்களுக்கு முன்பு ஐ.சி.சி. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்காக மேற்கொண்ட முயற்சிகள் குறித்து இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் சஞ்சய் பட்டேல் ஐதராபாத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கூறுகையில், எங்களது திட்டத்துக்குப் பல்வேறு ஊடகங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. மேலும், பெரும்பாலான கிரிக்கெட் சபைகள் எங்கள் கூற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தன.

இதனையடுத்து, இந்திய கிரிக்கெட் சபைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்றால், எங்களுக்கு என்று சொந்தமாக இன்னொரு ஐ.சி.சி. அமைப்பை உருவாக்க வேண்டி இருக்கும் என்று நாங்கள் எச்சரித்தோம்.

அதன் பிறகே இங்கிலாந்து, ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைகள் எங்கள் திட்டத்தை ஏற்றுக் கொண்டன என்று தெரிவித்துள்ளார். (த)

# சர்வதேச கிரிக்கெட் சபைக்குக் கங்குலி




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி இந்த வருட இறுதியில் சர்வதேச கிரிக்கெட் சபையுடன் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் மைக் பிரியாலி இதற்கான அழைப்பை சௌரவ் கங்குலிக்கு விடுத்துள்ளதாக லண்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபைக் குழாமில் இணைந்து கொள்ளும் மூன்றாவது இந்திய வீரர் என்னும் தகைமையை கங்குலி பெறுகிறார்.


ஏற்கனவே, இந்திய வீரர்களான ராகுல் ட்ராவிட், அணில் கும்ப்ளே ஆகியோர் சர்வதேச கி ட் சபை குழாமில் உள்ளனர்.

இதேவேளை, 2013 ஆம் ஆண்டு ரிமியர் லீக் போட்டிகளில் முன்கூட்டியே ாட்டிகள் நிர்ணயிக்கப்பட்டன என்ற குற்றச்ச டுகளை விசாரிப்பதற்கான விசாரணை குழு வான்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் பணிப்புரைக்கு அமைய நீதியரசர் முகுல் முட்கல் சபை தற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விசாரணைக் குழுவில் சௌரவ் க குலியும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளமை றிப்பிடத் தக்கது. (த)

# நடால் முதலிடத்தில்




பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் உலக ரென்னிஸ் வீர - வீராங்கனைகளின் தர வரிசைப் பட்டியலை சர்வதேச ரென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்ற ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால் முதலிடத்தில் காணப்படுகின்றார்.

இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த சேர்பியா வீரர் நோவாக் ஜோகோவிச் 2ஆவது இடத்திலும், சுவிட்சர்லாந்து வீரர் ஸ்ரனிஸ்லாஸ் வாவ்ரிங்கா 3ஆவது இடத்திலும், சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் 4ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே, பெண்கள் ஒற்றையர் பிரிவு தர வரிசையில், பிரெஞ்ச் ஓபன் போட்டியில் 2ஆவது சுற்றில் தோல்வியடைந்த அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் முதலிடத்தில் தொடருகிறார். சீன வீராங்கனை லீ நா 2ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார். (த)

# கருணாகரன், நெடியகாடு அணிகள் அடுத்த சுற்றுக்குள் முன்னேற்றம்

கரணவாய், ஜூன் 12

முருகனின் அசத்தலான கோல் போடுகை மூலம் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும், மதனின் துல்லி யமான விளையாட்டின் மூலம் வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் அடுத்த சுற்றுக்குள் முன்னேறின.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட‌ச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழ கமும் கரவை சுடரொளி விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமான இந்தப் போட்டியில் ஆட்டம் ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் குகன் தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார். அதற்கு 5 ஆவது நிமிடத்தில் முருகன். ஒரு கோலைப் போட எதிரணியினர் ஒரு கோலும் போடப்படாத சந்தர்ப்பத்தில் 2:0 என்ற கோல் அடிப்படையில் இடைவேளைக் காக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகி 3 ஆவது நிமிடத்தில் முருகன் மேலும் ஒரு கோலைப் போட்டார். ஆனால் தொடர்ந்து எந்த அணியும் கோல் போடாத நிலையில் 3:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக் கழக 'ஏ' அணி யும் சென். தோமஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய நெடியகாடு அணி மதன் போட்ட 3 கோல்கள், சுதாகரன், வசீக ரன் ஆகியோர் போட்ட தலா 2 கோல்களின் உதவியுடன் 7 கோல்களைப் போட 7:2 என்ற கோல் அடிப்படையில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.சென்.தோமஸ் அணி சார்பில் நிலோஸ், சுமன் ஆகியோர் தலா ஒரு கோலை போட்டனர். (த-108)

## மரண அறிவித்தல்கள்

### சந்திரகுமார் கோபி ஆனந்



பருத்தித்துறை, இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும் வைரவப் புளியங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகுமார் கோபி ஆனந் நேற்று(11.06.2014) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சந்திரகுமார் (கோபி ஏஜென்சி) - மீனாதேவி தம்பதியரின் அன்பு மகனும் நிஷாந்தினிதேவி, விஜய் ஆனந், துசியந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாஸ்கரன், சர்மிளா ஆகியோரின் அன்பு மைத்துனரும் தனோபன், கோஷியா ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோபி ஏஜென்சி,
33 மில் வீதி,
வவுனியா.

(48932)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இராசமணி சுந்தரம்



இல.221/7, கனகசபை ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி சுந்தரம் நேற்று (11.06.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் சகோதரியும் காலஞ் சென்றவர்களான நாகேஸ்வரி, கனகலிங்கம் மற்றும் கமலநாதன் ஆகி யோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற வீரசிங்கம், பவளம் மற்றும் இராசமலர் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சந்திரமோகன் மற்றும் றஞ்சிதவதனி, மதிவதனி, சந்திரகுமார், தமிழ்ச்செல்வி, கலைச் செல்வி, கனகலிங்கம், வினோத், அஜந்தன், சுதர்சன், சந்திரிகா, சசி ரேக்கா, சசிக்குமார், றஜித்குமார், றஞ்சித்குமார், ரேணுகா ஆகி யோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2014) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.221/7, கனகசபை வீதி,
யாழ்ப்பாணம்.

(48930)

தகவல்:
குடும்பத்தினர்.

## வீட்டுப் பொருள்கள் விற்பனைக்கு

வீட்டுத் தளபாடம், மின் உபகரணங்கள் மற்றும் அன்றாட பாவனைக்குரிய உபகரணங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 870 2580

(48921)(5.6)

## உடன் தேவை

அச்சகம் ஒன்றுக்கு Photo shop, CorelDraw, Page maker, தெரிந்த அனுபவமுள்ளவர் தேவை.
மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

0777917680

## உடன் தேவை

தனியார் கல்ஷி நியைலத்துக்கு அலுவலக உதவியாளர் (Clerk) தேவை. (பெண்கள்)
மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

0774696695

## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

1. **ICT பா டத்தைக் கற்பிக்கக் கூடிய பட் டதாரி ஆசிரியர்கள்**
   **தகைமைகள்:**
   B.Sc பட்டதாரிகள் (ICT) மற்றும் பட்டதாரி பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
   20 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. **விஞ்ஞான தொழில்நுட்ப பா டத்தை கற்பிக்கக் கூடிய பொறியியல் பட் டதாரி ஆசிரியர்கள்** பட்டம் பெற்றவர்கள் மற்றும் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு:** பட்டதாரி அல்லாதோர் விண்ணப்பிக்க வேண்டியதில்லை

இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்பிக்கவேண்டும். உணவு, தங்குமிடம் என்பன ஒழுங்கு செய்து தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 19.06.2014**

தொடர்புகளுக்கு:
தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம் : 077 060 4950, 021 4923118

(சி/14745)(10.6)

## தொழிற் பயிற்சிகள்

பெற்றோர்களே! பாடசாலை செல்லாத உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைத் தீர்மானியுங்கள்.

* Mobile Phone Repairing
* Electronics
* Air-Conditioning
* Electrical Wiring
* Rewinding

சகல பயிற்சிகளும் முழு நேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி முடித்தவர்களுக்கு நிறுவனங்களில் கூடிய சம்பளத்தில் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்: 15.06.2014

விவரங்களுக்கு: JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 23, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: NEW ASIAN CENTER
இல. 56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077 824 9949

(C/14744)(7.6.3)

குறிப்பு : தொழில் புரிபவர்களுக்கு ஞாயிறு 2pm - 6pm பயிற்சிகள் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதன் அருச்சுனன்

(உதவி இயக்குநர் - எஸ் ஓ எஸ் சிறுவர் கிராமம், யாழ்ப்பாணம்)



இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமி நாதன் அருச்சுனன் 10.06.2014 செவ்வாய்க்கிழமை கொழும்பில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதன் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் லட்சுமி அம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், செல்வராணியின் (ஆசிரியை - யாழ்.கனகரத்தினம் மத்திய ம.வி,) அன்புக் கணவரும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.06.2014) வெள்ளிக்கிழமை 25, ஶ்ரீபால மாவத்தை, கல்கிசையில் உள்ள அவரது இல்லத்தில் மலரஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(48925)
(12.3.6)

தகவல்: எஸ் ஓ எஸ் குடும்பம் இலங்கை.

## விசேட கருத்தரங்கும் பயிற்சி வகுப்பும்

SLAS

போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பம் 14.06.2014 சனி 8.30 - 3.30 வரை நடைபெறும். சகல பாடங்களும் விரிவான முறையில் கற்பிக்கப்படும். ஒவ்வொரு சனியும் 8.30 - 3.30 வரை நடைபெறும்.

விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P.கமல்தாசன்

நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
தொ.பே.: 0774696695

## மரண அறிவித்தல்

### குணரட்ணம் ரூபகுமார்



யாழ். வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட குணரட்ணம் ரூபகுமார் (06-06-2014) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குணரட்ணம் (பதிவு பெற்ற வைத்தியர் RMP- வல்வெட்டி)-தங்கேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கலாமதி, சிவதேவி ஆகியோரின் அன்புக் கணவரும், திரு.திருமதி மயில்வாகனம் சாரதாதேவி, திரு.திருமதி நவரட்ணம் செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், தாரணியின் அன்புத் தந்தையும், சுகுமாரன், உருத்திராதேவி, ஜீவகுமாரன், நேசகுமார், சிவகுமார், காலஞ்சென்ற அஞ்சுராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஷ்பம், சதானந்த யோகேஸ்வரன், மித்திரா, ரஞ்சனா, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யாதவன், சுபோதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபத்திரா, ஷாமிலி, தனுஜா, அஜிதன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கிஷானி, கிருஷாந்த், கிரிஷாந், சஞ்ஜித், சங்கவி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.06.2014 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகள்:
பிரித்தானியா - 00442085185684
கொழும்பு - 011 259 6589

(C/14748)
(10)

தகவல்: தாரணி (மகள்),
ஜீவகுமரர் (சகோதரன்),

## தவறிவிட்டது

பூபாலசிங்கம் நிசாந்தன் என்பவருடைய தே.அ. அட்டை (872462490V) சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகருக்கும், செம்மணி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 383 4649

(48914)
(7.6.3)

## தவறிவிட்டது

இரத்தினசிங்கம் சசிக்குமார் என்பவருடைய தே.அ.அட்டை 791574650 V) சாரதி அனுமதிப்பத்திரம் கைபை (பேஸ்) என்பன புதுக்குடியிருப்பு சந்திக்கும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இக்கத்துக்கு தொடர்புகொள்ளவும்.

077 349 8116

(சி/14749)
(10)

போதிகை புத்தகசாலை புதுக்குடியிருப்பு சந்தி, எனும் முகவரியில் கொடுத்துதவவும்

## வீடு விற்பனைக்கு

கைதடி மானிப்பாய் வீதிக்கு அருகில் யாழ்.விவசாயக் கல்லூரிக்குப் பின் புறமாக வீட்டுடன் 4 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 870 2580

(48720)(5.6)

## கடையுடன் கூடிய காணி விற்பனைக்கு

உரும்பிராய் வீதியில் 2½ பரப்புக் காணி இரண்டு கடையுடன் மேலே கட்டுவதற்கு (இரண்டு வீடு) அடித் தளம் உடைய கட்டடத்துடன் விற் பனைக்குண்டு.

தொடர்பு: 077 870 2580

(48919)(5.6)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பரப்பு 1, பரப்பு 1.5 உடைய, சுற்றுமதிலுடன் கூடிய காணித் துண்டுகள் விற்பனைக் குண்டு.

தொடர்பு : 0777 037058

## Wedding Rich Cakes

ஓடருக்கு செய்து தரப்படும்.

★ Sugar ஐசிங்
★ Cadju ஐசிங் என்பன குறுகிய காலத்தில் தரமாக செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Vaddukoddai
T.P: 077 9184190

(48927)
(10)

# சென்.பற்றிக்ஸ் வெற்றி

கரணவாய், ஜூன் 12

அனோஜனின் அதிரடியான சதம் கைகொடுக்க நெல்லியடி மத்திய கல்லூரி அணியை 104 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கிடையில் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி அனோஜனின் அசத்தலான சதத்தின் உதவியுடன் 40.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக அதிரடியாக விளையாடிய அனோஜன் 101 ஓட்டங்களையும், சௌரவன் 26 ஓட்டங்களையும், பியரிக் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் என்.சிந்துஜன் 6 இலக்குகளையும், தர்சிகன் 2 இலக்குகளையும், நிலவன், அபிலாஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 258 என்ற இமாலய வெற்றி இலக்குடன் களம் புகுந்த நெல்லியடி மத்திய கல்லூரி அணி, சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு வியூகங்களைத் தகர்த்து வெற்றி இலக்கை அடைய முடியாது 153 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அந்த அணி சார்பாக அன்பரசன் 26 ஓட்டங்களையும், சிவப்பிரியன், நிலவன் ஆகியோர் தலா 24 ஓட்டங்களையும், தர்சிகன் 18 ஓட்டங்களையும்பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் மொனிக் ரதீசன், பார்க்கியே ஆகியோர் தலா 2இலக்குகளையும், சௌரவன், நிரூசிகன் மற்றும் றொபின்சன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (த-108)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ் மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக ஏ அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளையாட்டுகழகம் நடத்தும் சிவகுருநாதர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## மரண அறிவித்தல்



### முத்தையா திலீபன் (திலி)

இல. 586, 6 ஆம் யுனிற் இராமநாதபுரத்தைப் பிறப்பிடமாகவும் தம்பகாமத்தை பளையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா திலீபன் (திலி) நேற்று (11.06.2014) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் முத்தையா - முத்துலக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிறிஸ்தோபர் தங்கராசா மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சுகந்தினியின் அன்புக் கணவரும், அக்ஷயாவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான றஜி, றமேஷ் மற்றும் தர்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விஜயன், ஜெமிஸ்றொசான் (நோர்வே), றொசானி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற றோமானி ஆகியோரின் மைத்துனரும் பிறையாளன், பிருத்திகா ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற அளவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பதியரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.06.2014) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு பளை தம்பகாமம் மலையான்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## காலிறுதி ஆட்டத்துக்குள் பலாலி விண்மீன் அணி

கரணவாய், ஜூன் 12

அசத்தலான ஆட்டத்தின் மூலம் 5:2 என்ற கோல் அடிப்படையில் வென்று காலிறுதி ஆட் டத்துக்குள் நுழைந்தது பலாலி விண்மீன் அணி.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற் கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் பலாலி விண்மீன் விளை யாட்டுக் கழகமும், வல்வை விளையாட்டுக் கழக 'பி' அணியும் மோதின. ஆட்டத்தின் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய விண்மீன் அணி ஆட்டம் ஆரம்பமாகி 5 ஆவது நிமிடத்தில் ரஞ்சித் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத் தார். அதனை அடுத்து 9 ஆவது நிமிடத்தில் வல்வை அணியைச் சேர்ந்த குட்டி மணி கோல் ஒன்றைப் போட ஆட்டத்தில் பரபரப்புத் தொற்றிக் கொண்டது. இருந்த போதும் தமது ஆட்டத்தின் போக்கில் வேகத்தை அதிகரிக்க விண் மீன் அணி ஆட்டம் நிறை வடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் அயன்குட்டி, டேமியன் இருவரும் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட 3:1 என்ற அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட் டம் ஆரம்பமானது. இரு அணி வீரர்களின் ஆட்டங்களிலும் அனல் பறந்த போதும் விண் மீன் அணியைச் சேர்ந்த ரஞ்சித், அயன்குட்டி ஆகியோர் தலா ஒருகோலையும், வல்வை அணியைச் சேர்ந்த சீலன் ஒருகோலையும் போட 5:2 என்ற கோல் அடிப்படையில் வென்று முதலாவது அணியாகக் காலிறுதிக்கு முன்னே றியது விண்மீன் அணி.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும், அன்பாலயம் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக் கம் செலுத்திய திக்கம் இளைஞர் அணி 4:0 என்ற அடிப்படையில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (த-108)

## மன்னார் ஸ்டார் ஈகிள் 20/20 ; அசத்தியது சென். அன்ரனிஸ்

மன்னார், ஜூன் 12

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 20/20 கிரிக்கெட் போட்டியின் முதலாவது போட்டியில் நடப்புச் சம்பியன் சென். அன்ரனிஸ் அணியும் இந்து முன்னணி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்து முன்னணி அணியினர் முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தனர்.

இதன் பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி அணியினர் 14.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் வசந்தன் 29 ஓட்டங்களையும், ஜெகன் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் பிரதீப் 2.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 07 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 93 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்.அன்ரனிஸ் அணியினர் 13.3 பந்துப்பரிமாற்றங்களில் 04 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

துடுப் பாட்டத்தில் சுகந்தன் 45 ஓட் டங்களையும், ஜெரோன் 18 ஓட் டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் றஞ்சித் 03 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளைக்கைப்பற்றினார். (த-23)

## அந்தியேட்டி சபிண்டீகரண கிரியை அழைப்பு



### அமரர் மயிலன் கந்தசாமி

தோற்றம் 14.01.1954 — மறைவு 14.05.2014

கடந்த 14.05.2014 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.06.2014) வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் செல்வச் சந்நிதி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டு சபிண்டீகரண கிரியைகள் நாளை (13.06.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

(48924) (10)

குடும்பத்தினர்,
கிளி (மனைவி)

## அரியாலையில் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் ஜூன் 12

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையில் மின்னொளியில் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டங்கள் நாளை வெள்ளிக் கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூ நிலைய மைதானத் தில் இடம் பெறவுள்ளன என போட்டி ஏற்பாட்டளார்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## சென்.மேரிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 12



யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங்ஸ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் பள்ளிமுனை சென்.லூசியஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மரண அறிவித்தல்



### திருமதி வள்ளியம்மை கந்தையா

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளியம்மை கந்தையா நேற்று (11.06.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர்-லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் நான்காவது மகளும், பண்டாரபிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தையாவின் அன்பு மனைவியும், ஞானலட்சுமி, புவனேஸ்வரி, இரா ஜேஸ் வரி, கனகேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சி.நாகலிங்கம் மற் றும் ஜெயபாலகிருஸ்ணன், மகாதேவன், வர்ணகுலசிங்கம், காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகி யோரின் பாசமிகு மாமியும், வரதராஜன் இரட்ணேஸ்வரி (சுவிஸ்), செல்வராஜன் அருந்ததி (பிரான்ஸ்), சாந்தினி - ஜெயசோதி, வதனி, அண்ணாத்துரை (பிரான்ஸ்), றஞ்சினி பஞ்சசோதி (பிரான்ஸ்), தவலிங்கம் -கலாரதி, குணலிங்கம் சாந்தினி (சுவிஸ்), திலகதாசன் பூர்ணா, ஜெக தீஸ்வரி -பிரேமானந்தன் செல்வதாசன் சத்யா(பிரான்ஸ்), ரகுதாசன் ரசிகலா (லண்டன்), ஜெய தாசன் (லண்டன்), திவாகரன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் வனஜா கௌரி பகீரதன் ஜெயகாந்தன் (கட்டார், ஜெயதவயோகன் அமுதா (சௌதி)மற்றும் காலஞ்சென்ற வ.சிவரூபன், விஜயரூபன் (இத்தாலி), சயந்தினி - சத்தியநாதன் (சுவிஸ்), தர்சினி சிவகுமார் சசிதரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பிரசாந்த், நிதுஷன், அனோஜன் (பிரான்ஸ்), ஜெனார்த்தனன் (பிரான்ஸ்), சஞ்சீவன், அபிராஜினி, அனுராதை, திவ் வியா, துஷியா, தனுஜா, (பிரான்ஸ்), ஹரிஸன், சாருஜன், கீர்த்திகா (பிரான்ஸ்), நிதர்சனா, சௌமியா, சரணியா, வினோஜன், சபீனா, நதீனா (சுவிஸ்), கிந்துஜா, பிறேமி, அசா னிகா, மகதி (லண்டன்), சகானா, நிவேதியன், கிஷோன், விதுஷன், வைஷ்ணவி, ஜஸ்வினி, சிவநயன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2014) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(48928) (10)

தகவல்: குடும்பத்தினர்.


## கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு!!!

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் கீழ்காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| HV AC Technician Helper | 900 + OT |
| Telecom Technician Helper | 900 + OT |
| Painter Helper | 900 + OT |
| Electrician Helper | 900 + OT |
| Plumper Helper | 900 + OT |
| Welding Helper | 900 + OT |

மற்றும் சுத்திகரிப்பாளர்கள், கையுதவியாளர்கள் போன்ற இன்னும் பல வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன (முன்அனுபவம் தேவையில்லை) கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்


தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி, உணவு போன்றன இலவசம். ஒப்பந்த காலம் 2 வருடம் நீடிக்கப்படக் கூடியது. வேலை நேரம் 8 மணித்தியாலங்கள். கிழமைக்கு 6 நாட்கள் வேலை. ஏனைய நிபந்தனைகளும் விதிகளும் கட்டார் நாட்டு சட்ட திட்டங்களுக்கமைவாக. உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 15ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் ஏற்றுக்கொள்ளப்படும்.

முக்கிய குறிப்பு:- நேர்முக தேர்விற்கு சமூகமளிப்பவரகள் கடவுச்சீட்டுஇ 8புகைப்படங்கள்இசுயவிபரக்கோவைகள் ஆகியவற்றை தவறாது கொண்டுவரவும்.

உடன் தொடர்பு கொள்ள:
Lanka Voice Hotline - 077 9527575 / 076 6697789
கெப்பிடல் ரெக்ரூட்மன்ட் இன்டர்நெஷனல் (பி) லிமிடெட்
இல. 130/3/1 3 மாடி, கிறேன்பாஸ் வீதி, கொழும்பு - 14

12 JUN 2014

# உலக உதைபந்தாட்டத் திருவிழா இன்று ஆரம்பம்



2014ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிரேசிலில் ஆரம்பமாகின்றது. இன்றைய முதல் ஆட்டத்தில் பிரேசிலை எதிர்த்து குரோசியா மோதுகிறது.

இந்தப் போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு, நிறைவு செய்யப்பட்டிருப்பதாக, பிரேசில் நாட்டின் ஜனாதிபதி டில்மா ரோசெப் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் பேர்ட்டிகளின் ஏற்பாட்டுப் பணிகளின் தாமதம் குறித்து சர்வதேச ரீதியாகச் சர்ச்சைகள் எழுந்திருந்தன.

எனினும் இந்தச் சர்ச்சைகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாட்டுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்கும் நாடுகளின் கொடிகளைத் தமது நாட்டில் பறக்க விடுவதற்கு பங்களாதேஷ் அரசு தடை விதித்துள்ளது.

பங்களாதேஷில் உள்ள ஏராளமான வீடுகளில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் நாடுகளின் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

தமது நாட்டுத் தேசிய கொடியை மதிக்காத வகையில் இந்த செயற்பாடு அமைவதாக கருதியே அதிகாரிகள் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக பங்களாதேஷ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான செயற்பாடானது எரிச்சலை யூட்டுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ந)




அடிப்படை
ஆங்கிலம்
அடிப்படை ஆங்கில அறிவில்லாதவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் எழுத,வாசிக்க எளிமையாக உரையாட விரும்புவோர் வயதுவேறுபாடின்றி இணையமுடியும்.
பயிற்சிநெறி ஆரம்பம் - 16.06.2014 திங்கள்
பிரிவுகள் : காலை 08-09, 09-10, 10-11, 11-12
மாலை 01-02, 02-03, 03-04, 04-05
வாரத்தில் 3 நாட்கள் பயிற்சி இடம்பெறும்.
16.06.2014 இல் இணையும் அனைவருக்கும் ஷாம்சனின் 20 பாடப்புத்தகங்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வீடு வாடகைக்குண்டு
02, செட்டித்தெரு லேன், நல்லூரில் (சின்மயா மிசன் முன்பாக) மாடி வீடு வாடகைக்குண்டு.
(அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு : 077 869 0214, 021 222 3394
(48910)(7.6.3)

மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய
பயிற்சி நெறி
HND in PHARMACY
வயதெல்லை கிடையாது.
பகுதிநேரமாகப் படிக்கலாம்.
வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு.
LAVA HOSPITALS (48916)(7.6.3)
120, Temple Road, Jaffna.
(Tel : 077 316 4617/021 222 4333)


## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை இராசேஸ்வரன்

[இளைப்பாறிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர், முன்னாள் இயக்குநர், சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் (INS-GD)]



கரணவாய் வடக்கு, மாவிலைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை இராசேஸ்வரன் 10.06.2014 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பொன்மலரின் (இயக்கு நர்- சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் (INS-GD சங்கமம், தர்மகர்த்தாவும் முகாமையாளரும்- மூளாய் வதிரன் புலோ ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோயில்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை- நாகரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமசுவாமிப்பிள்ளை தம்பையா- சிவபாக்கியவள்ளிநாச்சன் தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், சண்முகலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் இரத்தினாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசேஸ்வரி, சறோஜினிதேவி, சிவப்பிரகாசம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராமச்சந்திரன் (பொறியியலாளர்), விக்னராசா (இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி), விக்னராணி, மகாராணி, அழகராசா (பட்டயக்கணக்காளர்-கனடா), பவளமலர் ஆகியோரினதும் மைத்துனரும், யசோதா, லலிதா, நல்லமாப்பாணர், பகீரதன் ஆகியோரின் சிறிய தந்தையும், சியாமளா, உதயசங்கர், சுமந்திரன், நிரஞ்சனன், அனுஷா, கவிதா, கிருஸ்ணா ஆகியோரின் பெரிய தந்தையும், கோமதி, ஹரன், நிலானி,கலானி, சங்கீதா, சவீந்திரா, சஞ்சேந்திரா,அர்ச்சனா, அனந்தன் ஆகியோரின் ஆசை மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.06.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மூளாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையடி,
யாழ்.காரைநகர் பிரதான வீதி,
மூளாய், சுழிபுரம் (48918)(5.6.3)

தகவல்:
இ.பொன்மலர் (மனைவி)
மற்றும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா தம்பிராசா



மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா தம்பிராசா நேற்று முன்தினம் (11.06.2014) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவகுருநாதன், மற்றும் சிவராசா (விநாயகர் ஸ்ரோர்ஸ், சண்டிலிப்பாய்), தருமரத்தினம் (சென்றல் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்) குணராசா (சிவாஷ் மோட்டோர்ஸ் மானிப்பாய்), விமலாதேவி (புங்குடுதீவு), கமலாதேவி, மல்லிகாதேவி (ஆனைக் கோட்டை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகமுத்து, மற்றும் புஸ்பராணி, கலாவதி, சறோஜாதேவி, சறோஜதேவி பேபி, நாகராசா (அதிபர்- புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயம் ), சிவசக்திநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், யாழினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஜெயகாந்தன் (மக்கள் வங்கி உத்தியோகத்தர்), கமலினி (லண்டன்),இளங்கோவன் (லண்டன்), வாசுகி- உதயராஜ் (கிராம உத்தியோகத்தர்), உமாறசிகா - ராஜ்குமார் (குமரன் ஸ்ரோர்ஸ், நல்லூர்), உமாறமணன் (றமணன் ஸ்ரோர்ஸ், சண்டிலிப்பாய் மத்தி), விஜிதா, பால்ராஜ் (பானு மோட்டோர்ஸ், சுன்னாகம்), புாணுஜா (2 ஆம் வருடம் அழகியற் பீடம்,மட்டக்களப்பு), துஷாறதன், சிவஷ்கர், சிவசாந், பிரதீபன் (மக்கள் வங்கி),பிரசாந்,கிந்துஜா, நிரோஜன் ,கஜறதன், பத்மாஜினி, சுபாசினி, சாங்கஜன், சிவதர்சினி, கஜரூபன்,சிவதர்சின், சிவதாரணி, வசிகன், ஜம்பவன், கஜிதரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் , சாகித்தியா, சரணுஜா,இலக்கியா, துளசிகா,லக்சிகா,அட்சரன் ஆகி யோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2014) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
சண்லிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P 0214907147

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.